# ஜேம்ஸ்பாண்ட் சங்கர்

நீலமணி



காயத்ரி பப்ளிகேஷன்

7-00
10-7-98

# ஜேம்ஸ் பாண்ட் சங்கர்

[நீதி, நேர்மைக்காகப் போராடிய அன்பும், பண்பும் நிறைந்த ஓர் வீரமிக்க மாண வனைப் பற்றிய சுவையான நாவல்]

LEO CIRCULATING LIBRARY
PHONE
DATE
37 MANDAVELI ST-MS-28

**நீலமணி**

GAYATHRI

காயத்ரி பப்ளிகேஷன்
26-பி, வேதாசல கார்டன்ஸ்
மந்தைவெளி, சென்னை-600 028.

★ பாரதி தின வெளியீடு

முதற் பதிப்பு : டிசம்பர் 11, 1984

# ஜேம்ஸ் பாண்ட் சங்கர்

(சிறுவர் நாவல்)

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | JAMS BOND SANKAR |
| Subjict | : | Children Novel |
| Author | : | NEELAMONEY |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | December 11, 1984 |
| Copyright Holder | : | JANAKI NEELAMANI |
| Paper Size | : | Double crown White Printing |
| Paper used | : | 10.9. NiZAM |
| Size of the Book | : | 18×12,5 C.M, |
| Type Points used | : | 12 Pt. |
| No of Pages | : | 144 |
| Cover Design | : | P. N, Anandan |
| Printer | : | Veerapathirar Achagam Triplicane, Madras-600 005. |
| Publisher | : | Gayathri Publication 26, B, Vedachala Gardens, Mandaveli, Madras-28. |
| Price | : | Rs. 12-00 |

Our greatful thanks to M. S. A Cell of Bank of Baroda T. Nagar, Madras fo their help in brining out this Children Novel.

# பதிப்புரை


அன்பும், பண்பும், அறிவும், நிறைந்த ஓர் அற்புதமான வீரமாணவனைப் பற்றிச் சித்தரிக்கும் அருமையான நாவல் இது.

சங்கர் ஓர் இலவசப் பள்ளியில் படிக்கும் மாணவன். அந்த ஊரில் உள்ள ஒரு ரௌடியின் துணையோடு அக்கிரமங்கள் பல புரியும் சமூகப் பிரமுகர் ஒருவரின் சுய உருவத்தை வெளிப்படுத்தி நீதியின் முன்னால் கொண்டுவந்து நிறுத்தி வெற்றி கொள்கிறான்.

இந்நூலை எழுதிய ஆசிரியர், குழந்தைகளுக்காக பல நாவல்கள் எழுதிப் புகழ் பெற்றவர். அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதி 1978ல் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய இலக்கியப் போட்டியில் ''ஏ.வி.எம்''மின் அறக்கட்டளை முதல் பரிசான தங்கப் பதக்கத்தையும்; 1983ல் எழுதிய ''தென்னை மரத் தீவினிலே'', என்னும் சிறுவர் நாவலுக்காக ''ஏ. வி. எம்''மின் வெள்ளிப் பதக்கத்தையும் பரிசாகப் பெற்றவர்.

சிறுவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெறும் இவரது இந்த அருமையான நாவலை எங்கள் பதிப்பகத்தின் மூலம் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

ஜானகி நீலமணி



# ஜேம்ஸ் பாண்ட் சங்கர்

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. யானையுடன் மோதிய பூனை | 5 |
| 2. ஜல்.... ஜல்.... ஜல்.... | 11 |
| 3. சதியாலோசனை | 18 |
| 4. பூஜை வேளையில் கரடி | 25 |
| 5. நத்தை வயிற்றில் முத்து | 33 |
| 6. நடுத்தெருவில் ஒரு நாடகம் | 42 |
| 7. விளையாட்டுப் போட்டி | 50 |
| 8. ரேக்ளா சவார் | 58 |
| 9. மலை போல்வந்த விபத்து | 67 |
| 10. ஆஸ்பத்திரி வாசம் | 76 |
| 11. பெட்டிக்குள் என்ன? | 86 |
| 12. போலீஸ் கெடுபிடி | 95 |
| 13. முரட்டுப் பிடி | 103 |
| 14. கிழவியின் கோபம் | 109 |
| 15. சைனா டீ! | 116 |
| 16. "ஹலோ, இன்ஸ்பெக்டரா?" | 124 |

# 1. யானையுடன் மோதிய பூனை

சந்தைப்பேட்டையின் சந்தடி மிக்க சில கடைத் தெருக்களையெல்லாம் கடந்து நேராக ஆற்றங் கரையின் இடது பக்கம் திரும்பினால் அங்கே ஒரு டூரிங் சினிமாக் கொட்டகை இருக்கும். நாலா பக்கங்களிலிருந்தும் வரும் ரோடுகள் சங்கமம் ஆகும் இடத்தில் அந்த பேபி டாக்கீஸ் இருந்தது.

ஏழுமணிக்குமேல் ஆரம்பமாகிற ஒரு பழைய தமிழ்ப்படத்திற்கு, மாலை ஐந்து மணியிலிருந்தே போவோரையும் வருவோரையும் வருந்தி வருந்தி அழைப்பதுபோல் ரிகார்டு பாடல்கள் முழங்கிக் கொண்டிருக்கும். அன்று ஒரு புதுப்படம் ஆரம்ப மானதால் அளவுக்கு மீறிக் கூட்டம் கூடியிருந்தது.

டூரிங் டாக்கீஸை ஒட்டியுள்ள நாயர் டீக்கடை களைகட்டிவிட்டது. கதவில்லாத அந்த டீக்கடையில் நெரிசல் காரணமாக, கண்ணாடி கிளாசுக்கும் ஸ்பூனுக்கும் கைகலப்பு மும்மரமாகக் கேட்கத் தொடங்கியது.

டீக் கடைக்குப் பக்கத்தில் இருந்த கைப்பிடி மதகில் உட்கார்ந்து ரிகார்டு கேட்டுக் கொண்டிருந்த சங்கரும் அவன் நண்பர்களும் இந்தக் காட்சியை

வெகுவாக ரசித்தார்கள். அத்துடன் பாவாடை வஸ்தாதை, நாயர் வெகுவாக உபசரித்துக் காக்காய் பிடிப்பதைக் காண அவர்களுக்குச் சிரிப்பாக வந்தது.

அன்று தியேட்டரில் டிக்கெட் கொடுக்க ஆரம்பித்த வெகு விரைவிலேயே எல்லா வகுப்பு டிக்கெட்டுகளும் விற்றுவிட்டன. இதனால் ஏமாற்றம் அடைந்த கூட்டத்தினர் மனமின்றித் திரும்பிக் கொண்டிருந்தார்கள். 'பிளாக்'கில் வாங்கி அநுபவ முள்ளவர்கள், "வஸ்தாது கையில் பத்து டிக்கெட் டாவது இல்லாமலா போகும்? சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம்" என்று வஸ்தாதை நெருங்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"டேய், இன்னிக்கு வஸ்தாதுக்கு வேட்டை தாண்டா!" என்றான் சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்ட சங்கரின் நண்பன் கோபு.

"ஏண்டா சங்கர், நாம்கூட குரூப்பா இந்தச் சைடு பிஸினஸ் பண்ணினா என்ன? பாக்கெட் மணி கிடைக்கும். வீக்லி ஒன்ஸ் டவுனுக்குப் போய் இங்கிலீஷ் படம் பார்த்துவிட்டு வரலாம்."

"ஆமாண்டா, டிக்கெட் என்னமோ ஆறுக்கு மேலேதான் குடுக்க ஆரம்பிக்கிறாங்க. ஸ்கூல் விட்டு வந்தாக்கூடப் போதும், 'ப்ளென்டி'யா டயம் இருக்கு. நீ என்ன சொல்றே சங்கர்? நாளையி லிருந்தே பிஸினஸ் ஆரம்பிச்சிடுவோம். கூட்டத்தில் முண்டியடிக்கிற 'ஜாப்' என்னுடையதாகவே இருக் கட்டும். நான் பார்த்துக்கறேன்!" என்றான் பாலு.

"தூ, இது ஒரு பிழைப்பா!" என்று சங்கர் காறித்துப்பினான். இதைக் கண்ட மாணவர்கள் அசந்து போனார்கள்.

"பார்த்தியாடா, பார்த்தியா, ஒரு நிமிஷத்திலே நம்மோடெ அத்தனை ஐடியாவையும் போட்டு உடைச்சு எறிஞ்சிப்பிட்டான் இந்தச் சங்கர்." இதைக்கூறி முடிப்பதற்குள் பாலுவுக்குக் கண்ணீரே வந்துவிடும் போலிருந்தது.

"இந்தப் பிசினஸ் பண்ணினா என்ன? இதுவு ஒரு விதத்தில் 'சோஷியல் ஹெல்ப்'தானே? கூட்டத்திலே முண்டியடிச்சு வாங்க முடியாதவங்க எத்தனை பேர் இருப்பாங்க? இத்தனை தூரம் நடந்து வந்து கௌன்டர் மூடினதும் ஏமாந்து போறவங்க எத்தனை பேர் இருப்பாங்க! இவங்களுக்கெல்லாம் நாம உதவிதானே செய்யப் போறோம்? அதுக்கு லேபர் வாங்கினாத் தப்பா?" என்றான் குமார்.

"சுள்ளி பொறுக்கிச் சம்பாதிக்கலாம்" என்று சங்கர் கூறினான். வேறு ஒன்றும் விளக்கம் கூறவில்லை. சங்கர் அவ்வளவுதான் பேசுவான். மற்றவர்கள்தான் அதை விளக்கம் செய்து கொள்ள வேண்டும்.

"ஆமாம்! நீ எல்லாத்துக்கும் இப்படித்தான் பேசுவே. பெரிய வஸ்தாதாம்—அவரே செய்யறாராம்."

''அது வஸ்தாத் செய்ய வேண்டிய தொழில் தான். இருட்டினதும் தண்ணி போட அவனுக்குக் காசு வேணும். ஊரையடிச்சு உலையிலே போட்டுக் கிறவனுக்கு இது ஒரு சரியான பொழைப்பு. உனக்கும் எனக்கும் இந்த 'ப்ளாக்' வேலை ஒத்து வராது. வந்தாலும் கௌரவமில்லை. அதுக்காகத் தான் சங்கர் இப்படிச் சொல்றான் போலிருக் குடா!'' என்று சேகர் சங்கரின் கருத்தை ஊகித்தவன் போல் பேசினான். அப்போது—

டீக்கடையிலிருந்து ஒரு பலமான கனைப்புக் குரல் கேட்டது. அது வஸ்தாத் பாவாடையி னுடைய குரலேதான்.

''ஏண்டா சங்கர், நாம இப்போ பேசிக்கொண் டிருந்ததெல்லாம் வஸ்தாத் காதிலே விழுந்திருக் குமோ?'' பாலு பயந்தபடியே கேட்டான்.

''விழட்டுமே'' என்றான் சங்கர் சற்றும் பயப் படாமல். ஆனால் வஸ்தாத் இதொன்றையும் கவ னித்ததாகத் தெரியவில்லை.

டீக்கடை வாசலில் இருந்த ஸ்டூல்மீது ஒன்றைக் காலை ஊன்றிக்கொண்டு நின்றபடி இடக்கையி லிருந்த பீடியை ஒரு 'தம்' ஆழ இழுப்பதும், வலக் கையிலிருந்த கிளாசிலிருந்து நாயர் ஸ்பெஷலாகப் போட்டுக் கொடுத்திருக்கும் சைனா சாயாவை ஓர் உறிஞ்சு உறிஞ்சிச் சுவைப்பதுமாக இருந்தான் பாவாடை.

சாயாவைக் குடித்து முடித்த பாவாடையின் கையிலிருந்த கிளாஸை டீக்கடை பையன் மிகுந்த மரியாதையுடன் வாங்கிக் கொண்டு போனான். வஸ்தாத் மீண்டும் ஒரு பீடியை எடுத்துப் பல் விடுக்கில் செருகி அலட்சியமாக வத்திப்பெட்டியை இடுப்பிலிருந்து எடுத்து ஓர் உரசு உரசியபோது அது துள்ளிக் குதித்துச் சங்கரின் அருகில் வந்து விழுந்தது. அருகில் இருந்த மாணவர்கள் 'கொல்' லென்று சிரித்துவிட்டார்கள்.

சுற்றிலும் விழிகளைச் சுழலவிட்டான் வஸ்தாத். பல ஜோடிக் கண்கள் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது. குனிந்து வத்திப் பெட்டியை எடுப்பது அப்போது தன்னுடைய கௌரவத்துக்கும், வஸ்தாத் தன்மைக்கும் இழுக்கு என்பது போல் நினைத்து, ''டேய், அந்த வத்திப் பெட்டியை எடுடா!'' என்று சங்கரைப் பார்த்துச் சவடாலாகக் கூறினான் பாவாடை.

சங்கர் அலட்சியமாகச் சிரித்தான்.

''டேய் சோமாறி, முழிக்கிறியே! உன்னைத் தாண்டா சொல்றேன். எடுடா வத்திப் பெட்டியை!''

சங்கர் அப்படியே எழுந்து நின்றான்.

''என்னடா முறைக்கிறியே! சொல்றது காதிலே விழல்லே? ஏ களுதே! எடு! உன்னைத்தான்.''

சங்கருடைய அலட்சியச் சிரிப்பும், பார்வையும் பாவாடையின் ஆத்திரத்தைத் தூண்டியது, ஓங்கி ஒரு அறை விடலாமா என்று யோசித்தான்.

ஆனாலும் —

பள்ளிக் கூடத்துப் பையன்கள்! நாளைக்கு விவகாரம் முற்றி வேறு விதமாகத் திரும்பி விட்டால் ஊரில் கேவலமாகத் தன் பெயர் அடிபடும் என்கிற எண்ணத்தில் கோபத்தைச் சற்று அடக்கிக் கொண்டு—

"தம்பி, உன்னைத்தான் சொல்லறேன்; அந்த வத்திப் பெட்டியை எடுத்துக் குடு", என்று சங்கரைப் பார்த்து கம்பீரமாகக் கூறினான். ஆனால் சங்கர் அதை லட்சியமே செய்யவில்லை.

உழைத்துச் சாப்பிட விரும்பாமல் வெறும் உடம்பைக் காட்டியே ஊரை மிரட்டி மிரட்டி வயிறு வளர்க்கும் வஸ்தாதை கிராமத்திலுள்ளவர்கள் எல்லோரும் வணங்குவதை அவன் கண்டிருக்கிறான். அதற்காக?....அவனும் பயப்பட வேண்டுமா என்ன?

# 2. ஜல் ஜல் ஜல்...

இதற்குள் மூர்த்தி குனிந்து 'போகிறது' என்று அதை எடுத்துக் கொடுக்கப் போனான். சங்கர் சட்டென்று திரும்பி, ''ஊஹும்'' என்று தடுத்தான்.

பாவாடைக்குக் கோபம் பொத்துக் கொண்டது.

''எலே, நீ எடுக்காதேடா! அவனையே எடுத்துக்கொடுக்கச் சொல்றேன், பாரு இப்போ'' என்று மூர்த்தியிடம் சொல்லிவிட்டு, சங்கரைப் பார்த்து, ''உம் எடுடா!'' என்று மிரட்டினான்.

''ஏன்?''

பாவாடை ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்து எழுந்தான்.

''ஏன்னா கேக்கறே? ஊம்....?''

''கேட்டா என்ன? நீதானே கீழே போட்டே?''

பாவாடைக்கு அதற்குமேல் பொறுக்கவில்லை. காலை அலட்சியமாகத் தூக்கிச் சங்கரை உதைக்கப்போனான்.

அடுத்த கணம் – காலைத் தூக்கிய பாவாடை அப்படியே குப்புற விழுந்தான். தூக்கிய காலைப் பிடித்து அப்படியே வாரி விட்டுவிட்டான் சங்கர்.

யாரும் இப்படி நடக்குமென்று எதிர்பார்க்கவில்லை. சோனி சங்கர் எங்கே? குண்டு வஸ்தாது

பாவாடை எங்கே?. பாவாடை எழுந்திருப்பதற்குள் கூட்டத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் ஏதாவது விபரீதம் நிகழ்ந்துவிடப்போகிறதே என்று வத்திப்பெட்டியை வஸ்தாதிடம் எடுத்துக் கொடுக்கப் போனார். உடனே—

வஸ்தாத் அந்த ஆளின் முதுகுச் சட்டையைப் பிடித்து அப்படியே அலாக்காகக் கோழிக் குஞ்சைப் போலத் தூக்கி எறிந்தான். எட்டப்போய் விழுந்த அவர் உடனே எழுந்து வந்து, ''ஏண்டா தம்பி, இவ்வளவு பிடிவாதம்? பெரியவங்களுக்கு உதவி பண்ணினாப் புண்ணியம் உண்டுடா. வத்திப் பெட்டியை நீயே தான் எடுத்துக் கொடுத்தால் குறைஞ்சா போயிடும்?'' என்று சங்கரைப் பார்த்து இதோபதேசம் செய்தார்.

''இவனா பெரியவன்? பொறுக்கி!'' என்றான் சங்கர்.

இதைக் கேட்டதும் நெஞ்சு புடைக்கப் பாய்ந்து வந்த பாவாடை புறங்கையால் சங்கரின் கன்னத்தில் ஓர் அறைவிட்டு, காலால் எட்டி உதைக்கப்போனான்.

அவ்வளவுதான்; மறுபடியும் வஸ்தாதின் கால் சங்கரின் பிடியில் அகப்பட்டுக் கொண்டுவிட்டது. இரும்புக் காலை ஒரு பிஞ்சுக்கரம் அசைக்க முடியாமல் மர்மமாகப் பிடித்து நிறுத்திவிட்டது.

''ஐயோ, ஐயோ! உயிர் போகிறதே! விடுடா விடுடா!'' என்று பாவாடை அலறினான்.

காசில்லாமல், டிக்கெட் வாங்காமல், ஓசியிலேயே ஒரு கூட்டம் இந்தக் குஸ்திக் காட்சியைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தது. பாவாடையோ, சங்கரின் பிடியில் துடித்துக் கத்திப் புறண்டு கொண்டிருந்தான். சுற்றியிருந்தவர்கள் தங்கள் கண்களையே நம்பமுடியாமல், இதைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

"ஜல்......ஜல்....ஜல்...!"

பட்டாமணியகாரரின் இரட்டை மாட்டு வண்டி அது! மாடுகள் இரண்டும், தலைக் கயிற்றுக்கு அடங்காமல்முரண்டிக்கொண்டு அங்குவந்து நின்றன.

சங்கர் திரும்பிப் பார்க்கவில்லை. வண்டியில் பட்டாமணியகாரரும் அவர் மகள் வசந்தியும் இருந்தார்கள். கலகல வென்று மெல்லிய சிரிப்பொலி கேட்டது. பட்டாமணியம் பதறிப் போனார் வஸ்தாது புரண்டுகொண்டிருந்ததைக் கண்டு வசந்திக்கு மகிழ்ச்சி தாளவில்லை.

"சங்கர்!... போதும்!... போதும்! விட்டுவிடு!" என்று வண்டியிலிருந்தபடியே கத்தினார் அவர்.

பழக்கமான அந்தக் குரலைக் கேட்டுச் சங்கர் பிடியைத் தளர்த்திவிட்டுத் திரும்பிப் பார்த்தான். அருகே பட்டாமணியம் நின்று கொண்டிருந்தார். வண்டியிலிருந்து வசந்தி வைத்த கண் வாங்காமல் தன்னையே பெருமையுடனும் பூரிப்புடனும் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான் சங்கர்.

மாமிசமலைபோன்ற வஸ்தாது — தண்டால் எடுத்துத் தண்டால் எடுத்துச் சேர்த்து வைத்திருந்த தன் முண்டாவைக் காட்டியே அல்லவா இத்தனை காலம் ஊரை ஏமாற்றி வந்திருக்கிறான்! 'ஒரு சின்னப் பையன், நிமிஷ நேரத்தில் கழுதை மாதிரிப் புரட்டி எடுத்து விட்டானே!' என்று கூடியிருந்தவர்களுக்கு வியப்பு.

பட்டாமணியத்துக்கு முன்பு மீண்டும் தன்னுடைய வீரத்தை நிலைநாட்ட எண்ணங் கொண்ட பாவாடை, "டேய் கழுதை! என்ன செய்யறேன் பாரு!" என்று ரோசத்தோடு முஷ்டியை முறுக்கிக் கொண்டு சங்கரின் முகத்தைக் குறிவைத்தான்.

ஆனால் சங்கர் வெகு அலட்சியமாகத் தன்னுடைய இடது கையினாலேயே ஒரு தட்டுத் தட்டி விட்டான்,

"ஐயோ....அம்மா...." என்று, இரும்புத் தண்டவாளத்தினால் அடிபட்டதுபோல் வஸ்தாது அலறினான்.

"வெல்டன் சங்கர்..."

"வெரி குட் சங்கர்!"

"கிவ் ஒன் மோர் ஹிட் சங்கர்!" என்று நாலா பக்கங்களிலிருந்தும் சங்கரின் மாணவ நண்பர்கள் உற்சாகக் குரல் எழுப்பினார்கள்.

தாக்குண்ட புலியைப்போல் பாவாடை, சங்கர் மீது பாய்ந்தான். சங்கர் உடனே 'கபார்' என்று

அப்படியே குனிந்து, வஸ்தாதின் வயிற்றில் அநாயாசமாக ஒரு குத்துவிட்டான்.

அவ்வளவுதான்; பாவாடை நெரிப்பில் விழுந்த புழுப்போல ''ஐயோ!....ஐயோ!'' என்று வயிற்றைப் பிடித்துக்கொண்டு அலறினன்; புரண்டான்.

இதையெல்லாம் கண்ட பட்டாமணியத்துக்குத் தலையே சுழல்வதுபோலிருந்தது. அவரால் இந்தக் காட்சியை நம்பவேமுடியவில்லை. ஒரே சமயத்தில் பத்துப்பேருக்குப் பதில் சொல்லும் சண்டியர் பாவாடை, ஒரு சிறு பையனிடம் தோற்றுத் தரையில் கிடந்து புரளுகிருனே!

முக்கிமுனகிக் கொண்டே எழுந்த பாவாடை ''எஜமான்'' என்று ஏதோ பேச வாயெடுத்தான். ''எல்லாம் அப்புறம் பேசிக் கொள்ளலாம்; முதலில் வண்டியில் ஏறு'' என்று அவர் அதட்டினுர்.

வைத்த கண் வாங்காமல் சங்கரையே ஆச்சரியத் தோடும் மகிழ்ச்சியோடும் பார்த்துக் கொண்டிருந்த வசந்தி, அப்பா வருவதைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். பாவாடை மெல்ல ஓர் எம்பு எம்பி வண்டியோட்டியின் பக்கமாக முன் புறத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

வழியில், ஆதியோடந்தமாகப் பாவாடை பட்டாமணியத்திடம் விஷயத்தையெல்லாம் கூறக்கூட இருந்த வசந்தி அக்கறை இல்லாதவள் போல் அனைத்தையும் கவனித்துக் கொண்டே வந்தாள்.

‘‘உனக்குச் சமமா உள்ளவங்ககிட்டே நீ இப்படி அடி வாங்கித் தோத்துப்போனா பரவா யில்லை; ஒரு பொடிபயல்கிட்டே, நடுத்தெருவிலே இப்படி அவமானப்பட்டுப் போனியே! வெக்கமா யில்லியா?...’’ என்று ஆத்திரத்துடன் கேட்டார் பட்டாமணியம்.

‘‘அதுதான் எசமான் எனக்கு ஒண்ணும் புரியல்லே. எவ்வளவோ சண்டியர்களை, அடியாட் களை, பயில்வான்களை எல்லாம் என்னோட இத்தனை வருஷ சர்வீஸ்லே பதம் பார்த்து ஓட ஓட விரட்டியிருக்கேன்....’’ பாவாடை தன் சுய புராணத்தை அவிழ்த்துவிட்டான்.

‘‘அதெல்லாம் சரிதான்....உன் பழங்கதையை யெல்லாம் இப்போ யார் கேட்டா? ஒரு பள்ளிக்கூடப் பையன் உன்னை ஜகா வாங்க வச்சுப்பிட்டானே.... அது என்ன சின்ன விஷயமா?’’

‘‘சின்ன விஷயமா எனக்கும் தோணல்லே எசமான். பையன் பிடியெல்லாம் தெரிஞ்சு வெச் சிருக்கான். காலாலே நான் அப்படி எட்ட உதைச்ச துக்கு, வெறொரு பயல்னா பஞ்சாப் பறந்து போயிருப்பான். ஆ ன ா....இவன் என்காலைப் பிடிச்சு, குதிகால்லே ஒரு நட்டுவாக்காலிப் பிடி போட்டு ஏழாவது நரம்பிலே ஒரு சிலந்திவலை பின்னினான் பாருங்க—’’

‘‘தூ—நீ ஒரு வஸ்தாதா?’’ என்று ஆத்திரத் தோடு கேட்டார் பட்டாமணியம்.

வசந்தியும் வண்டிக்காரனும் மனத்துக்குள்ளேயே சிரித்துக்கொண்டார்கள்.

பட்டாமணியத்துக்கு ஒரு புறம் வருத்தமாகவும், மறுபுறம் ஆத்திரமாகவும் வந்தது. பாவாடை அவருடைய ஆள். அவனை அவர் கைக்குள் போட்டுக்கொண்டு, ஊரை மிரட்டி எத்தனையோ காரியங்களைச் செய்துவருபவர். சந்தைப்பேட்டையில் தமக்கு மிஞ்சி ஒரு பெரிய மனுஷன் இருக்கக்கூடாது என்று எண்ணினார். அதனால்தான் அவருக்கு அத்தனை வேகம் வந்தது.

அத்தனை கூட்டத்துக்கு மத்தியில் சந்தைப் பேட்டையில் தன் கண்ணெதிரே கண்ட காட்சி அவர் மனதை வெகுவாகப் பாதித்து விட்டது.

'பாவாடைக்கு ஒரு போட்டியா?'—

தன்னுடைய எதிர்காலத் திட்டங்கள் ஒரு கேள்விக்குறியாக எழும்பி நிற்பது போல் அவரை பயமுறுத்தின.

# 3. சதியாலோசனை

தாயுமானவர் உயர்நிலைப் பள்ளி சமீபத்தில் தான் சந்தைப்பேட்டையில் உருவாயிற்று. இதை உருவாக்க முன் நின்றவர் தேசத் தொண்டரும், பழுத்த சிவபக்தருமான மிராசுதார் சந்தானம். அது பட்டாமணியத்துக்குப் பிடிக்கவில்லை.

அதனால், பல தனவந்தர்களை உதவி செய்ய வொட்டாமல் ரகசியமாகப் பட்டாமணியம் கலைத் தார். பிறகு அவராகவே வலுவில் சந்தானத்திடம் சென்று தம்முடைய பெயரைப் பள்ளிக்குச் சூட்டுவ தானால், நிதி திரட்ட ஏற்பாடு செய்வதாகக் கூறினார். இதையெல்லாம் கண்டு வெறுப்புற்ற சந்தானம், தம்முடைய சொத்துக்களில் ஒரு பகுதி யை விற்று, ஏகபோகமாக அவரே அந்தத் தருமப் பள்ளியைத் தாயுமானவர் பெயரில் கட்டி முடித்து விட்டார்.

அதுமட்டுமல்ல; அந்தப் பள்ளியில் படிக்கும் ஏழை, அநாதைக் குழந்தைகளுக்கு இலவச விடுதி யொன்றையும் கட்டி, உணவும் உடையும் கொடுக்க வும் வழி செய்தார்.

சந்தானத்தின் தரும இல்லத்தில் படிக்கும் சங்கரிடம்தான் பாவாடை இன்று தோற்றுப்

போனான். சங்கரிடம் பாவாடை தோற்றது, சந்தானத்திடம் தாம் தோற்றதுபோல ஒருவித வெறியையே பட்டாமணியத்தின் உள்ளத்தில் தூண்டிவிட்டு விட்டது.

எதையோ நினைத்துக் கொண்டவர்போல், பாவாடையை அழைத்து ரகசியமாக, ''இன்று இரவு சரியாகப் பத்து மணிக்கு நம்ம வீட்டுக்கு வா!'' என்று உத்தரவு பிறப்பித்தார். பாவாடையும், 'சரி' என்று தலையை அசைத்தான்.

'இன்று இரவு ஏதோ விபரீதம் நிகழப்போகிறது; நாம் எப்படியாவது அதைத் தெரிந்துகொண்டு எவ்வித ஆபத்தும் நேராமல் தடுக்க வேண்டும்' என்று வசந்தி உறங்காமலே பக்கத்து அறையில் ஒளிந்து காத்திருந்தாள்.

இரவு மணி பத்து—

குறிப்பிட்டபடி பாவாடை வந்துவிட்டான். அவனைத் தம்முடைய அறைக்கு அழைத்துச் சென்ற பட்டாமணியம் தம் திட்டத்தை விளக்கினார். வஸ்தாது அதைக் கேட்டுவிட்டு மிகவும் உற்சாகத்துடன், ''அப்படியே செஞ்சு, பூண்டோடு அழிச்சுப் பிடறேனுங்க!'' என்று வாக்களித்தான். கேட்டுக் கொண்டிருந்த வசந்தியின் உள்ளத்தில், ஒரு பெரும் இடியே விழுந்துவிட்டாற் போலிருந்தது. இங்கே

வஸ்தாதை வண்டியில் ஏற்றிக் கொண்டு பட்டாமணியம் சென்ற பிறகு அங்கே ஓர் அசாதாரண அமைதி நிலவியது. ஆனால் அந்த அமைதி அதிக நேரம் நீடிக்கவில்லை.

சங்கரின் நண்பர்ககள் அனைவரும் கூடி அவனை அப்படியே அலாக்காகத் தூக்கித் தோள்மீது வைத்துக் கொண்டு, ''விக்டரி ஃபார் சங்கர்! சங்கருக்கு ஜே!'' என்று கூத்தாடினார்கள். டீக்கடை நாயர் சங்கரை அப்படியே கட்டித் தழு வியபடி கடைக்குள் அழைத்துச் சென்றான். ஸ்பெஷல் பன்னும் டீயுமாகச் சங்கரின் நண்பர்கள் எல்லோருக்குமே நாயர் ஒரு டீபார்ட்டி கொடுத் தான். ஆமாம்! வஸ்தாது பாவாடையானால் என்ன; சோனிச் சங்கரானால் என்ன? பலசாலி யைத் தன் கைக்குள் போட்டுக்கொள்ளவேண்டும்; தன் கடையில் கலாட்டா ஏதும் ஏற்படாமல் தொழிலை நடத்திக்கொண்டு போகவேண்டும்! இதுதானே நாயருடைய பாலிஸி!—

ஆனால் நாயருடைய அழைப்பைச் சங்கர் ஏற்றுக் கொள்ளவில்லை.

''நான் என்ன வஸ்தாதா?'' என்று மறுத்து விட்டான்.

''டேய் சங்கர், வஸ்தாதுன்னா என்னடா அர்த்தம்? பூகோள டீம் மாதிரி இருந்துட்டாப் போதுமா? பேர் வாங்கின வஸ்தாதையே புரட்டி எறிஞ்சிருக்கியே.... இப்போ நீ தாண்டா வஸ்தாத்!'' என்றான் மூர்த்தி.

''ஆமாம்...சங்கர்! நீ வஸ்தாத் மட்டுமல்ல; வஸ்தாத்கி வஸ்தாத்!'' என்றான் பாலு.

உடனே நாயர், ''ஆ! அதே. இப்போள் ஈ குட்டி பறஞ்ஞதாணு சரி! சங்கர்ஜி, நிங்ஙள்

'வஸ்தாத்கி வஸ்தாத்' தன்னே; ஞான் வளரே ஆசையோடு விளிக்குன்னதே, நிங்ஙள் மறுக்கான் பாடில்லா. என்றே கடைக்குவந்நு, ஞான் என்றே கையால் இட்டு கொடுக்குன்ன ஒரு சிங்கள் டீ யெங்கிலும் குடிக்கணம்!'' என்று கெஞ்சினான்.

''டேய் சங்கர்...நாயர் இவ்வளவு ஆசையோடு கூப்பிடறபோது மறுக்காதேடா!''

''ம்ஹ்ம்...'' சங்கர் அழுத்தலாகச் சிரித்தான்.

''டேய், உனக்காக இல்லா விட்டாலும், எங்களுக்காகவேனும் நாயருடைய அழைப்பை ஏத்துக்கோடா. நீயும் வஸ்தாதும் சண்டை போட்டதைப் பார்த்ததிலேயே மத்தியானச் சாப்பாடெல்லாம் ஜீரணமாகி வயிற்றைப் பசி கிள்ளறதுடா....'' என்று ரகசியமாய்க் கூறினான் ராமு. சங்கர் ஒருவாறு ஒப்புக் கொண்டான்.

பிளேட்டில் டீக்கடைப் பையன் கொண்டு வந்து போடப் போட பிஸ்கட்டையும் பன்னையும் நண்பர்கள் தீர்த்துக் கட்டினார்கள்.

நாயர், தன் கைப்படவே ஸ்பெஷல் டீயைக் கலந்துகொண்டு வந்து சங்கரிடம் கொடுத்துக் குடிக்கும்படி உபசரித்தான். சற்று முன்பு வஸ்தாதுக்குச் செய்த மரியாதைகளை மிஞ்சுவதாக இருந்தது அது.

''என்றே பொன் ஐயப்பா, ஈ கொச்சு கரம் ஆளிய ஜீவனெ எந்து பாடு படுத்திக்களஞ்ஞு?''

என்று கூறியபடி சங்கருடைய இரு கைகளையும் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

சங்கர் நாயரிடமும், மற்றவர்களிடமும் நன்றி தெரிவித்துவிட்டுப் புறப்பட்டான்.

மிராசுதார் சந்தானத்தின் 'சம்பந்தர் தரும உணவு விடுதி'யில் சங்கரைப் போலவே தங்கிப் படிக்கும் குமாரைத் தவிர, மற்ற நண்பர்கள் எல்லாம் சங்கரிடம் விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டார்கள்.

சங்கரும் குமாரும் ஒருவரை யொருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே சம்பந்தர் ஹாஸ்டலை அடைந்தார்கள். அவர்கள் மனத்தில் லேசான பயம் தட்டியிருந்தது. இத்தனை நாட்களில் அவர்கள் விடுதிக்கு இப்படி நேரம் கழித்து வந்ததே இல்லை.

இன்று, சங்கரும் குமாரும் ஹாஸ்டலுக்குள் நுழையும் போதே பிரார்த்தனை முடிந்து அனைவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சூப்ரவைசர் கண்காணித்தபடி குறுக்கே நடந்து கொண்டிருந்தார்.

"என்னடா செய்யலாம் சங்கர்?" என்றான் குமார் சற்றுப் பயம் கலந்த குரலில்,

"பேசாமல் திரும்பி விடலாம்..." என்றான் சங்கர்.

"ஆமாம்; அதுதான் சரி. பொல்லாத சூப்ரவைசர் கண்ணில் அகப்பட்டுக் கொண்டால், நேரே

மிராசுதார் வீட்டுக்கே சமாசாரம் போய் விடும்...'' என்றான் குமார்.

''போகட்டுமே!'' என்று தன்னுடைய இயல்புப் படி சங்கர் இப்போது பேசவில்லை. வேறு எந்தக் குற்றத்துக்கும் மன்னிப்பு உண்டு. ஆனால் காலை, மாலை தேவார பஜனையில் ஹாஸ்டல் மாணவர்கள் கலந்து கொள்ளாவிட்டால் சந்தானம் மன்னிக்கவே மாட்டார்.

''சரி; 'என் அத்தைக்கு உடம்பு சரியில்லை என்று ஆள் வந்தது. உடனே சங்கரையும் துணைக்கு அழைத்துக் கொண்டு அரசலூருக்குப் போய் விட்டேன்' என்று சொல்லலாமா?'' என்றான் குமார்.

''அதுதான் சரி. இராப் பொழுதை ஏதாவது வீட்டுத் திண்ணையில் கழித்துவிட்டு விடிந்ததும் ஹாஸ்டலுக்கு வந்து இந்தச் சரடை அவிழ்த்துவிட வேண்டியதுதான். வேறு வழியே இல்லை, வா சீக்கிரம்!'' என்று சங்கர் வற்புறுத்தவே, குமாரும் பின் தொடர்ந்தான்.

இருட்டில் இருவரும் நடந்து ஆற்றங்கரைப் பாலத்தை அடைந்தார்கள். அங்கே உட்கார்ந்திருந் தால் பக்கத்துக் கொட்டகையில் நடைபெறும் சினிமா வசனம்-பாட்டுக்கள் எல்லாம் கேட்கலாம்.

முதல் ஆட்டம் முடிகிறவரை இருவரும் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். இன்னும் அரை மணியில்

படம் விட்டுவிடும் என்று தெரிந்ததும், வேகமாக எழுந்து அருகில் உள்ள ஒரு தெருவுக்குள் நுழைந்து, படுப்பதற்கு வசதியாக எந்தத் திண்ணை காலியாக இருக்கிறது என்று நோட்டம் பார்த்தபடியே நடந்தார்கள்.

அப்போது திடீரென்று அக்கரையில் தெரிந்த பெரிய வெளிச்சத்தைக் கண்டு பயந்துபோன குமார், "ஐயோ, அங்கே ஏதோ வீடு தீப்பிடிச்சு எரியுதுடா, சங்கர்!" என்று குழறினான்.

சங்கர் அந்தத் திசையையே வெறிக்கப் பார்த்தான். அது பாவாடை வஸ்தாத் குடியிருக்கும் பகுதி.

சங்கருக்குத் திடீரென்று அடிவயிற்றில் நெருப்புப் பிடித்தாற் போலிருந்தது. ஆனால் இதொன்றையும் உணராத குமார், "வாடா, போய்ப் பார்க்கலாம்...." என்று சங்கரையும் இழுத்துக் கொண்டு இரண்டு அடி எடுத்து வைப்பதற்குள் நான்கு முரட்டுக் கரங்கள் அவர்களைப் பின்னிப் பிணைத்தன. கூச்சல் போட முடியாதபடி வாயில் துணி உருண்டை திணிக்கப் பட்டது. மீன் போல் துள்ளிக் குதித்த குமார் ஒரு கோணிப் பைக்குள் போட்டுக் கட்டப்பட்டான். சங்கரும் கட்டப்பட்டான். இருவரும் எங்கேயோ கடத்திச் செல்லப்பட்டார்கள்.

## 4. பூஜைவேளையில் கரடி




பொழுது விடிந்ததும் விடியாததுமாக மிராசுதார் சந்தானத்தின் வீட்டு வாசலில் பெரியதொரு கூட்டம் கூடியிருந்தது. பல்துலக்கி நெற்றியில் திருநீற்றை அள்ளிப் பூசிக்கொண்டிருக்கும் போதே பங்களா வேலையாள் எஜமானரிடம் விஷயத்தைச் கூற உள்ளே நுழைந்தான். அப்போது அவர் தம் இருகண்களையும் மூடி எதிரே இருந்த கைலயங்கிரிநாதன் திருவுருவப் படத்தின்முன் கரம் கூப்பி நின்று ஜெபித்துக்கொண்டிருந்தார்.

சிவ பூஜையில் கரடியாக நுழைய வேண்டாமென்று காத்திருந்தான் பணியாள். ஆனால் அதற்குள் வெளியிலிருந்து வந்த பேரிரைச்சலும் கூச்சலும்

சந்தானத்தின் தியானத்தைக் கலைத்ததோடு அவரைத் திடுக்கிடவும் வைத்துவிட்டன.

விழிகளைத் திறந்த அவர் எதிரில், வேலையாள் சண்முகம் பணிவுடன் கைகட்டி நின்றுகொண்டிருந்தான். எஜமானரது பார்வையிலே பிறந்த கேள்வியைப் புரிந்துகொண்டு சண்முகமே விஷயத்தை விளக்கினான்:

''நேத்து ராத்திரி நம்ம பள்ளிக்கூடத்துப் பிள்ளைங்க யாரோ, பாவாடை வஸ்தாது வைக்கப் போரிலே தீ வைச்சுப்புட்டாங்களாம். அக்கரைச் சனங்களே திரண்டு வந்திருக்காங்க. வஸ்தாதுக்கு உங்களை உடனே பார்க்கணுமாம்.''

சந்தானம் ஒரு கணம் அப்படியே செயலிழந்து நின்றுவிட்டார். கேள்விப்பட்ட செய்தியிலே அவருக்கு அதிர்ச்சி தரும் அம்சம் ஒன்று இருந்தது.

'பாவாடையின் வைக்கோல் போர் தீப்பிடித்தால், அதற்காக அவனோ மற்றவர்களோ இங்கே வந்திருக்கமாட்டார்கள். நீதி விசாரணைக்குப் போக வேண்டிய இடம் பட்டாமணியத்தினுடைய வீடு. ஆனால் தாயுமானவர் உயர்நிலைப் பள்ளி மாணவன் ஒருவன் இதில் குற்றவாளியாகச் சம்பந்தப்பட்டிருப்பதால்தான், கூட்டம் திசைமாறித் தன் வீடு நோக்கி வந்திருக்கிறது. இது எவ்வளவு பெரிய தப்பான காரியம்! தனக்கு இத்தனை அவமானம் ஏற்படச் செய்த அந்த மாணவன் யார்? அவனையும் கட்டி இழுத்து வந்திருப்பார்களே,

பார்க்கலாம்' என்று நினைத்த சந்தானம் வேகமாய் வாசலுக்கு வந்தார்.

சந்தானத்தின் தலையைக் கண்டதுமே, ''எஜமான், என்னோட முந்நூறு ரூபாய் வைக்கோலுக்கும் அநியாயமாகக் கொள்ளி வைச்சுப் புட்டாங்க எஜமான். பக்கத்திலே கொட்டகையிலே நின்ன கன்னுக்குட்டியோட காலு எல்லாம் கூட வெந்து போச்சு எஜமான். கடைத் தெருச்சண்டை கடைத் தெருவோடு போயிடுச்சு; அதுக்காக இப்படியா விரோதம் வெச்சுக்கிட்டு, வைக்கல் போருக்குக் கொள்ளி வைக்கிறது? எஜமான்தான் நியாயம் வழங்கணும்!'' என்று கூறியவன், நெடுஞ் சாண் கிடையாய்ச் சந்தானத்தின் காலில் விழுந்து விட்டான்.

சந்தானத்தின் கண்கள் கோவைந் பழமாகச் சிவந்தன. அவருக்குக் கடைத்தெருச் சண்டை யைப் பற்றியெல்லாம் ஒன்றுமே தெரியாது. ஆனாலும், அந்தச் சண்டையின் எதிரொலியாக இந்தத் தீவைப்பு நிகழ்ந்திருக்கிறது. எனவே, அவரது உள்ளத்தில் ஒரு வியப்பு.

வஸ்தாதை எதிர்க்கும் வலிமை மட்டுமல்ல; அவன் வீடு தேடிச் சென்று பழிவாங்கவும் திறமை படைத்த ஒருவன் தம் பள்ளியில் இருக்கிறானா— அந்த மாணவன் யார் என்று அவனை அறிந்து கொள்ள ஓர் ஆவல் பிறந்தது. ஆனாலும் அந்த மாணவன் செய்த காரியம் வீரமென்று மெச்சும் செயலல்லவே!

குற்றவாளிக்குத் தண்டனை கொடுக்கும் குரலி லேயே, ''யார் இந்தக் காரியத்தைச் செய்தவன்?'' என்று மிகவும் கோபமாகக் கேட்டார் சந்தானம்.

''யாரோ சங்கராம், எஜமான்; சோனி மாதிரி இருப்பான். அந்தப் பாவிப்பயல் பண்ணின காரியத்தைக் கேளுங்க'' என்று டீக்கடை நாயர் வாசலில் நடந்தசண்டையைப்பற்றி வஸ்தாதும் கூட இருந்தவர்களும் விஸ்திரமாக சந்தானத்திடம் விளக்கிக் கூறினார்கள்.

''பிறகு, அவனும்; கூட இன்னொருத்தனுமா இருட்டினதும் என் தோட்டத்துப் பக்கம் போவதைப் பார்த்தேன். ஆனா கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வைக்கோல் போர் குபீர்னு பத்தி எரிஞ்சதுங்க. பாவிப்பசங்கள் .பிடிக்கறதுக்குள்ளாற ஓடிட்டானுங்க. அப்பாலே, தீயைப் பார்ப்பேனா, ஆளைத் தேடு வேனா? நாங்க இத்தனை பேரும் அரும்பாடுபட்டுத் தண்ணியை மழையாகக் கொட்டியுங்கூடப் போரு போயிட்டுதுங்க!''–பாவாடை அழாக் குறையாகக் கூறினான். கூட இருந்தவர்கள் அதை ஆமோதித் தார்கள்.

''சரி, நான் இப்பவே ஹாஸ்டலுக்குப் போய் விசாரிக்கிறேன்; நீங்க அமைதியாகப் போங்க...'' என்றார் சந்தானம்.

''விசாரிச்சாப் போதாதுங்க; எங்களுக்கு நியா யம் கிடைக்கணும்!''–பாவாடை சிடுசிடுத்தான்.

''அதுக்கு நான் என்ன செய்யணும்?''

"நீங்க சோறும் தண்ணியும் போட்டு; தங்க நிழலும் கொடுத்துப் படிப்புச் சொல்லி வைக்கிறீங்க! தின்னுப்புட்டு ஒழுங்கா படிக்காமே; இப்படி ஊர் வம்புக்குத் தினவெடுத்து அலைஞ்சா?"

"அப்படி அலையறவனுக்கு இங்கே இடமில்லை. என் பையன்கள் மேலே தப்பு இருந்தா; நீங்கபட்ட நஷ்டத்துக்கு ரெண்டு பங்குப் பணம் தந்து உங்க கஷ்டத்தைப் போக்கறேன். நீங்க இப்போ அமைதியாப் போயிட்டுச் சாயங்காலமா வாங்க!" என்றார் சந்தானம்.

அதற்குமேல் அங்கே வாதாடிக் கொண்டிருக்க யாருக்கும் துணிவில்லை. மேலும்; சந்தானம் 'விசாரிக்கிறேன்' என்றுகூறிவிட்டால் அவர் நியாயத்தைத் தான் பார்ப்பார். ஆகவே சங்கருக்குத் தண்டனை தப்பாது; நஷ்டஈடும் கிடைத்துவிடும். என்று பாவாடை உள்பட அனைவரும் எண்ணிக் கொண்டு சென்றார்கள். ஆனால் பாவாடை மட்டும் சங்கரும், அவனது நண்பனும் தான் அடைத்து வைத்த ரூமில் கிடப்பார்கள்; போய் நல்ல செமை அடி கொடுக்க வேண்டும்' என்று தனக்குள் மனப்பால் குடித்துக் கொண்டு சென்றான்.

எண்ணியபடியே எல்லாம் உலகத்தில் நடந்து விட்டால் அப்புறம் என்ன இருக்கிறது?

கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு பாவாடை சந்தானத்தின் வீட்டுக்கு வரும் போது தன்னுடைய

காரியம் இத்தனை சுலபமாக; வெற்றியாக நடந்தேறும் என்று அவன் எண்ணவில்லை.

மேலும்; பட்டாமணியத்திடம் பேசிக் கொண்டிருந்தபடி தனது திட்டத்தை நிறைவேற்ற அன்றே இப்படி ஓர் அருமையான வாய்ப்புக் கிடைக்கும் என்றும் அவன் நினைக்கவேயில்லை.

சங்கர் ஒழுங்காக ஹாஸ்டலுக்கு அன்றிரவு வந்து சேராததுதான் பாவாடையின் தீய்வைப்பு நடவடிக்கைக்கு உரமாக அமைந்தது. ஹாஸ்டலில் படுத்துக்கொண்டிருந்தாலும் அவனை ரகசியமாகத் தூக்கிக் கொண்டு வந்து விடவேண்டும் என்று பாவாடை தன் ஆட்களுக்கு உத்தரவிட்டிருந்தான். ஆனால் அவர்களுக்கெல்லாம் அத்தனை சிரமம் கொடுக்காமல் சங்கரே அந்தத் தீயவர்களது திட்டத்துக்கு வழிவகுத்துக் கொடுத்துவிட்டான்.

ஆம்! சங்கரை டீக்கடையிலிருந்தே ரகசியமாகக் கண்காணித்துப் பின் தொடர்ந்து வந்த பாவாடையின் ஆட்கள்; மதகுக்குப் பின்னாலிருந்து, சங்கரும், குமாரும் பேசிக்கொண்டிருந்ததையெல்லாம் ஒட்டுக் கேட்டார்கள். ஹாஸ்டலுக்கே அன்றிரவு போகாமல் மட்டம் போட்டுவிட்டுத் தெருத் திண்ணையில் தூங்குவது என்கிற முடிவுக்கு அவர்கள் வந்ததும்; பாவாடைக்குச் செய்தி பறந்தது.

'பயல்கள் கைக்குள்ளிருக்கிறானுகள். உடனே போருக்குத் தீ மூட்டிடுங்க, நாங்கள் மதகிலிருந்தே இவனுகளைக் கடத்திக் கொண்டுவந்து

விடுகிறோம்' என்று செய்தி வந்த பிறகுதான் திட்டப்படிக் கொள்ளி வைப்பு நடந்தது. சங்கரும் அவன் கூட்டாளியும் கோணிப்பைக்குள் கட்டப்பட்டு பட்டாமணியத்தின் சவுக்குத் தோப்பு வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அவர்களை உள்ளே தள்ளிப் பூட்டி விட்டுத்தான் பாவாடை செய்தி சொல்ல எஜமானர் வீட்டுக்கு ஓடோடியும் வந்தான்.

அதைக்கேட்டுப் பட்டாமணியம் மனம் பூரித்தார். காரியத்தை அன்றே அத்தனை சுலபமாக வெற்றிகரமாக முடித்து விட்டதற்காகப் பாவாடையை வாயாரப் புகழ்ந்தார். அதோடு அவர், 'மேற்கொண்டு நாளைக் காலை என்ன செய்ய வேண்டும்' என்கிற உத்தரவு ஒன்றும் போட்டார்.

'பொழுது விடிவதற்குள், கூட்டாகப் பொய்ச் சாட்சி தயார் செய்து கொண்டு, காலையில் சந்தானத்தின் வீட்டுவாசலில் போய் முறையிட வேண்டும்.' இதுதான் அந்தத் திட்டம். அந்தக் கைங்கரியத்துக்காகப் பட்டாமணியம் இரண்டு கற்றை நோட்டுகளையும் எடுத்துப் பாவாடையின் கையில் கொடுத்தார்.

அந்தக் கைக்கூலிப் பணம்தான்—சந்தானத்தின் வீட்டு வாசலில் பல பேர்களின் வாக்குமூலமாகப் —பொய்ச்சாட்சியாக முழங்கியது.

அந்தப் போலி நாடகத்தையும்; அதில் தன்னுடைய நடிப்பையும் சந்தானம் உண்மை என்றே

நம்பி ஏமாந்து விட்டதில் பாவாடைக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியுடனேயே சவுக்குத் தோப்புக்குச் சென்றான் தன்னுடைய கைத்தினவை எல்லாம்—சந்தைப் பேட்டையில் பலபேருக்கு முன்னால் அவமானப் படுத்திய சங்கரை தையப் புடைப்பது மூலம் தீர்த்துக்கொள்ள அந்த வீட்டினுள் நுழைந்த பாவாடைக்குத்தான் எவ்வளவு ஏமாற்றம்!

பட்டாமணியகாரருடைய சவுக்குத் தோப்பு வீட்டை நெருங்கும் போது அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. ஆனால்— வாசலில் பூட்டிய பூட்டு அப்படியே இருக்க, பக்கத்துச் சுவரிலிருந்த ஜன்னல் கம்பிகள் மட்டும் அவனையே விழுங்கி விடுபவை போல் 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டு நின்றன. உள்ளே அவர்களைக் கட்டிக் கொண்டு போய்ப் போட்ட கோணிப்பைகள் கை கொட்டிச் சிரிப்பது போல் தரையில் பரப்பிக் கிடந்தன.

# 5. நத்தை வயிற்றில் முத்து




பாவாடைக்கு ஒருகணம் தன்னுடைய கண்களையே நம்பமுடியவில்லை. தோலி ருக்கச் சுளையை விழுங்குவது போல், பூட்டிய பூட்டு பூட்டியபடியே இருக்க உள்ளே அடைத்து வைத்திருந்த பையன்களைக் காணவில்லையே!

எஜமானர் கூறிய திட்டப் படியே கொள்ளிவைப்பை நடத்தினான். எவ்வளவு சாமர்த்தியமாக அந்தப் பழியைச் சங்கர் தலைமீது சுமத்திச் சந்தானத்தைநம்ப வைத்தான்? எவ்வளவு முன் எச்சரிக்கையாகச் சங்கரை அந்த இரவிலேயே பிடித்து பாழும் வீட்டில் அடைத்து வைத்தான்? இத்தனையும் செய்து, வழக்கும் ஜோடித்து

என்ன பயன்? கூண்டிலிருந்து பறவை தப்பிச் சென்றுவிட்டதே!

இந்த அவமானச் செய்தியை எந்த முகத்துடன் பட்டாமணியத்திடம் சென்று கூறுவது? முகத்தில் காறி அல்லவா உமிழ்வார்? அதுமட்டுமா? தப்பிச் சென்ற சங்கர் தன் குட்டுக்களை அம்பலமாக்கி விட்டால்?—

பாவாடை ஒரேயடியாகக் குழம்பி; அப்படியே அந்தா அறையில் உட்கார்ந்துவிட்டான். அவனது சிந்தனை எல்லாம், 'சங்கர் இப்போது எங்கே இருப்பான், அவனை எப்படிப் பிடிப்பது?' என்பதுதான்.

ஃ ஃ ஃ

அறைக்குள் அடைபட்ட சங்கரும், குமாரும் இன்னது செய்வது என்று புரியாமல் திகைத்துக் கொண்டிருந்தபோது—

"டேய் சங்கர், நம்மைக் கொன்று இந்தச் சவுக்குத் தோப்பிலேயே குழிதோண்டிப் புதைக்கத் தாண்டா பாவாடை நம்மை இங்கே அடைச்சு வெச்சிருக்கான்!" என்றான் குமார்.

சங்கர் பதிலே பேசவில்லை; ஒருவறட்டுச் சிரிப்பு அவன் இதழ்க்கடையில் ஓடியது.

"டேய் சங்கர், உன்னைப் போல் என்னாலே சமாதானமா இருக்க முடியல்லேடா. லேட்டானாலும் பரவாயில்லேன்னு ஹாஸ்டலுக்கே போயிருக்கலாம். அப்போ இந்த வம்பெல்லாம் வந்திருக்காது இந்தப் பாவிகள் கையிலே அகப்பட்டு ... ஹூம்...

இனிமே? பொழுது விடிஞ்சா, இங்கே என்ன வெல்லாம் நடக்கப் போகிறதோ?'' என்று குமார் முணுமுணுத்தான்.

''பொழுது விடியாது!''—சங்கர் ஒரே வார்த்தையில் கூறினான் மோட்டு வளையைப் பார்த்தபடி.

''உக்கும்...இவரு பெரிய நளாயினி!''

குமாரின் வார்த்தையை லட்சியம் செய்யாமல் அறையை நோட்டம் விட்டுக் கொண்டிருந்த சங்கர், ''குனிடா கீழே!'' என்றான் குமாரைப் பார்த்து.

சங்கர் குறிப்பிட்ட சுவர் ஜன்னலின் கீழே குனிந்து நின்று கொண்டான் குமார். சங்கர் குமாரின் முதுகின் மீதேறி ஜன்னல் கம்பிகளைச் சற்று அசைத்துப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! அந்தக் கம்பிகள் வளைந்து விரிந்துவிட்டன. நிச்சயம் இது மந்திரவாதமல்ல! சங்கருக்கு அப்போதுதான் முதன் முதலாக ஒரு சந்தேகம் எழுந்தது. தன்னையும் அறியாமல் தன் கரங்களில் ஏதோ ஓர் அமானுஷ்ய வலிமை இருப்பது நன்கு புலனாயிற்று.

அக்கிரமமாகக் கடைத்தெருவில் தாக்கவந்த பாவாடையிடமிருந்து தக்க சமயத்தில் தன்னைக் காப்பாற்றி உதவிய இந்த அதிசயவலிமையை, ரகசியமாகவே வைத்துக் கொள்ள விரும்பினான்.

எனவே, மிகுந்த சிரமப்பட்டுக் கம்பியை வளைப்பதுபோல் முக்கி முனகியபடி ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிய சங்கருக்குத் 'திக்' கென்றது.

ஆம்! ஓர் உருவம் அந்த வீட்டை நோக்கி வந்து கொண்டிருப்பது மங்கலான வெளிச்சத்தில் தெரிந்தது. சட்டென்று கீழே குதித்தான் சங்கர். குமாரிடமும் விஷயத்தைக் கூறி உஷார்ப் படுத்தினான்.

அடுத்த நிமிஷம் என்ன நடக்குமோ என்று அவர்கள் திகில்பட்டுக் கொண்டிருக்கும்போதே, பூட்டுத் திறக்கப்படுகிற சத்தம் கேட்டது.

பூட்டிய பூட்டை இவ்வளவு சுலபமாகத் திறப்பதென்றால், அதைப் பூட்டியவர்களால் தானே முடியும்? நிச்சயம் இது பாவாடையோ அல்லது அவனது ஆட்களோதான் என்று அஞ்சி, மூலையில் இருவரும் பதுங்கினார்கள். அப்போது உள்ளே நுழைந்த உருவத்தின் கையிலிருந்த பாட்டரி, ஒளி வெள்ளத்தை வாரியிறைத்தது. அந்த வெளிச்சம் குறிப்பாக மூலையில் பதுங்கியிருந்த அவர்கள் மீது படவும் தவறவில்லை.

ஆனால் என்ன ஆச்சரியம்! அந்த உருவம், "சங்கர்" என்று மெல்ல அழைக்கவும், ஏககாலத்தில் சங்கரும் குமாரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

“சார்!” என்று ஓடிவந்து காலில் விழுந்த குமாரையும், சங்கரையும் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டார் ஹாஸ்டல் மேனேஜர் பசுபதி.

“விவரம் எல்லாம் விடுதியில் போய்ப் பேசிக் கொள்ளலாம். இப்போது நாம் மூவருமே மிக ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறோம். உடனே என்னோடு புறப்படுங்கள்!” என்று அவசரப் படுத்தினார்.

அவர்கள் வெளியே வந்ததும் கதவை மீண்டும் பூட்டாமலே பசுபதியும் அவர்களுடன் புறப்பட்டார்.

உடனே குமார், “ஏன் சார், கதவைப் பூட்ட வேண்டாமா? இல்லாட்டி சந்தேகம் ஏற்பட்டு விடாதா?” என்றான்; ஏதோ அற்புத யோசனையைக் கூறுபவன்போல.

“பூட்டினால்தான் சந்தேகம் ஏற்படும். ஏன்னா, என்கிட்டே இருக்கிற இந்தச் சாவி, இந்தப் பூட்டோடெ ரெண்டு ஒரிஜினல் சாவிகளிலே ஒண்ணு. இன்னொன்னு பாவாடை கிட்டே இருக்கு. இதை இப்படியே திறந்து விட்டுட்டுப் போனா, யாரோ பூட்டை உடைச்சுக் காப்பாற்றியிருக்காங்கன்னு நினைப்பான்!” என்று விளக்கம் கூறினார் பசுபதி.

உடனே சங்கர், வெளியே வளைந்திருக்கிற ஜன்னல் கம்பியைக் காட்டி, “இது வழியா நாங்க தப்பிப் போனதா பாவாடை எண்ணிக் கொள்

ளட்டும்; நீங்க பூட்டை இழுத்துப் பூட்டிடுங்க!''
என்றான்.

பசுபதிக்கும் அதுதான் மிக நல்ல யோசனையாகப் பட்டது. கதவை இழுத்துப் பூட்டைப் பூட்டினார். விறுவிறு என்று மூவரும் சவுக்குத் தோப்புகளின் ஊடே குறுக்கும் நெடுக்கும் புகுந்து, பாடசாலை விடுதியை அடைந்தார்கள்.

வழி நெடுகக் குமாரும் சங்கரும், 'மானேஜர் இங்கே எப்படி இவ்வுளவு கரெக்டாக நம்மைக் காப்பாற்ற வந்து சேர்ந்தார்? இங்கே அடைபட்டுக் கிடக்கிற விஷயம் அவருக்கு எப்படித் தெரிந்தது? மாவாடை கையில் இருக்கும் சாவிக்கு மற்றொரு சாவி நம் மானேஜர் கைக்கு எப்படி வந்தது? மானேஜருக்கும் பாவாடைக்கும் என்ன உறவு? அல்லது அவர்களுக்குள் என்ன விரோதம்? ஹாஸ்டலுக்கு வந்த பிறகு தங்களை என்னென்ன கேள்விகள் கேட்கப் போகிறாரோ?' என்றெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டே வந்தார்கள்.

ஆனால் ஹாஸ்டலுக்கு வந்ததும் அவர்கள் எதிர் பார்த்தபடி எதுவுமே நடக்கவில்லை. மாறாக, உடனே அவர்கள் இருவரையும் கை கால் கழுவிப் பிரார்த்தனையை முடித்துக்கொண்டு வரச் சொன்னார். சமையல் அறை விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது. விடுதியில் மற்ற அறையிலுள்ள பையன்கள் எல்லாரும் எப்போதோ தூங்கிவிட்

டார்கள். சங்கரும், குமாரும் வந்ததும் சமையல் காரர் அவர்களுக்கு உணவு பறிமாறினார்.

சங்கரும், குமாரும் பிறகு மானேஜருடன் அறைக்கு வந்தார்கள். - கொட்டகை வாசலுக்கு வந்தது முதல்; சங்கருக்கும் பாவாடைக்கும் மல்யுத்தம் மூண்டு பட்டாமணியம் அழைத்துச் சென்றதுவரை ஆதியோடு அந்தமாகக் கூறினான் குமார். அதன் பிறகு டீக்கடை நாயர் தேநீர் விருந்து கொடுத்ததையும் கூறி-ஆனால்நேரம் கழித்துப் பாடசாலைச்குப் போக மனமின்றி இரவைக் கழிக்கப் போட்டிருந்த பொய்த் திட்டத்தைப் பற்றிக் கூறமட்டும் தயங்கினான்.

சங்கர், 'அதையும் கூறிவிடேன் குமார்; ஒன்றை மட்டும் மறைப்பானேன்?' என்பதுபோல் பார்த்தான்.

குமார் அதையும் கூறி முடித்தவுடன் மானேஜர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். பையன்களுடைய திறமையும், நேர்மையும் சத்தியமும்அவர் மனத்தைக் கவர்ந்தன; என்றாலும் எவ்வளவு பெரிய வம்பை விலைக்கு வாங்கி பெரிய சதியில் சிக்கி விட்டார்கள்!

"நீங்கள் குஸ்திபோட்டதெல்லாம் கேட்க நல்லாத்தான் இருக்கு. ஆனால் எத்தனை நேரமானாலும் நேரே நீங்க விடுதிக்கு வராதது பெரிய தப்பு. அப்படி நீங்க வராததினாலேயே, அக்கரையிலே பாவாடையோடே போரிலே தீ வைத்த பழி

உங்க மேலே வந்து விழுந்திருக்கு'' என்று பசுபதி கூறி முடிக்குமுன்—

''சார், சத்தியமாகச் சொல்லறேன் சார்; அக்கரையிலே தீப்பற்றி எரியறபோது நாங்க இக் கரையிலே தான் இருந்தோம். தீயை நான்தான் பார்த்துவிட்டுச் சங்கருக்குச் சொன்னேன். அது எங்கே யார் வீட்டிலே பிடிச்சது என்கிறதுகூட எங்களுக்குத் தெரியாது சார்!'' என்றான் குமார் அழுதபடி.

''நீ சொல்றதை யெல்லாம் நான் நம்பறேன் குமார். ஆனால் அந்தப் பழியை இல்லேன்னு மறுத்துச் சொல்ல முடியாதபடி நீங்க ரெண்டுபேருமே விடுதியிலே இல்லையே. அப்படி நீங்கள் வெளியிலே சுத்திக்கிட்டு இருக்கிறது தெரிஞ்சு உங்களையும் தங்கள் வசம் வைத்துக்கொள்ள ஏற்பாடு ஆன பிறகுதானே கொள்ளி வைப்பதே நடந்திருக்கு!''

''அப்படியா சார்? இதெல்லாம் எங்களுக்கு ஒண்ணுமே தெரியாது. மோசம் போயிட்டோம் சார்!'' என்று குமார் அழூஉக் குறையாகக் கூறினான்.

''நீங்கள் மட்டுமா மோசம் போனீர்கள்? நாளைக்கே இந்த விஷயம் ஐயா காது வரைக்கும் போகும். உங்களை நான் இப்போ காப்பாத்தினது பெரிசு இல்லே. தீ மூட்டின அந்தப் பொல்லாப் பழியிலேயிருந்து உங்களைக் காப்பாத்தணும்னா—தீ விபத்து நடக்கிறபோது நீங்க ரெண்டுபேரும் ஹாஸ்டலிலே இருந்ததா நான் பொய் சொல்ல

ணும். அதுமட்டும் போதாது. பாடசாலைப் பையன்கள் அத்தனை பேருமே உங்களுக்காகப் பொய்ச் சாட்சி சொல்லியாகணும். அதை என்னால் அனுமதிக்கவே முடியாது!''

''அப்போ என்ன தான் ஸார் செய்யறது?''

''ஐயா வரையில் விஷயம் போய் விசாரித்தால், நீங்கள் உங்கள் பகுதியைச் சொல்லுங்க; நான் எனக்குத் தகவல் கொடுத்து, உங்களையும் காப்பாத்தச் சொல்லி என் கையிலே சாவியைக் கொண்டு வந்து கொடுத்த பட்டாமணியத்தின் பெண்ணைப் பற்றிச் சொல்லித்தான் ஆகணும்!'' என்றார் பசுபதி.

இதைக் கேட்டதும் சங்கருக்குச் 'சுரீர்' என்றது. வசந்தியா மானேஜரிடம் சாவியைக் கொடுத்துத் தங்களைக் காப்பாற்ற உதவியிருக்கிறாள்? அவனையும் அறியாமல் அவன் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. 'எவ்வளவு கொடிய மனிதருக்கு எவ்வளவு நல்ல பெண் பிறந்திருக்கிறாள்—இரணியனுக்குப் பிரகலாதன் பிறந்தது போல!—' என்று அவன் மனம் உருகியது.

## 6. நடுத்தெருவில் ஒரு நாடகம்!




வசந்திக்கு அன்றிரவெல்லாம் உறக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். மன உளைச்சல் தாளவில்லை, தான் செய்தது சத்தியத்துக்கும் நேர்மைக்கும் புறம்பானதல்ல. அதை உணர்ந்தே அவள் நிரபராதியான சங்கரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டாள். ஆனால், அவள் செய்தது தன் அப்பாவுக்கு எதிரான காரியமல்லவா?

சாவியைப் பெற்றுக் கொண்ட மானேஜர் அவளைப் புகழ்ந்தார். அது அவளது மனத்துக்கு மிகவும் இதமாயிருந்தது உண்மைதான்; பெருமையாகக்கூட இருந்தது.

பொழுது விடிந்ததும் விடியாததுமாகப் பாவாடை யுடன், பெரும் சண்டை போல் இரைந்து கத்திக் கொண்டிருந்தார் பட்டா மணியம்.

வசந்திக்குத் தந்தையின் இந்தக் கோபத்துக் கான காரணமே புரியவில்லை. ஏனென்றால் இரவு போருக்குத் தீ மூட்டியதாகவும், அந்தப் பழியைச் சங்கர்மீது சுமத்த அவனையும் அவனது கூட்டாளி யையும் சவுக்குத் தோப்புப் பங்களாவில் முன்னெச் சரிக்கையாகச் சிறைப் படுத்தி யிருப்பதாகவும் பாவாடை கூறியது கேட்டு அவர் அடைந்த மகிழ்ச் சிக்கு அளவே இல்லை. பாவாடையை அவனுடைய திறமைக்காக வானளாவப் புகழ்ந்தார். இப்போதோ தாறுமாறாகத் திட்டுகிறார்!

காரணம்; வசந்தி எதிர்பார்த்ததுதான். சங்கர் தோட்டத்து வீட்டிலிருந்து தப்பித்துச் சென்று விட்டானாம்!

“முட்டாளே! பூட்டு அப்படியே பூட்டியபடி இருக்கு; ஒரு பொடிப்பயல் ஜன்னல் கம்பியை வளைச்சுத் தப்பிப் போய்விட்டான்னு பூதம் மாதிரி ஓர் ஆள் வந்து சொல்றியே, உனக்கு வெட்கமா இல்லை?”

“நான் இப்படி நடக்கும்னு எதிர்பார்க்கவே இல்லைங்க எஜமான்!”—பாவாடை குழறினான்.

“நீ எதிர்பார்த்தபடி என்னதான் நடந் திருக்கு? சந்தைப் பேட்டையிலே உன் மானம்

துளியுண்டுப் பயல்கிட்டே மண்ணைக்கவ்வும்னு எதிர்பார்த்தியா? உள்ளே கொண்டு வந்து அடைச்சவன்; அந்த வீட்டுக்கு ஓர் ஆளைக் காவல் போடறதுக்கு என்ன?"

"அப்படிச் செய்யாததுதான் எஜமான் தப்பாப் போச்சு!"

"போச்சா? கருங்கல்லிலே போய் முட்டிக்கோ! காரியம் மிஞ்சிப்போனப்புறம் இப்போ என்கிட்டே வந்து கையைப் பிசைஞ்சு என்ன பண்ணறது? அடைச்சு வச்ச பயல் அப்படியே இருக்கானான்னு பார்க்காமலே சந்தானத்தின்கிட்டே வேறேபோய்க் கூட்டமாய்ச் சொல்லித் தொலைச்சுட்டு வந்திருக்கே!"

"அதுதானுங்களே எனக்கும் ஒரே குழப்பமா இருக்கு."

"நல்லா குழம்பு! உன்மாதிரி முட்டாளை நம்பிக் காரியத்திலே இறங்கினதுக்கு நானும் சேர்ந்து குழம்பறேன். ஏன்னா அவனை என் வீட்டில் இல்லையா அடைச்சு வெச்சிருந்தே? தப்பிப் போன பயல் ஒன்னுவிடாமச் சொல்லி உன்னோடு என்னையும் சேர்த்துச் சந்தி சிரிக்க வைக்கப் போறான். என்மானம் போகறதுக்குள்ளே நான் உசிரை விடறதேமேல்!"

ஆக்கிரோஷத்துடன் பட்டாமணியம் கூறிய இந்த வார்த்தையைத் தன் அறையிலிருந்து கேட்ட வசந்திக்குத் திக்கென்றது.

'சங்கருக்கு உதவி செய்ததில், தர்மமும் நியாயமும் இருக்கலாம். ஆனால் அது—அந்த உதவி—என் அப்பாவின் உயிரைப் பறிக்கிற அளவுக்குப் போகுமென்றால் அது கொடுமையல்லவா? அப்பாவின் மானக்கேட்டுக்கும் மரணத்துக்கும் நாமே காரணமாக இருப்பதா? எல்லாவற்றையும்விடப் பூட்டிய பூட்டும்; பூட்டிய படியே இருந்ததாம். சங்கர் ஜன்னல் கம்பியை நீக்கியல்லவா கம்பி நீட்டிவிட்டானாம்! அப்படியானால் நான் மானேஜரிடம் சாவி கொடுத்தனுப்பியது என்னவாயிற்று? என் உதவியைப் பெறுமுன்னரே சங்கர் தப்பிச் சென்று விட்டானா?'

இப்போது வெளியேயிருந்த பட்டாமணியம், பாவாடை, இவர்களுடையதைவிட; வசந்தியின் மனம் தான் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்தது. சங்கருக்கு ஆபத்தில் உதவத் தூண்டிய அவளது நல்ல உள்ளம் தந்தையின் இடருக்கும் முடிவு காணத் துடித்தது.

ஒரு திட்டம் அவள் உள்ளத்தில் பளிச்சிட்டது.

ஆனால் அதை எப்படி அவள் தன் தந்தையிடம் தெரிவிக்க முடியும்? மேலும் தந்தையின் இந்த ரகசிய நடவடிக்கைகளை எல்லாம் அவள் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளக் கூடாதே! பிறகு அவள் மீதும் அவருக்குச் சந்தேகமல்லவா வந்துவிடும்?

அப்போது, வசந்திக்காக வேளையாள் காப்பி கொண்டுவந்து வைத்தான். அவனிடம், ''வண்டிக் கார முனியன் இருக்கானா?'' என்று விசாரித்தாள்.

''ஐயாவும், பாவாடையும், முனியனும் ஏதோ முக்கிய விஷயம் பேசிக்கிட்டிருக்காங்க——''

''சரி. நேத்திக்கு வண்டியிலே என் பேனா விழுந்திடுத்து. முனியனை நான் கூப்பிட்டதா வரச் சொல்லு!'' வசந்தி துணிந்து ஒரு பொய்யைச் சொல்லி அனுப்பினாள்.

ஆம்! அப்பாவுக்கும் பாவாடைக்கும் முனியன் எவ்வளவு அந்தரங்கமோ; வசந்திக்கும் அவன் அவ்வளவு அந்தரங்கம். ஆனால் அவள் தாய்-பட்டாமணியத்தின் உத்தமமான மனைவி — உயிர் பிரியும் நேரத்தில் வசந்தியையும், தீய வழிகளிலே ஈடுபடும் தன் கணவரையும் துன்பம் நேராமல் காப்பாற்ற வேண்டிய பணியை அவனிடம் வேண்டியிருந்தாள். காரணம்; முனியன் அந்த வீட்டில்வண்டிக்காரனாக மட்டும் விளங்கவில்லை. குடும்பத்தில் சகல பொறுப்புக்களுமே அவனிடம் தான் ஒப்படைக்கப் பட்டிருந்தன.

முனியனைக் கண்டதும் வசந்திக்கு அழுகையே வந்து விட்டது.

''உள்ளே பேசிக்கிட்டிருந்ததெல்லாம் என் காதிலேயும் விழுந்தது. அப்பாவுக்கு அவமானம் ஏற்படக்கூடாது முனியா!'' என்று விம்மல்களுக்கிடையே வசந்தி முனகினாள்.

முனியன் அன்போடு, ''நானும் அதைப் பத்தித் தான் யோசிச்சுக்கிட்டே இருக்கேன்மா. இந்தப் பாவாடை எக்கச்சக்கமா சந்தானத்தய்யா கிட்டே போய் அவசரப்பட்டு உளறி வெச்சிருக்கான். இனி என்னென்லாம் நடக்கப் போகுதோ?'' என்று அங்கலாய்த்தான்.

உடனே வசந்தி, ''அப்படியொன்றும் நேராது. சங்கரை என்னவோ காப்பாற்றி விட்டோம். அப்பாவுக்கும் ஒரு நல்ல வழி எனக்குத் தோணுது'' என்றாள்.

''அது என்ன பாப்பா?'' என்று ஆவலோடு கேட்ட முனியன் காதில், ரகசியமாகத்தன்னுடைய யோசனையைக் கூறினாள் வசந்தி.

''என்ன இருந்தாலும் படிச்ச புள்ளை; படிச்ச புள்ளைதான். இந்த ஐடியா எங்க யாருக்கும் தோணவே இல்லையே!'' என்று புகழவாரம்பித்து விட்டான் முனியன்.

உடனே வசந்தி சட்டென்று அதை ஏற்காதவள் போல், ''அது சரி முனியா, இதில் ஒரு முக்கிய மான விஷயம். இப்போ நான் சொன்ன விஷயம் உனக்குத் தான். ஐயாகிட்டே நீ இதை உன்னு டைய யோசனையாகத்தான் சொல்லணும்; அதை மறந்துவிடாதே!'' என்று எச்சரித்தாள். முனியன் கிளம்பினான்.

குழம்பிக் கொண்டிருந்த பட்டாமணியத்திடம், ''எஜமான், எனக்கு ஒரு ஐடியா தோணுது.

இப்படிச் செஞ்சா என்ன?'' என்று விஷயத்தைக் கூறினான். அதைக் கேட்டதும் பாவாடை மட்டு மென்ன; பட்டாமணியமே அசந்து போய் விட்டார்.

''முனியா, உன்னுடைய இந்த யோசனை யினாலே என்னுடைய மானம் மட்டுமில்லே, உயிரே பிழைச்சுது!'' என்று வாயாரப் புகழ்ந்தபடி இரும்புப் பெட்டியைத் திறந்து நூறு ரூபாயை எடுத்துப் பாவாடையின் கையில் கொடுத்தார். ''ஓடு இப்பவே ஒரு பயலை இழுத்துக் கொண்டு வா! நானும் சற்றைக்கெல்லாம் சந்தானத்தின் வீட்டுக்கு வந்து விடுகிறேன். காரியம் ஐந்து நிமிஷத்துக்குள் முடிஞ்சாகணும்!'' என்று விரட்டி அனுப்பினார்.

அதன்படியே சற்றைக்கெல்லாம் பட்டாமணியம் அங்கே சென்றபோது; சந்தானத்தின் வீட்டு வாசலிலே இருந்த மரத்தில் ஓர் ஆளைக் கயிற்றால் கட்டிக் கொண்டிருந்தார்கள். அவன் பட்டா மணியத்தைக் கண்டதும், எகிறிக் கொண்டு, ''எஜமான், மன்னிக்கணும். தெரியாம, பழைய விரோதத்திலே பாவாடையோட வைக்கப் போருக் குத் தீ வெச்சுட்டேன். இனிமே இந்த மாதிரித் தப்புத் தண்டாவுக்கெல்லாம் போகமாட்டேன்'' என்று விழுந்து கும்பிட்டான்.

பட்டாமணியத்துக்கு முகத்திலுள்ள கடுமை மாறவே இல்லை.

''சீ, அயோக்கிய நாயே! எழுந்திரு! உன்னாலே இந்த ஊருக்கே எவ்வளவு பெரிய அவமானம்!


சந்தைப் பேட்டைச் சண்டையை மனசிலே வெச்சுக்கிட்டு, சங்கர் தான் நெருப்பு வெச்சிருக்கான்னு பாவாடை குதிக்கறான். உன்னை நான் வலை போட்டுப் பிடிக்காட்டா, பாவம், அந்த சாதுப் பிள்ளை மேலே தானே பழி விழுந்திருக்கும்?" என்று கூறியபடியே கையிலிருந்த சவுக்கால் பளார் பளார் என்று பட்டாமணியம் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார். ஆம்! கொடுத்த நூறு ரூபாய் செரிக்க வேண்டாமா!

ஆனால் இந்தச் சூழ்வாது ஒன்றும் அறியாத சந்தானமோ, "போதும்பட்டாமணியம், விட்டுடுங்க; ஏதோ அறியாத்தனமா விரோதத்திலே நடந்துக்கிட்டிருக்கான். ஆனால் பாவாடை வந்து என் பள்ளிக் கூடப் பையன் சங்கர் மேலே பழியைப் போட்டதும் என்னாலே நம்பவே முடியவில்லை!" என்றார் உணர்ச்சி பொங்க.

"என்னாலே மட்டும் நம்ப முடிஞ்சுது? நானும் அதை நம்பாமத்தானே உண்மைக் குத்தவாளியைக் கொண்டு வந்தாகணும்னு இத்தனை பாடுபட்டேன்!" என்று பட்டாமணியமும் சேர்ந்து கொண்டார்.

இந்த நாடகத்தைக் கூட்டத்தோடு கூட்டமாய், சங்கரும் மானேஜரும் மட்டுமல்ல; வசந்தியும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

# 7. விளையாட்டுப் போட்டி




இந்தச் சம்பவத்துக்குப் பிறகு பட்டாமணியம் வெகுவாக மாறிவிட்டார். பாவாடையை நம்பிக் காரியத்தில் இறங்குவது; மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குகிற கதைதான் என்பது அவருக்குப் புரிந்து விட்டது. சந்தானத்தைப் பழிவாங்க நினைத்தது போக, சந்தானத்திடமிருந்து மட்டுமல்ல; ஊரார் கண்ணெதிரிலிருந்தும் மானம் போகாமல் பிழைத்ததே பெரிய காரியமாகப் போய் விட்டது.

இப்பொழுதெல்லாம் அவர் சந்தானத்துடன் கூடச் சகஜமாகப் பழகி உறவு கொண்டாடினார்.

அடிக்கடி வலுவிலேயே சந்தானத்தின் வீட்டுக்குப் போனார். வளர்ந்து பெருகும் பள்ளியின் வளர்ச்சி யிலே அதிக அக்கறை காட்டினார்.

வண்டி அனுப்பி, சங்கரை வீட்டுக்கு அழைத்து வருவார். விருந்தளிப்பார். அப்போதெல்லாம் சந்தானத்தின் அநுமதியை ஒவ்வொரு தடவையும் பெற்றேதான் சங்கர் செல்வது வழக்கம்.

வசந்தியும் சங்கரும் மிகவும் அன்னியோன்னிய மாகப் பழகுவது கண்டு பட்டாமணியம் மனம் பூரித் தார். வசந்தியும் அப்பாவின் மனம் இப்படி மாறும் என்று எதிர்பார்க்கவில்லையே!

எல்லாவற்றையும் விட, அந்த வருஷம் நடை பெறவிருக்கும் பள்ளி விளையாட்டுப் போட்டியில் பட்டாமணியம் சங்கருக்கு மிகவும் உற்சாகமூட் டினார்.

அந்த வருஷம் பட்டணத்துப் பள்ளி ஒன்றுடன்; தாயுமானவர் பள்ளி விளையாட்டுப் போட்டி நடத்து வதாக இருந்தது.

எல்லா விளையாட்டுகளுக்கும் தாயுமானவர் பள்ளி ஒவ்வொரு டீமுக்கும் திறமையான மாணவர் களைப் பொறுக்கி வைத்திருந்தது.

சங்கர் இரும்புக் குண்டு வீசி எறியும் போட்டி யில் தன் பெயரைப் பதிவு செய்துகொண்டான். இதைக் கண்டு எள்ளி நகையாடியவர்கள் பலர். 'சோனிச் சங்கரால் அந்த வலுவான குண்டைத்

தூக்கவே முடியாதே; பிறகல்லவா அவன் அதை வேகமாக வீசி எறிந்து வெற்றி பெறுவதற்கு?' என்று அனைவருமே எண்ணினார்கள். ஹெட்மாஸ்டர்கூட, வாலிபாலிலோ, புட்பால் போட்டியிலோ கலந்து கொள்ளும்படித்தான் சங்கரைச் சிபாரிசு செய்தார். ஆனால், சங்கர் தனக்கு இந்தப் போட்டியில் மிகுந்த நம்பிக்கை இருப்பதாகக் கூறிவிடவே, அதற்குமேல் அவனை யாரும் வற்புறுத்தவில்லை.

குறிப்பிட்ட தேதியில் பட்டணத்துப் பள்ளி விழாக் கோலம் பூண்டு காட்சியளித்தது.

பூப்பந்தாட்டப் போட்டி, முதல் நாள் நடை பெற்றது. இதில் இரு தரப்பிலிருந்தும் மாணவிகளே பங்கு கொண்டார்கள். பிற்பகல் வரை இரு கோஷ்டியும் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடிய வில்லை. ஆட்டம் உற்சாகமாகவும், மும்முரமாகவும் தொடர்ந்தது. தாயுமானவர் பள்ளியின் கோஷ் டிக்கு வசந்திதான் லீடர். அவள் இவ்வளவு சுறுசுறுப்பாகவும், லாகவமாகவும் விளையாடக் கூடியவள் என்பதைச் சங்கரே அன்றுதான் கண்டான். பந்து அவளது மட்டையில் சொன்னபடி யெல்லாம் கொஞ்சி விளையாடியது.

ஆட்டத்தை ஊக்குவிக்கவும், ஆடுபவர்களை உற்சாக மூட்டவும் ஒவ்வொரு மும்முரமான கட்டத் திலும் இருதரப்பிலிருந்தும், சீழ்க்கையும் கைதட்ட லும் விசில் ஒலியும் எழுந்துக் காதைத் துளைத்தன.

முற்றிலும் பெண்களே கலந்து கொள்ளும் விளை யாட்டு இது ஒன்றேயாதலால்; பார்ப்பதற்கு வேடிக் கையாகவும், அழகாகவும் இருந்தது.

வசந்தி அடிக்கொருதரம் தன் தந்தை அமர்ந் திருக்கும் பகுதிப் பக்கம் விழிகளைச் சுழல விட்டுக் கொண்டே இருந்தாள். அதற்குக் காரணம், சங்கர் பட்டாமணியத்தின் அருகிலேயே அவளது ஆட் டத்தை மிகவும் ரசித்துக் கொண்டு அமர்ந்திருந்தது தான்.

''வெல்டேக்கன் வசந்தி!''

''குட்!''

''க்ளவர்''– போன்ற புகழுரைகள் வசந்தியை வெகுவாக உற்சாக மூட்டிவிட்டன போலும். மிகவும் அநாயாசமாக விளையாடி இறுதி ஆட்டத்தில் வெற்றியை நிலைநாட்டிவிட்டாள்.

கரகோஷம் காதைப் பிளந்தது. வசந்தியையும், அவளது கோஷ்டியையும் எல்லோரும் புகழ்ந் தார்கள்.

தந்தையின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்ட வசந்தியிடம், சங்கர் கையில் தயாராக வைத்திருந்த உயர்ரகச் சாக்லெட்டை நீட்டினான். அவளும் அதை ஆசையுடன் வாங்கிச் சுவைத்தாள். விளையாடிக் களைத்து வந்த அவளுக்குச் சங்கர் அளித்த பரிசு மிகவும் இனித்தது.

பூப்பந்தாட்டப் போட்டியை அடுத்துக் கால் பந்துப் போட்டி ஆரம்பமாயிற்று.

இரண்டு கோஷ்டிகளின் பெயர்களும் வாசிக்கப் பட்டன. அனைவரும் தயாராய் ஃபீல்டுக்கு வந்து விட்டார்கள்.

குறிப்பிட்ட நேரம் நெருங்கியதும் ரெபரி விசிலை ஊதினார். பம்பரமாகப் பையன்கள் சுழன்றும் பாய்ந்தும், ஓடியும் விளையாடினார்கள். பூப்பந் தாட்டத்தில் இழந்த வெற்றியைக் கால்பந்தில் நிலை நாட்ட வேண்டுமென்று பட்டணத்துக் கோஷ்டி மும்முரமாக ஆடியது.

தாயுமானவர் கோஷ்டியும், 'இதிலும் வெற்றி எங்களுக்குத்தான்!' என்கிற இறுமாப்புடனேயே ஆடியது. இரண்டும் ஒன்றுக்கு ஒன்று சளைக்க வில்லை. பட்டணத்துக் கோஷ்டியின் கோல்கீப்பர், தாயுமானவர் கோஷ்டியின் திறமைகளையெல்லாம் அப்படியே விழுங்கி ஏப்பம் விடுவதில் வல்லவனாக இருந்தான். இறுதியில் அப்படியே ஏப்பம் விட்டு விட்டான்.

அன்று பளு எறியும் போட்டி; தாயுமானவர் பள்ளி மாணவர்கள் உற்சாகமிழந்து காணப்பட்டார் கள். 'வழக்கமாக நாம் ஜயிக்கும் வாலிபாலும், புட் பாலுமே போய்விட்டன; இதிலா சங்கர் ஜெயிக்கப் போகிறான்?' என்று அனைவருமே வருத்தம் கலந்த குரலில் பேசிக் கொண்டார்கள்.

ரெபரி மூன்றாவது விசிலை ஊதிவிட்டார். 10, 20, 30, 40, 50 கிலோ எடைக் கணக்கில் தரையில் குண்டுகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. சங்கர் முதலில் 20 கிலோ குண்டைத் தூக்கி இடது கையால் அநாயாசமாா வீசி எறிந்தான். இந்தப் போட்டிக்குத் தாயுமானவர் பள்ளியின் சார்பில் சங்கரைத் தவிர வேறு மாணவர்கள் யாருமே கலந்து கொள்ள விரும்பவில்லை. தங்களால் முடியாது என்று ஒதுங்கிவிட்டார்கள். ஆனால் எதிர்த் தரப்பில் ஆறுபேர் கலந்து கொண்டிருந்தார்கள்.

சங்கர் வீசியதும், எதிர்க்கட்சியிலிருந்து ஒருவன் அதே தூரத்துக்கு அந்தக் குண்டை வீசி எறிந்துவிட்டுச் சென்றான்.

அடுத்து, சங்கர் வரிசையாக 30,40, என்றுவீசி எறிந்தான்; இப்போது எதிர்த் தரப்பில் ஒருவனே இருந்தான். 30-வது கிலோவிலேயே பாக்கிப்பேர் தோற்றுப் போய்விட்டார்கள்.

கடைசியாக இருந்தவன் மிகுந்த சிரமப்பட்டு 40 கிலோவை வீசி எறிந்து தன்கட்சியின் வெற்றிக்கு உயிர் ஊட்டி விட்டான்.

உடனே சங்கர் 50 கிலோ குண்டைத் தூக்கிப் பலம் கொண்டமட்டும் வீசி எறிந்தான். எங்கோ கண்ணுக்கெட்டாத தூரம் புல்லுக்குள் சென்று விழுந்தது அந்தக் குண்டு!

கரகோஷம் வானைப் பிளந்தது. அத்தனை நேரம் உற்சாகமிழந்து கிடந்த தாயுமானவர் பள்ளி

மாணவர்கள் மட்டுமல்ல; ஆசிரியர்களுமே வியப்பில் ஆழ்ந்து விட்டார்கள்.

பட்டணத்துக் கோஷ்டியில் இறுதியாக எஞ்சி யிருந்த அந்த மாணவன் மிகுந்த தயக்கத்துட னேயே வந்தான். அந்த 50 கிலோ குண்டை அவனால் முழங்காலுக்குமேல் தூக்க முடியவில்லை.

தன்னுடைய வலிமையை எல்லாம் திரட்டி, இரண்டு கைகளினாலும் உயர்த் தூக்கிய அவன்; குண்டை 'தொபுகடீர்' என்று கீழே போட்டுவிட் டான். தூக்கவே முடியாதபோது எடுத்து வீசுவது எங்கே? தோற்றுப்போனான்!

கேட்கவேண்டுமா சங்கர் பள்ளி கோஷ்டியின் உற்சாசத்துக்கு? சங்கரின் நண்பர்கள் வெற்றி வாகை சூடிய சங்கரை அப்படியே அலாக்காகத் தோளில் தூக்கிக் கொண்டு "ஹீரோ ஜேம்ஸ்பாண்ட் சங்கருக்குஜே!; ஜேம்ஸ்பாண்ட் சங்கருக்குஜே!!" என்று புதிய பட்டமளித்து ஆனந்தக் கூத்தாடி னார்கள்.

அன்று முதல் சாதாரண சங்கர் ஜேம்ஸ்பாண்ட் சங்கரென்று எல்லா மாணவர்களாலும் அழைக்கப் பட்டான்.

ஆம், தாயுமானவர் பள்ளியின் சரித்திரத்தி லேயே ஒரு புதிய ரிகார்டை அல்லவா சங்கர் ஏற்படுத்தி விட்டான்! பளு எறிவதற்கான வெற்றிச் சுழல் கோப்பையைத் தொட்டுக்கூடப் பார்த்திராத தாயுமானவர் பள்ளியின் சார்பில் சங்கர் பெற்றுக்

காண்டபோது அங்கே கூடியிருந்த அத்தனை பேருடைய உள்ளத்திலும் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது.

வசந்தியின் கண்ணில் நீரே வந்து விட்டது. ஆம், சங்கர் அடைந்த வெற்றி அவள் அடைந்த வெற்றியே அல்லவா? அதுமட்டுமல்ல; அந்த வருஷ விளையாட்டுப் போட்டியிலேயே, வசந்தியும்–சங்கருந்தானே பள்ளியின் புகழைக் காப்பாற்றியிருக்கிறார்கள்?

தம்முடைய பாதங்களைத் தொட்டு வணங்கிய சங்கரைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டார் சந்தானம். அப்போது அருகிலிருந்த பட்டாமணியத்தின் உள்ளத்தில் என்ன உணர்ச்சிகள் பிரதிபலித்தன என்று வர்ணிக்கவே முடியாது.

தன் கோட்டில் தொங்கிக் கொண்டிருந்த தங்க டாலரை எடுத்துச் சங்கரின் சட்டையில் செருகிய போது முதலில் வசந்திதான் கைதட்டி ஆரவாரத்தைக் கிளப்பினாள். இப்போதெல்லாம் பட்டாமணியத்துக்கு வசந்தி வலது கண் என்றால் சங்கர் அல்லவா இடது கண்! ஆனால்....

எஜமானருடைய இந்தத் திடீர் மனமாற்றத்தைக் கண்டு எங்கோ மூலையிலிருந்த பாவாடை மிகவும் மனம் குமுறினான்.

# 8. ரேக்ளா சவாரி




சங்கரின் மதிப்புத் திடீரென்று பெருமளவு உயர்ந்துவிட்டது.

பட்டாமணியத்தினுடைய கோட்டில் இத்தனை நாளும் தொங்கிக்கொண்டிருந்த பெரிய தங்கடாலர் இப்போது சோனிச் சங்கருடைய சட்டையிலல்லவா தொங்கிக் கொண்டிருக்கிறது! சங்கர் அதைப் போட்டுக்கொண்டு உலவும் போதெல்லாம் பாவாடையின் நெஞ்சம் பொறாமையினால் வெந்து நீறாகியது.

'தூ, என்னா நன்னி கெட்ட மனுஷன் ஐயா, இந்த பட்டாமணியம்?' என்று சலித்துக் கொண்டான்.

'எத்தனை தெருச் சண்டைகள், வயல் தகராறுகள், கிஸ்தி வசூல் இதிலெல்லாம் பட்டா மணியத்துக்கு வலது கையா இருந்து ராப்பகலா எவ்வளவு உழைச்சிருக்கிறேன்; எத்தனை வருஷப் பழக்கம்! இந்த உறவை எல்லாம் மனுஷன் மறந்துப் பூட்டு, நேத்துவரை தீத்துக் கட்டணும்னு எண்ணிக் கிட்டிருந்த பயலைத் தூக்கித் தலைமேலே வெச்சுக் கிட்டுத் திரியறாரே! அவன் என்ன சாதிச்சுப் புட்டான்னு டாலரைக் கழட்டி மாட்டினாரு.''
என்று எண்ணி எண்ணிக் குமுறினான். வஞ்சம் தீர்த்துக்கொள்ளவும் வழி பார்த்தான்.

வருஷந்தோறும் சந்தைப் பேட்டையில் நடை பெறும் மாட்டுச் சந்தை மிகவும் பிரசித்தமானது.

மாட்டுச் சந்தை இருபது நாள் முதல் ஒரு மாசம் வரையில்கூட நடைபெறும். இதற்காகவே வழக்க மாக ஒரு திடல் ஒதுக்கப்பட்டிருக்கும்.

சந்தை கூடுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பே, ஹோட்டல், ஷாப்புக்கள், மளிகை என்று பலதரப் பட்ட திடீர்க் கடைகள் தோன்றிவிடுவது வழக்கம். வெளியூரிலிருந்து வரும் மாட்டு வியாபாரிகள் அந்தப் பொட்டல்வெளிகளில் தங்கள் விலையுயர்ந்த மாடு களையும் கட்டிவிட்டு; அருகேயே கூரைக் குடிசை கள் அமைத்துக்கொண்டு தாங்களும் தங்கிவிடு வார்கள்.

ஒரு நாள் பகல் பொழுது பட்டாமணியம் பாவாடையுடன் சந்தைக்கு வந்திருந்தார். கூடவே

வேடிக்கை பார்க்க வசந்தியும் வந்திருந்தாள். பலதரப்பட்ட மாடுகளைப் பார்வை இட்டார்கள். சுற்றிக்கொண்டே வரும்போது துடிப்பான காளைக் கன்று ஒன்று பட்டாமணியத்தைக் கவர்ந்தது. ரேக்ளா வண்டிக்கு மிகவும் பொருத்தமான மாடு!

"ஏன் பாவாடை, கன்னுக்குட்டி எப்படியிருக்கு? பரவாயில்லையா?" என்று கேட்டார்.

"வாங்கிப்புடலாம் எசமான். சுழியெல்லாம் கூட நல்லாயிருக்கு ஆனா–"

"ஆனா என்ன?"

"விலையைத்தான் படையாச்சி ஒரே முட்டாச் சொல்றாரு. ஐந்நூறு ரூபாய் வேணுமாம். ஒரு ஜோடி மாடு விலை!"

"ஐந்நூறு ரூபாயா?" – பட்டாமணியம் வியந்தார்.

"எனக்காகக் கொடுக்க வேண்டாம்; ஐயா! மாட்டைப் பிடிச்சுப் பார்த்துக் கொடுத்தாப் போதும். நானூற்றி ஐம்பதுவரை கேட்டிருக்காங்க!" என்று படையாச்சி கூறினார்.

அந்த அழகான காளைக் கன்று வசந்தியைப் பார்த்துத் தலையைத் தலையை ஆட்டியது. மிகவும் வாஞ்சையுடன் அவள் அதன் முகத்தையும் முதுகையும் தடவிக் கொடுத்தாள். குஷியால் அது பின்னங் கால்களைத் தூக்கிக் கொண்டு ஒரு துள்ளுத் துள்ளியது.

"எஜமான் கிட்டே வரணுங்கிறான் பயல். பணத்தைப் பார்க்காதீங்க...." என்று படையாச்சி உற்சாக மூட்டினார்.

பட்டாமணியம் விரும்பியபடியே முனியனையும் அழைத்துக்கொண்டு மாலையில் பாவாடை வந்து ரேக்ளா மாட்டுக்குப் பேரம் பேசினான். முனியனுக்கும் மாடு பிடித்திருந்தது. ஆனால் ரொம்பத் துடுக்காக இருக்கும் போலிருந்தது. மேலும் வண்டியில் பூட்டி இதுவரை அதிகம் பழக்கப்படாததால், திமிர் ஏறிப்போயிருந்தது. அதனால்தான் சற்றுத் தயங்கினான்.

"எஜமானும் வசந்தியம்மாவும் இதுமேலே ஆசைப்படறாங்க..." என்று பாவாடை சற்று வற்புறுத்திக் கூறவே, "அப்படீன்னா முடிச்சுப்புடுவோம்" என்று முனியன் சம்மதித்துவிட்டான்.

ரேக்ளாவில் பூட்டி இதுவரை மூன்று தடவை கீழே தள்ளி வண்டியையும் உடைத்திருக்கிறதாம் இந்தக் காளை. அதனால் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கும்படி பாவாடையிடம் உள்ள நட்புறவினால் அந்தப் படையாச்சி ரகசியமாகக் கூறினார்.

உடனே பாவாடை, "இதைப்பற்றி எல்லாம் எஜமான்கிட்டே மூச்சுவிட்டுடாதே. அப்புறம் மாடே வாங்கமாட்டாரு. எப்பேர்ப்பட்ட சண்டி மாட்டையெல்லாம் அடக்கியிருக்கேன்; இது என்னய்யா கன்னுக்குட்டி!" என்று கூறிவிட்டான்.

மனத்துக்குள், ஏதோ திட்டமிட்டபடிதான் பாவாடை இப்படிப் பேசினான்.

புதிய மாடு பட்டாமணியத்தின் வீட்டுக்கு வந்து விட்டது. அதன் அழகைக் கண்டு வசந்தியும், சங்கரும் வியந்தார்கள். காடிகானாவில் நீண்ட காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த ரேக்ளா வண்டியை வெளியே இழுத்துக்கொண்டு வந்தான் பாவாடை. அதை நன்றாகத் துடைத்து, சக்கரத் துக்கு மசியெல்லாம் போட்டு வைத்தான். மாட்டைப் பூட்டி வெள்ளோட்டம் பார்ப்பதற்கு ஒரு நல்ல நாளும் குறித்தாயிற்று.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பள்ளி விடுமுறை நாள். பிற்பகல் மூன்று மணிக்குமேல் புதுமாடு பூட்டி ரேக்ளா அன்றுதான் ஓடப்போகிறது. பாவாடை புது மாட்டை நுகத்தடியில் பூட்டி, அதன் நெற்றியில் பொட்டுவைத்து, ''பயலே! இன்னிக்கு உன் கை வரிசையெல்லாம் காட்டறதை நான் கண்ணாரப் பார்க்கப் போறேன். ஜாக்கிரதை!'' என்று முதுகின் மேல் ஓங்கி ஒரு ஷொட்டுக் கொடுத்தான். சங்கரைப் பார்க்கப் பார்க்க - அவனுடைய சட்டையில் தொங்கிக் கொண்டிருக்கும் பட்டாமணியத்தின் தங்க டாலரைப் பார்க்கப் பார்க்க--, அவன் மனம் பற்றி எரிந்தது.

'பயலே சங்கர்.... இன்னியோட நீ ஒழிஞ்சே... நீ மட்டுமில்லே.... உன்னைத் தூக்கித் தலைமேலே வெச்சுக் கூத்தாடற எஜமானும் அவர் பொண்ணும்

குறைஞ்சது ஆறுமாசத்துக்கு ஆசுபத்திரியிலே யிருந்து வீட்டுக்கு வரக்கூடாது. ஹ ஹ ஹா!' என்று மனத்துக்குள்ளேயே கறுவிக் கொண்டான்.

பட்டாமணியம் தம்முடைய முழுக்கை ஜிப்பா வின் மேல், சரிகை அங்கவஸ்திரத்தைப் போட்டுக் கொண்டு வாசலுக்கு வந்துவிட்டார். வாசலில் போடப்பட்டிருந்த கோடைப் பந்தலில் ரேக்ளா பூட்டி தயாராக நின்று கொண்டிருந்தது. வண்டி யில் ஏறத் தயாராக வசந்தியும், சங்கரும் வந்து விட்டார்கள்.

"இருங்க, ஒரு நிமிஷம்!" என்று வேலைக்கார முனியன் உள்ளே சென்று தயாராய் வைத்திருந்த வெற்றிலைபாக்குத் தட்டைக் கொண்டு வந்து வெள் ளோட்டம் போகிற வண்டிக்குச் சூடம் காட்டினான்.

வண்டியில் எல்லோரும் ஏறிக் கொண்டு விட் டார்கள். முன்புறம் சங்கரும் வசந்தியும்; பின்பக்கம் பட்டாமணியம். இதை வேடிக்கை பார்க்க ஒரு சிறு கூட்டமும் அங்கே கூடியிருந்தது. பாவாடை, "ஹை!" என்று ஓர் அதட்டு அதட்டி விட்டுப் பாய்ந்து நுகத்தடியில் ஏறி உட்கார்ந்து கொண்டு சாட்டையால் ஒரு சொடுக்குச் சொடுக்கினான். காளைமாடு காலைவாரிக் கொண்டு பாய்ந்து கிளம்பியது.

வண்டி இப்போது சந்தடிமிக்க சந்தைப் பேட்டையை விட்டு, அகலமான கொள்ளிடம்

ரோட்டில் போய்க் கொண்டிருந்தது. இல்லை, இல்லை, பறந்து கொண்டிருந்தது!

மாடு போகிற வேகத்தைக் கண்டு பயந்த வசந்தி, ''கொஞ்சம் மெள்ள ஓட்டச் சொல்லுங் கப்பா!'' என்று கூறிக் கொண்டே இருந்தாள்.

''இப்படிப் போகிறதுக்குத்தான் ரேக்ளா வண்டியம்மா. மெதுவாப் போனல் நல்லாவா யிருக்கும்? பயப்படாதே, பாவாடையில்லையா ஓட்டறான்!'' என்று கபடு சூது இல்லாமல் சிரித்துக் கொண்டே கூறினார் அவர்.

ஆனால்—நெஞ்சில் கரவுடைய பாவாடை என்ன செய்து கொண்டிருந்தான்?

கையில் ஒளித்து வைத்திருந்த ஒரு சிறு தார்க் குச்சியால், அந்த இளங்காளையின் அடித்தொடை யில் ஓங்கி ஒரு செருகுச் செருகினான்.

அவ்வளவுதான்; வலி பொறுக்க முடியாத காளை கண்மண் தெரியாத வேகத்தில் பறந்தது. பட்டாமணியத்துக்கே இப்போது பயம் தட்டியது!

''டேய் பாவாடை!'' என்று அட்டினார்.

"ஒண்ணும் இல்லே எசமான், பயப்படாதீங்க. பூட்டாமெ கிடந்த காளை; வண்டியிலே மாட்டி னதும் குஷி தாங்கல்லே....'' என்று வஞ்சகமாய்ப்

பதிலளித்தபடியே, கையிலிருந்த தார்க்குச்சியால் மீண்டும் ஒரு குத்துக் குத்தினான்.

காளை பயங்கரமாக அலறிக்கொண்டு தாறு மாறாகத் தறிகெட்டு ஓடத் தொடங்கியது. அதன் தொடையிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்த தையும் பொருட்படுத்தாமல் பாவாடை மேலும் மாட்டை அடித்து வாலை முறுக்கினான். முன்புறம் இருந்த வசந்தி, "ஐயோ அப்பா! வண்டியை நிறுத்தச் சொல்லுங்க.... நான் இறங்கிடறேன்!" என்று பயம் தாங்காமல் அழுதாள்.

வண்டி சாலையின் இருமருங்கிலுமிருந்த புளிய மரத்தின்மீது எப்போது மோதுமோ? அட்டகாச மாகச் சிரித்தபடி பாவாடை வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான்.

சங்கருக்குத் திடீரென்று சந்தேகம் வந்து விட்டது. பாவாடை தங்களை அடியோடு கவிழ்க்கச் சூழ்ச்சி செய்கிறானா என்ன? அடுத்த நிமிஷம்....

"குபீர்!" என்று பாய்ந்த சங்கர் தன் முஷ்டியை முறுக்கிப் பாவாடையின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான்.

சற்றும் எதிர்பாராத இந்த இரும்புத் தாக்கு தலுக்கு இலக்கான பாவாடை, "ஐயோ அம்மா!" என்று தலைக்கயிற்றை விட்டு விட்டு, சாலையின் ஓரத்தில் தலைகுப்புறச் சென்று விழுந்தான்.

சங்கர் தலைக் கயிற்றை தாவிப் பிடிப்பதற்குள் காளை தறிகெட்டு ஓடிஓர் புளியமரத்தில், ''டமார்!'' என்று மோதி வண்டி நொறுங்கிக் குடை சாய்ந்தது. அதுவரை வண்டியில் இருந்தவர்கள் இப்போது தரையில், ''அம்மா....அம்பா!'' என்று முனகிக் கொண்டு கிடந்தார்கள். பூட்டியிருந்த காளை சுதந்தரமாக அவர்களை வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்தது.

# 9. மலைபோல் வந்த விபத்து




எல்லாம் ஒரு நிமிஷத் துக்குள் நடந்துவிட்டது. எவ்வளவோ உற்சாகமாகப் புறப்பட்ட ஒரு வெள்ளோட் டம் ஒரு வேதனை நிகழ்ச்சி யாகி விட்டது!

"அம்மா.... அம்மா...." அடிபட்ட வேதனை தாங்கா மல் மரத்தடியில் பட்டா மணியம் அப்படியேபடுத்துக் கிடந்தார். அவரால் எழுந் திருந்து நிற்கவே முடிய வில்லை. ஏன், புரளக் கூட முடியாமல் துடித்தார்.

சற்று தூரத்தில் வசந்தி, "உஸ்...உஸ்" என்று முழங்கையைப் பார்த் தபடு முனகிக் கொண்டே இருந்தாள். முழங்கையில் வசந்திக்குப் பலமான

சிராய்ப்பு ஏற்பட்டிருததது. மேல் தோல் வழுக்கி, ரத்தச் சிவப்பாயிருந்தது. சங்கருக்குத் தலையில் அடி. அதனால்தான் சிறிது நேரம் அப்படியே விழுந்து கிடந்தான்.

சற்றுச் சுயநினைவு திரும்பியவுடன் பட்டா மணியம் அருகில் அவன் ஓடிச் சென்றான். அவர் அவனை மெள்ளத் தடவியபடியே, "உனக்கு ஒன்று மில்லையே?" என்றார். சங்கர் வருத்தத்துடன் தலையை அசைத்தான்.

"வசந்தி எங்கே?" என்று கேட்கவும்தான் அவள் ஞாபகம் வந்தவனைப்போல் சங்கர் ஓடினான். சாலையை அடுத்த வயலில் விழுந்து கிடந்த அவளை மெள்ளப் பட்டாமணியத்தினிடம் அழைத்துக் கொண்டு வந்தான்.

"தண்ணீர் வேண்டும்....." என்று லேசாகக் கையைத் தூக்கிச் சமிக்ஞை செய்தார் பட்டா மணியம். வயதின் முதிர்ச்சியினாலும், விபத்தின் அதிர்ச்சியினாலும் அவர் பெரிதும் பாதிக்கப் பட்டிருந்தார்.

சங்கர் சுற்றுமுற்றும் பார்த்தான். தூரத்தில் வயல் வெளிக்கு மத்தியில் ஒரு குடிசை கண்ணுக்குத் தெரிந்தது. "இதோ ஒரு நொடியில் வருகிறேன்!" என்ற சங்கர் குடிசையை நோக்கி ஓடினான்.

குடிசைக்குள் நுழைந்த சர்கர் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனான். அந்தமண் குடிசையிலுள்ள

ஓர் அறையில் ஈட்டி, வேல், கம்பு, கத்தி, ஹரிக்கேன் விளக்குகள், சாராயப் புட்டிகள் எல்லாம் இருந்தன.

இதைக் கண்டதும் சங்கர் வந்த சுவடு தெரியாமல் வெளியே வந்தான். அப்போது மொட்டைக் கிணற்றங்கரையில் நின்றுகொண்டிருந்த ஒரு கிழவி அவனைப் பார்த்துவிட்டாள்.

"யாரப்பா நீ? எங்கே போயிட்டுப் போறே?" என்று ஓர் அதட்டல் போட்டாள்.

அந்தக் கிழவியை ஒரு முறை நோட்டம் விட்டபடியே அருகில் வந்த சங்கர், "ஒண்ணுமில்லே பாட்டி; கொஞ்ச தூரத்திலே நாங்க ஏறி வந்த வண்டி குடை சாஞ்சு போச்சு. அதிலே வந்த ஒருத்தருக்குக் கொஞ்சம் குடிக்கத் தண்ணி வேணும். அதுதான் அவசரமா ஓடி வந்தேன்...." என்று கூறினான்.

"இவ்வளவுதானே, இந்தா, தண்ணி; கொண்டு போய்க் கொடு..." என்று ஒரு செம்பு நிறைய நீரை மொண்டு அவனிடம் நீட்டினாள் கிழவி. நன்றியுடன் அதைப் பெற்றுக்கொண்ட சங்கர், "இப்பவேயே செம்பைத் திருப்பிக் கொண்டு வரேன் பாட்டி!" என்று தண்ணீருடன் ஓட்டம் பிடித்தான்.

சங்கர் கொண்டு வந்த தண்ணீரை வாங்கி வசந்தி தந்தையின் வாயில் சிறிது சிறிதாக

ஊற்றினாள். அப்போதுதான் அவருக்குச் சிறிது தெம்பு வந்தது. செம்பைத் திரும்பக் கொண்டு போய்க் கொடுத்துவர, சங்கர் குடிசைக்குச் சென்றான். காத்திருந்த கிழவி சங்கரைப் பிடித்துக் கொண்டாள்.

"நீங்க யாரு, எந்த ஊரு, எப்படி வண்டி குடை சாஞ்சிச்சு?" என்கிற அத்தனை கேள்விகளையும் கேட்டு விட்டாள். சங்கரும் சுருக்கமாகக் கூறினான்.

"எங்களுக்குச் சந்தைப் பேட்டை. பட்டா மணியம் புதிசா ஒரு மாடு வாங்கியிருக்காரு; அதை ரேக்ளா வண்டியிலே கட்டி, பாவாடைதான் அதை ஓட்டிக்கிட்டு வந்தார். மாடு மிரண்டு போய் மரத்திலே மோதிடுச்சு!"

"எந்தப் பாவாடை? வஸ்தாத் பாவாடையா?"

"ஆமாம், அவரேதான்! உங்களுக்கு அவரைத் தெரியுமா?" — கிழவி சிறிது யோசனையில் ஆழ்ந்தாள்.

பாவாடையின் பெயரைக் கேட்டதும் கிழவியின் முகம் மாறுதலடைந்தது.

"கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போ அவரு எங்கே?"

"வழியிலேதான் விழுந்து கிடப்பார். நான் போகணும், வாறேன். தண்ணீர் கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி!" என்று கூறி விட்டு வேகமாகச் சாலையை நோக்கி நடந்தான்.

அப்போது பட்டாமணியம், வசந்தி இவர்கள் இருந்த இடத்துக்கருகில் ஓர் இரட்டை மாட்டு வண்டி வந்து நின்று கொண்டிருந்தது. பிரமுகர் ஒருவர் பட்டாமணியத்திடம் விபத்துபற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். அவர் பட்டாமணியத்தின் நண்பர்.

சங்கரைக் கண்டதும், "யார் இந்தப் பையன்?" என்று விசாரித்தார்.

"இவன் பெயர் சங்கர். சந்தானத்தின் பள்ளிக்கூடத்திலே பதினோராவது படிக்கிறான். இவனும் எங்க கூடத்தான் வந்தான். தனக்கு ஒண்ணும் அடிபடல்லேன்னு சொல்றான் பொன்னுசாமி; பொய்யோ, நிசமோ!" என்று சொன்னார் பட்டாமணியம்.

"எப்படியும் நாம இப்போது நேரே ஆஸ்பத்திரிக்குப் போறதுதான் நல்லது. உங்களுக்கு எங்கேயோ நல்ல ஊமைக் காயம் பட்டிருக்கு..." என்ற நண்பர் பொன்னுசாமி அந்த வழியாக வந்து கொண்டிருந்த குடியானவன் கையில் ரேக்ளா வண்டியை ஒப்படைத்து, "இதைப் பட்டாமணியார் வீட்டிலே கொண்டுபோய்க் கட்டிவிடு!" என்று ஏற்பாடு செய்தார்.

பிறகு எல்லோருமாகச் சேர்ந்து கைலாகு கொடுத்துப் பட்டாமணியத்தை மெள்ள வண்டியில் ஏற்றினார்கள்.

"நேரே டவுனுக்கு - சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு ஓட்டு!" என்று பொன்னுசாமி உத்தரவு பிறப்பித்தார். சலங்கை பூட்டிய அந்த இரட்டை மாட்டு வண்டி 'ஜல்ஜல்' என்று ஓடத் தொடங்கியது.

வண்டி சிறிது தூரம் ஓடி, ஒரு வளைவு திரும்பியபோது திடீரென்று பட்டாமணியம், "பொன்னுசாமி வண்டியைக் கொஞ்சம் நிறுத்தச் சொல்லு!" என்றார்.

சாலையில் ஓரமாக—ஒரு மரத்தடியிலிருந்து முனகல் குரல் வந்தது. பாவாடைதான் அங்கே, "ஐயோ, அம்மா...." என்று அரற்றியபடி விழுந்து கிடந்தான்.

கீழே விழுந்ததில், சாலையிலிருந்த ஒரு குத்துக் கல்லில் அடிபட்டு அவனுடைய தலையிலிருந்து இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது.

"நான்தான் சொன்னேனே பொன்னுசாமி, பாவாடைதான் ரேக்ளாவை ஓட்டிக்கிட்டு வந்தான். இந்த முரட்டுக் காளை அவனையும் உதறிக் கீழே தள்ளிப்பிட்டுத்தான் இந்தப் பாடு படுத்தியிருக்கு!" என்றார் பட்டாமணியம்.

பாவம், அவருக்கு விஷயம் ஒன்றுமே தெரியாது. பாவாடையிடம் அவருக்கு அளவுக்கு மீறியதொரு இரக்கமே மேலோங்கியிருந்தது.

கீழே இறங்க முயன்ற பட்டாமணியத்தைப் பொன்னுசாமி கண்டித்தார்.

"நீ சும்மா அப்படியே உட்கார்ந்திரு. எல்லாம் நான் பார்த்துக்கறேன்!" என்று கீழே இறங்கிய அவர், பாவாடை அருகில் சென்று பார்த்தார். கூடவே சங்கரும் சென்றான்.

சங்கரைக் கண்டதும் பாவாடை பற்களை வெளியே தெரியாமல் நறநறவென்று கடித்துக் கொண்டான். சங்கருக்கு உண்மையிலேயே மனத்துக்கு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. தலையில் இவ்வளவு பெரிய காயம்பட்டு எழுந்திருக்க முடியாமல் பாவாடை கிடப்பான் என்று அவன் எதிர் பார்க்கவில்லை.

ஆழமாகப் பட்டிருந்த காயத்திலிருந்து ரத்தம் கசிவதை நிறுத்தப் பட்டாமணியத்தின் துண்டை வாங்கிப் பாவாடையின் தலையில் இறுகக் கட்டினார் பொன்னுசாமி.

"பொன்னுசாமி, என்னைக் கொண்டுபோய் வீட்டிலே விட்டுடு. என்விஷயம் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். பாவாடையை அவசரமா நீ அழைச்சுக்கிட்டு ஆஸ்பத்திரிக்குப் போ!" என்றார் பட்டாமணியம்.

உடனே பாவாடை, "அதெல்லாம் ஒண்ணும் வேண்டாமுங்க. அடிபட்ட வேகத்திலே, தலை சுத்திக் கொஞ்சம் மயக்கம் போட்டுக் கிடந்திட்டேன். அவ்வளவுதான். இதுக்காக ஆஸ்பத்திரிக்குப் போறதாவது? பேசாமே வீட்டுக்குப்போய் ஒரு பச்சிலையை அரைச்சுக் கட்டினாக் கழுதை

சரியாப் போகுது. நீங்க கவலைப்படாமெ போங்க, எஜமான்!" என்றான் சற்றுத்தெம்புடன்.

எனவே பொன்னுசாமியின் வண்டி மற்றவர்களுடன் டவுன் ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தது.

வண்டி கண் மறைந்ததும் பாவாடை மெள்ள எழுந்து வயல் மத்தியிலிருந்த கிழவியின் குடிசையை நோக்கி நடந்தான்.

ஆஸ்பத்திரியில் பட்டாமணியத்தைப் பரிசோதித்த டாக்டர். "காலில் உள் எலும்பு முறிவு ஏதாவது ஏற்பட்டிருக்கலாம். அதனால் எதற்கும் காலையில் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்துத்தான் முடிவு கூற முடியும்" என்றார். பட்டாமணியத்துக்கு, 'பெட்' ஏற்பாடு செய்து ஆஸ்பத்திரியிலேயே படுக்க வைத்தார்கள்.

மறுநாள் வந்து பார்ப்பதாக பொன்னுசாமி பட்டாமணியத்திடம் சொல்லி விடை பெற்றுக் கொண்டு வசந்தியையும் சங்கரையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு சந்தைப்பேட்டைக்கு வந்தார்.

நடந்த விவரங்களை யெல்லாம் கேட்டு முனியன் பதறிப்போனான். வசந்தியை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி முனியனுக்கு உத்தரவு பிறப்பித்துவிட்டுப் பொன்னுசாமி போனார்.

"அப்பா ஆஸ்பத்திரியில் என்ன அவதிப்படுகிறாரோ" என்று வசந்தி அடிக்கொருதரம் கூறிக் கொண்டே இருந்தாள்.

அப்போது முனியன் சட்டென்று, "ஏன் சங்கர் சாரு; நீ இனிமே பாடசாலைக்குப் போவானேன்? இங்கேயே தங்கிப்பிடேன். பாப்பாவுக்கு மனசுக்குக் கொஞ்சம் தெம்பாயிருக்கும்:" என்றான்.

உடனே வசந்தியும் "ஆமாம் சங்கர், நீ இன்றைக்கு ஹாஸ்டலுக்குப் போகவேண்டாம்!" என்று சிறு குழந்தைபோல் சிணுங்கினாள்.

"ஐயோ, போகவேண்டாமா? மானேஜர் அப்புறம் என்ன செய்வாருன்னு உங்களுக் கெல்லாம் தெரியாது" என்றான் சங்கர் படபடப்பாக. உடனே முனியன், "ஒண்ணும் செய்யமாட்டாரு. பாரேன். நான் இப்பவே சந்தானத்தையா கிட்டே போய் விஷயத்தை விளக்கிப் பிடறேன். அப்புறம் உனக் கென்ன பயம்?" என்று கூறிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் வெளியேறினான்.

வசந்தியும் சங்கரும் அதற்குமேல் என்னசெய்வதென்று புரியாமல் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். அப்போது வசந்தி தன்னையும் மீறி, "ஐயோ சங்கர், உன்னுடைய டாலர் எங்கே?" என்று அலறினாள்.

தேள் கொட்டினாற்போல், சட்டென்று கையால் நெஞ்சைத் தொட்டபடி சங்கர் குனிந்து பார்த்தான். டாலர் தொங்கிய இடத்தில் ஒரு கிழிசல்தான் சட்டையில் இருந்தது.

# 10. ஆஸ்பத்திரி வாசம்




இரவெல்லாம் உறக்கம் வராமல் சங்கர் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். புதிய இடம் என்பது ஒரு காரணமாக இருந்தாலும் அதைவிட மனத்தில் ஏற்பட்ட உளைச்சல்களே உறக்கம் வராமைக்குக் காரணம். பட்டாமணியம் அருமையும் பெருமையுமாகக் கொடுத்த விலையுயர்ந்த டாலரை இழந்தது; தன்னுடைய வெற்றியின் சின்னத்தையே இழந்துவிட்டாற்போல் சங்கருக்கு வேதனையாக இருந்தது.

பட்டாமணியத்தின் வீட்டில் படுத்துக்கொள்வதற்கு ஹாஸ்டல் மானேஜர் சந்தானத்திடம் முனியன் சென்று அனுமதி வாங்கி வந்துவிட்டான்.

நடந்த விஷயங்களைக் கேட்ட சந்தானம், "அதனால் என்ன? பட்டாமணியம் குணமாகி வீடு திரும்பும் வரை சங்கர் வசந்திக்குத் துணையாக அங்கேயே இருக்கட்டுமே!" என்று கூறிவிட்டாராம்.

மறுநாள் பொழுதுவிடிந்ததும் காலை காபி-பலகாரங்களை வசந்தியே சங்கரின் அறையில் கொண்டு வந்து வைத்தாள். அப்போது அவள் கண்ட காட்சி—

சங்கர் குளித்துவிட்டுப் பட்டையாக நெற்றியில் திருநீறு அணிந்து, அந்த அறையில் பெரிதாகத் தொங்கவிடப்பட்டிருந்த முருகன் படத்தின் முன்பு இருகரம் கூப்பி, 'கண்மூடி மெய்மறந்து நின்று கொண்டிருந்தான். அவனது மெல்லிய குரல் தேவாரப்பண் ஒன்றை இசைத்துக்கொண்டிருந்தது. வசந்தி அந்த அறைக்குள் வந்து நிற்பதையோ, மேஜைமீது ஆவி பறக்கக் காபி பலகாரங்கள் வைக்கப்பட்டிருப்பதையோ சங்கர் கவனித்ததாகவே தெரியவில்லை.

'எப்போது இந்தச் சங்கர் எழுந்திருந்தான்; இத்தனை கருக்கில் எப்படி அவனால் பச்சைத் தண்ணீரில் குளிக்க முடிந்தது?' என்பதெல்லாம் வசந்திக்கு மிக்க ஆச்சரியமாக இருந்தது. ஆம்! அப்பா இருந்தால், அவள் இன்னுங் கூடத் தூங்கிக் கொண்டிருந்திருப்பாள்!

காப்பிக்கு அடுப்பு மூட்டிக் கொண்டிருந்த கிழவியிடம் பல்பொடி பெற்று பாத்ரூம் இருக்கிற இடத்

தைக் கேட்டுத் தெரிந்து கொண்ட சங்கர், சுறு சுறுப்பாகத் தன் காலை கடன்களை முடித்துக் கொண்டு விட்டான். இதெல்லாம் கட்டுப்பாடு மிகுந்த அந்த ஹாஸ்டல் வாசத்தால் ஏற்பட்ட நல்ல பழக்கங்கள் என்பதை வசந்தி உணர்ந்து கொண் டாள்.

திரும்பிய சங்கர், தன் எதிரில் மேஜைமீது காபி பலகாரத்துடன் வசந்தி தயாராகக் காத்திருப்பது கண்டு சிரித்தான். நன்றிப் பெருக்கால் கண்கள் பளபளத்தன.

ஹாஸ்டலில் மணி அடித்ததும், தட்டைத் தூக்கிக்கொண்டு ஓடுகிற வாழ்க்கையில் அநுபவப் பட்டவன் அவன். அநாதையாக ஐயனார் கோவிலில் கிடந்த அவனைச் சிறுவயதில் பூசாரிதான் எடுத்து வளர்த்து உயிரூட்டினார். ஏதோ தெய்வாம்சம் பொருந்திய குழந்தை என்று, இறுதி நெருங்கும் வரை அவர் கண்ணும் கருத்துமாய்க் காப்பாற் றினார். விவரம் தெரிந்ததுமுதல் அவனுக்கு ஹாஸ் டல்தான் கோயில்? அதில் எல்லோரும் வழிபடுகிற சந்தானம் தான் அன்னை; தந்தை; தெய்வம் அனைத்தும் இப்படி ஒரு பொதுப்படையான—பரவ லான இயந்திர வாழ்க்கை வாழ்ந்து வந்த அவனுக்கு, வசந்தி தன்னிடம் காண்பிக்கிற விசேஷ அன்பும் பாசமும் அவன் நெஞ்சை நெகிழச் செய்தன.

பள்ளிக்கூடத்துக்கு இருவரும் சேர்ந்தே வண்டி யில் போனார்கள். மாலையிலும் ஒன்றாகவே ;வீடு

வந்தார்கள். ''அப்பாவுக்கு உடம்பு எப்படி இருக்கோ? ஆஸ்பத்திரியில் என்ன கஷ்டப்படு கிறாரோ?'' என்று வசந்தி வழி முழுவதும் கவலைப் பட்டாள்.

அப்பாவுக்கு ஒன்றும் நேராது. சாயங்காலம் தான் பொன்னுசாமி வந்து ஆஸ்பத்திரிக்கு நம்மைக் கூட்டிக்கொண்டு போறதாகச் சொல்லியிருக்கிறாரே. நீ தைரியமா இரு!'' என்று சங்கர் ஆறுதல் கூறினான்.

அன்று மாலை பொன்னுசாமி சொன்னபடியே தம்முடைய வண்டியில் பட்டாமணியம் வீட்டுக்கு வந்துவிட்டார்.

சங்கரும் வசந்தியும் ஆஸ்பத்திரிக்குப் புறப்படத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர் களுடன் முனியனும் அந்த வண்டியில் எஜமானைப் பார்த்துவர ஏறிக்கொண்டான்.

பொன்னுசாமியைக் கண்டதும் பட்டாமணியம் துக்கம் தாளாமல் வாய் விட்டே அழுதுவிட்டார். அவருடைய அழுகைக்குக் காரணம் அருகிலிருந்த எக்ஸ்ரே-படம்தான்.

காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது! எப்படியும் சிகிச்சை முடிந்து ஆஸ்பத்திரியிலிருந்து போக மூன்று நான்குவாரங்களாகுமென்று டாக்டர் கூறிவிட்டாராம்.

"அதுக்காக ஏன் பட்டாமணியம் நீங்கள் வருத்தப்படறீங்க? நீங்களே இப்படிக் கண்கலங்கினா குழந்தை வசந்திக்கு யாரு ஆறுதல் சொலுவார் கள்?" என்று பொன்னுசாமி கூறினார்.

"வசந்திக்காக — அவளை நெனைச்சுத் தான் பொன்னுசாமி நான் இப்படிக் கலங்கறேன். என் காலைப் பத்தி எனக்குக் கவலை இல்லை. தாயில்லாப் பொண்ணு. இத்தனை வயசிலே அவளை விட்டுப் பிரிஞ்க நான் ஒருநாள்கூட இருந்த தில்லே! நேத்திக்கு ராத்திரி பூரா எனக்குத் தூக்கமே வரல்லே. என் உடம்பு தான் இந்த ஆஸ்பத்திரிக் கட்டிலிலே கிடந்ததே தவிர; என் மனசு பூரா வசந்தியைப் பத்தியேதான் கவலைப் பட்டுக்கிட்டிருந்தது.

"இந்தமாதிரி சமயத்திலே நீங்க இப்படிக் கவலைப்படக்கூடாது. வசந்தி உங்களுக்கு எவ்வளவு அருமையின்னு எங்களுக்கெல்லாம் தெரியாதா? நாங்கள்ளாம் சிநேகிதங்கன்னு பின்னே எதுக்குத் தான் இருக்கோம்? குழந்தையைப் பார்த்துக்க மாட்டோமா? அவளுக்கு அங்கே தனியா இருக்கப் பிடிக்கலேன்னா என் வீட்டுக்கு வேணும்னாலும் அழைச்சுக்கிட்டுப் போயிடறேன். நம்ம பசங்க ளோடு பசங்களா அவ சந்தோசமா இருப்பா!"

பொன்னுசாமியின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பட்டாமணியம், தன் மகளுடைய விருப் பத்தைக் கேட்பது போல், வசந்தியினுடைய முகத்

தைப் பார்த்தார். வசந்தி குனிந்தபடியே ஓரக் கண்ணால் சங்கரைப் பார்த்தாள்.

'ஏன் வசந்தி, நீ பொன்னுசாமி வீட்டுக்குப் போயிடப் போறியா?' என்று கேட்காமல் கேட்பது போலிருந்தது சங்கரின் பார்வை.

"ஏம்மா வசந்தி, உன் அபிப்ராயம் என்னம்மா?" என்று பட்டாமணியம் கேட்டவுடன் தான்; எங்கோ சென்றிருந்த உணர்வு மீண்டும் திரும்பியது வசந்திக்கு.

"இல்லேப்பா, நான் நம்ம வீட்டிலேயே இருக்கேன். துணைக்குத்தான் சமையல்காரப் பாட்டி, சங்கர், முனியன் எல்லாரும் இருக்காங்களே!" என்றாள் வசந்தி.

மகளின் உள்ளக் கிடக்கையை உணர்ந்து கொண்ட பட்டாமணியம் அதற்குமேல் அவளை வற்புறுத்தவில்லை. "ஆனால் நீ இப்படி நிதம் என்னைப் பார்க்க வரவேண்டாம் வசந்தி" என்று பட்டாமணியம் கூறி முடிக்கு முன்னர் வசந்திக்கு அழுகை வந்து விட்டது.

"ஏம்பா.... என்மேலே கோபமா? நான் அவங்க வீட்டிலேயே போய் இருக்கேன், அப்பா!" என்றாள் குரல் தழுதழுக்க.

"சீ....சீ....அசடே! இன்னும் நீ பச்சைப் பிள்ளை யாகவே இருக்கியே வசந்தி! உன்மேலே எனக்கு

என்னிக்காவது கோபம் வந்திருக்கா? பரீட்சை சமயமா இருக்கே. நிதமும் வந்து போகறதுன்னா படிப்புக் கெட்டுப்போகுமே! மேலும் பொன்னு சாமிக்குத்தானே தெரிந்தரவு கொடுக்க வேண்டி யிருக்கும்னு சொன்னேன்'' என்று பட்டாமணியம் கூறி முடிக்குமுன்னர் பொன்னுசாமிக்கு உண்மை யிலே கோபம் வந்து விட்டது.

''இப்போ உன்னைச் சீக்காளின்னுகூடப் பார்க்காமெ ரெண்டு திட்டுத் திட்டலாமான்னு எனக்கு அவ்வளவு கோபம் வருது. யார்கிட்டே யாரு பேசற வார்த்தை இதெல்லாம்! நாள் தவறாமே டவுனுக்கு வந்து போற எனக்கு; வழியிலே உன் குழந்தையையும் கூட்டிக்கிட்டு வர்றது ஒரு சிரமமா? என் சம்சாரம் சீக்குலே சாகக் கிடந்தப்போ, வேளைக்குச் சோறு தண்ணிகூடச் சாப்பிடாமெ; ராப்பகல் பாராமெ எவ்வளவுதரம் நீ டவுனுக்கு அலைஞ்சிருப்பே! எத்தனை டாக்டர் களைக்கொண்டுவந்து காட்டியிருப்பே! மனசு ஒடிஞ்சுபோயிருந்த எனக்கு நீ எவ்வளவு ஆறுதல் சொல்லியிருப்பே! உன் முயற்சியில்லேன்னா என் குழந்தைகள் இந்நேரம் தாயில்லாப் பிள்ளைகளா இல்லே நின்னுக்கிட்டிருக்கும்!'' என்று உணர்ச்சி வசப்பட்டு உரிமையோடு பட்டாமணியத்தைக் கண்டித்தார். பிறகு பையில் கொண்டுவந்திருந்த ஆப்பிள், ஆரஞ்சுப் பழங்களையெல்லாம் முனியனிடம் கொடுத்தார்.

அவன் அதையெல்லாம் எஜமான் படுத்திருந்த கட்டிலின் பக்கத்தில் இருந்த ஷெல்பில் வைத்து மூடினான்.

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தேறுதலும் சமாதானமும் சொல்லிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

விஸிட்டர்கள் நோயாளிகளைப் பார்த்துவிட்டுப் போக வேண்டியதற்கான மணி அந்த ஆஸ்பத்திரி முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. பட்டாமணியம் தலையணைக்கு அடியிலிருந்த தம் பாக்கெட் வாட்ச்சைப் பார்த்தார்: மணி ஆறு.

அங்கே வந்த ஸ்டாஃப் நர்சிடம், பட்டாமணியத்தைக் கவனித்துக் கொள்ளும்படி பொன்னுசாமி கேட்டுக்கொண்டார். அப்போது அவர்களிடம் அந்த நர்ஸ் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் கூறினாள்.

மறுநாள் காலையில் ஒரு பேஷண்ட் டிஸ்சார்ஜ் ஆகிறபடியால், ஸ்பெஷல் வார்டில் பட்டாமணியத்துக்கு இடம் கிடைத்துவிடும் என்பதுதான் அது.

இது பட்டாமணியத்துக்கும் பொன்னுசாமிக்கும் சற்று ஆறுதலாயிருந்தது. ஏனெனில், ஸ்பெஷல் வார்டில்தான் கூடவே துணைக்கு ஓர் ஆள் இருக்க முடியும்; ஆஸ்பத்திரியில் உடன் தங்க அனுமதிப்பார்கள். ஆகவே இனிமேல், முனியன் பட்டாமணியத்

துடனேயே இருந்து ஆகவேண்டிய உதவிகளைச் செய்யலாம்.

"அப்படியானால், முனியன் ஏன் அநாவசியமாக அலையவேண்டும்? ராப்போழுதை இங்கேயே ஓட்டி விடட்டும். காலையில்தான்: ரூம் கிடைத்துவிடுமே. காபி பலகாரம், சாப்பாட்டுக்கு இனி கவலை இல்லை. முனியன்கூட இருந்தால் எங்களுக்கும் சமாதான மாக இருக்கும்!" என்றார் பொன்னுசாமி. பட்டாமணியத்துக்கும் அதுவே சரி என்று பட்டது.

"செலவுக்குப் பணம் அனுப்பட்டுமா?" என்று கேட்டார் பொன்னுசாமி.

பட்டாமணியம் தலைமாட்டிலிருந்த பர்ஸைத் திறந்து பார்த்துவிட்டு, "அவசரமில்லை நாளைக்கு நீ வருகிறபோது நூறு ரூபாய் கொண்டு வா!" என்றார்.

அறிவிப்பு மணியை அலட்சியம் செய்து அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்களைத் துரித கதியில் துரத்தியபடி ஆஸ்பத்திரிச் சேவகன் வந்துகொண்டிருந்தான். எல்லோரும் பட்டாமணியத்திடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள். போகும்போது, "வசந்தியை ஜாக்கிரதையாகக் கவனிச்சுக்கோ சங்கர். முனியன்கூட வீட்டில் இல்லை; ஜாக்கிரதை;" என்று சங்கரிடம் பட்டாமணியம் தனியாகக் கூறி அனுப்பினார்.

மனத்துக்குள், 'இந்தப் பாவாடைத் தடியன் என்ன ஆனானோ...பாவம், அவனைப் போய் யாருமே கவனித்திருக்க மாட்டார்கள். எங்கே எல்லாம் அடிபட்டதோ;அவன் என்ன அவஸ்த்தைப் படுகிறானோ...பொன்னுசாமியிடம் கூடச் சொல்லி யனுப்ப மறந்து விட்டது!' என்று வேதனைப்பட்டுக் கொண்டார்.

ஆனால், பட்டாமணியம் இப்படிக் காட்டுகிற அநுதாபத்துக்கெல்லாம் பாவாடை தகுதியுடை யவன் தானா? -இதே சமயத்தில் அவன் தம்மை ஒழித்துக்கட்ட என்னவெல்லாம் சதித் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறான்—என்பதெல்லாம், பாவம் பட்டாமணியத்துக்குத் தெரிந்தால்தானே!

# 11. பெட்டிக்குள் என்ன?




ஆஸ்பத்திரியிலிருந்து வருகிற வழியிலேயே சங்கர் வண்டியை ஹாஸ்டல் வாசலில் நிறுத்தச் சொன்னான். பட்டாமணியம் குணமடைந்து வீடு திரும்பச் சில வாரங்கள் ஆகும்; அவர் வரும் வரையில் சங்கருடைய இருப்பிடம் பட்டாமணியத்தின் வீடுதானே? ஆகவே தன் அறையிலுள்ள துணிமணிகளையெல்லாம் எடுத்துக் கொண்டான். மானேஜரிடமும் விவரத்தைக் கூறிவிட்டு வண்டியில் வந்து ஏறிக் கொண்டான்.

வண்டி, பட்டாமணியம் வீட்டு வாசலுக்கு வந்ததும் சங்கரும் இறங்கிக் கொண்டார்கள். பொன்னுசாமி, அவர்களுக்குத் தைரியம் கூறிவிட்டுப் போனார்.

இப்போது-பட்டாமணியத்தின் அத்தனை பெரிய வீட்டில் சங்கர், வசந்தி, சமையல்காரக் கிழவி ஆகிய மூன்று பேர்தான். அதுவரையில் அவர்களுக்குத் துணையாக இருந்த முனியனும் இப்போது இல்லை. ஆஸ்பத்திரியில் எஜமானருக்கு உதவியாக இருக்க அவன் அங்கேயே தங்கிவிட்டான்.

அந்த வருஷம், சங்கருக்கும், வசந்திக்கும் பத்தாம் வகுப்பு. இறுதிப் பரீட்சைக்கு இன்னும் இரண்டு வாரங்கள் கூட இல்லை. சங்கர் வெகுநேரம் தன்னுடைய அறையில் கண்விழித்துப் படித்துக் கொண்டிருந்தான். வசந்தியால் அவனைப் போல் அப்படித் தூக்கம் விழிக்க முடியவில்லை. அதிகம் போனால்; இரவு பத்து மணிவரை கூட அவளால் தாக்குப் பிடிக்க முடியாது. புஸ்தகத்தில் தலையைக் கவிழ்த்துக்கொண்டு தூங்கிப் போவாள். சங்கர் மாத்திரம் இரவு வெகுநேரம் வரையில் கண் விழித்துப் படிப்பான்.

பட்டாமணியத்தின் உடம்பில் வியாதி கிளை விட்டுப் படர்ந்தது. லேசாக அடிபட்ட காயங்கள் கூட ஆறுவதற்கு வெகு நாளாயிற்று. உடம்பில் சர்க்கரை வியாதி இருந்தது ஒரு காரணம். அதிக ரத்த அழுத்தம் இருந்ததற்காகவும் சிகிச்சை நடந்தது. இப்படி நாட்கள் ஓடின.

பொன்னுசாமி மாலையில் வண்டி கட்டிக் கொண்டு ஆஸ்பத்திரியில் பட்டாமணியத்தை வந்து பார்க்கத் தவறுவதில்லை. 'சங்கரையும் வசந்தியை

யும் தினசரி அழைத்துக் கொண்டு வரவேண்டாம். படிப்புக் கெட்டுப்போகும்' என்று பட்டாமணியமே கூறிவிட்டார்.

பாவாடையும் தனக்கு ஓய்வு இருக்கும் போதெல்லாம் ஆஸ்பத்திரிக்கு வந்து பட்டாமணியத்தைப் பார்க்கத் தவறுவதில்லை. ஆனால், அவன் வருகிற நேரம் அநேகமாக அவர் அருகில் முனியனோ, பொன்னுசாமியோ இல்லாத நேரமாகத்தான்–இருக்கும்.

ஒரு நாள் தன் எஜமானரைப் பார்க்க வந்த பாவாடை கூறிய செய்தி பட்டாமணியத்தையே வியப்பிலாழ்த்தி விட்டது. உயிருக்கு ஆபத்து என்றால் யாருக்குமே பயம்தானே. அதிலும் நோய் வாய்ப்பட்டிருப்பவரிடம் மரணத்தைப் பற்றிப் பேசினால் மனம் எப்படிப் பதறாமலிருக்கும்?

''பாவாடை, நீ சொல்றதெல்லாம் நெசமா?'' என்றார் பட்டாமணியம் எல்லை மீறிய பரபரப்புடன்.

''சத்தியமுங்க, எஜமான். நாம இந்தச் சந்தையிலே வாங்கின கன்றுக்குட்டி, சந்தானமய்யா வித்தது. மூணு சந்தைக்கு முன்னே, சுழிக் கோளாறுன்னு, இந்தக் கன்றுக் குட்டியையும், மாட்டையும் வித்துப்புட்டாராம். அந்தப் பொல்லாத குட்டியைத்தான் நாம் கவனிக்காமப்போய் வாங்கியிருக்கோம். அது நம்மை எந்தக் கதிக்கு உள்ளாக்கியிருக்கு பார்த்தீங்களா?''

"சந்தானம் இதைப் பத்தியெல்லாம் எங்கிட்டே ஒரு வார்த்தை கூடச் சொல்லவே இல்லையே பாவாடை?"

"அவரு எப்படீங்க எஜமான் சொல்லுவாரு? நீங்கதான் பழைய விரோதத்தை மறுத்துப்புட்டுப் பழகறீங்க!"

பட்டாமணியத்தின் உள்ளத்தில் பாவாடை சிறிது சிறிதாகச் சந்தானத்தைப்பற்றி விஷமேற்றி அவர் மனத்தையே கெடுத்துவிட்டான். ஆரம்பத்தி லிருந்த வெறுப்பு மறைந்து சந்தானத்துடன் இடைக் காலத்தில் பட்டாமணியம் சிநேகமாகப் பழகி வந்ததைப் பாவாடையின் இந்த விஷமப் பேச்சு முறித்து விட்டது. 'சந்தானம் என்றும் தமக்கு எதிரியே' என்கிற முடிவுக்குப் பட்டாமணியம் வந்து விட்டார்.

"எதற்கும் நான் குணமாகி வீடு வருகிறவரை நீ இதொன்றையும் வெளியில் காட்டிக்கொள்ள வேண்டாம்!", என்று பாவாடையிடம் கூறினாலும் பட்டாமணியத்தின் மனத்துக்கு லேசில் அமைதி ஏற்படவில்லை.

பொன்னுசாமியிடம் தம் உள்ளத்து ஆத்திரத்தை யெல்லாம் கொட்டி, நமக்கு ஏற்பட் டுள்ள இந்தக் கதிக்கு மோசக்காரச் சந்தானம் தான் காரணம் என்று ஆத்திரம் தீரக் கூறினார். ஆனால் பட்டாமணியத்தின் கூற்று பொன்னு சாமிக்கு நியாயமாகத் தோன்றவில்லை.

''சந்தானம் அப்படியெல்லாம் ஒண்ணும் அக்கிரமமாகப் போகக்கூடியவனில்லே. அவன் எப்போவோ விற்ற கன்றுக்குட்டியைத்தான் நீ ரேக்ளாவுக்கு வாங்கியிருக்கிறே என்கிற விசயமும் அவனுக்குத் தெரிய நியாயமில்லே. தெரிஞ்சிருந் தால் கூட நிச்சயம் அவன் தடுத்திருப்பான். வியாபாரத்திலே நாமதான் உஷாராயிருக்கணுமே தவிர, ஏமாந்துட்டுப் பிறத்தியார் மேலே பழியைப் போடக்கூடாது!'' என்று பொன்னுசாமி கூறி விட்டார்.

பாவாடையின் உபதேசத்தில் ஊறிப்போயி ருந்த பட்டாமணியத்துக்குப் பொன்னுசாமியின் வார்த்தைகள் காதில் ஏறவேயில்லை. ஆனாலும் சந்தானத்தைப் பற்றி அவர் அதற்குமேல் ஏதும் கூறவில்லை.

''எது எப்படி இருந்தாலும் சரி பொன்னுசாமி, அந்தக் கன்றுக்குட்டி மூஞ்சியிலே இனிமே நான் முழிக்கமாட்டேன்! சந்தானத்தோடு பண்ணையிலே கொண்டுபோய் வேணுமானாலும் கட்டிப் புடுங்கோ. நான் திரும்பிவர்ற போது என் வீட்டிலே அது நிக்கக்கூடாது!'' என்றார் பட்டாமணியம் கண்டிப்பாக.

பொன்னுசாமி ஒன்றும் பதில் பேசவில்லை. பட்டாமணியத்தின் அன்றையபேச்சு, ஒரு கண்ணி யமான மனிதர் பேசுகிற பேச்சாகவே அவருக்குத் தோன்றவில்லை. 'இவர் ஏமாந்து வாங்கின வேண்

டாத கன்றுக்குட்டியை, சந்தானத்தின் பண்ணையில் கொண்டுபோய் எதற்காக விடுவது? இதென்ன வீண் சண்டையை வலைக்கு வாங்குகிற வியாபார மாகவல்லவா இருக்கிறது?' என்று எண்ணிக் கொண்டார்.

புறப்படும்போது பட்டாமணியம், பொன்னு சாமியிடம் தம்முடைய இரும்புப் பெட்டிச் சாவி யைக் கொடுத்தார். அதை வசந்தியிடம் கொடுத்துப் பெட்டியில் மேலாகவே வைத்திருக்கும் பாங்க் புஸ்தகப் பையை வாங்கி வரும்படி கூறினார்.

பட்டாமணியத்துக்கு அப்படியொன்றும் திடீ ரென்று அவசரச் செலவு முளைத்து விடவில்லை. பாவாடை அவரிடம் ஒரு முக்கியமான காரியத்துக் காகப் பணம் கேட்டு நச்சரித்துக்கொண்டிருந்தான். அவனுக்காகத் தான் அவர் வீட்டிலிருந்து பாஸ் புஸ்தகத்தை வரவழைக்க ஏற்பாடு செய்தார்.

முனியன் மட்டும் உள்ளூற வருந்தினான். ‘‘இந்த அயோக்கியன் பாவாடையை எஜமான் நம்பு கிறாரே, அதை முன்னிட்டு அந்தப் பாவிப்பயல் ஆஸ்பத்திரிக்கு வந்துகூட அவருக்குத் தொந்தரவு கொடுத்து, மனத்தை ஏதாவது சொல்லிக் கலைத்து விட்டுப் போகிறானே!'' என்று முனியனுக்குப் பாவாடைமீது ஆத்திரம் பற்றிக் கொண்டுவந்தது. ஆனால், அவனால் என்ன செய்துவிட முடியும்? அதட்டிப் பேசினால், மறுவார்த்தை கூறாமல் கீழ்ப்படிய வேண்டிய வேலைக்காரன்தானே?

''கடவுள்தான் எஜமானைச் காப்பாற்றவேண்டும்!'' என்று எண்ணிக் கொண்டான்.

வீட்டுக்கு வந்த பொன்னுசாமியை வசந்தியும், சங்கரும் ஆவலோடு வரவேற்றார்கள். ''அப்பாவுக்கு உடம்பு எப்படி மாமா இருக்கு?'' என்று வசந்தி விசாரித்தாள்.

பொன்னுசாமி, பட்டாமணியம் கொடுத்த இரும்புப் பெட்டிச் சாவியை அவளிடம் கொடுத்தார்.

''பெட்டிக்குள்ளே, அப்பாவோடு பாங்க் புத்தகப்பை மேலாகவே இருக்காம். எடுத்துவை. நாளைக்கு நான் ஆஸ்பத்திரிக்குப் போகறபோது கொண்டுபோகணும்'' என்றார் பொன்னுசாமி.

அன்றிரவு வெகுநேரம் முயன்றும் வசந்தியால் அந்த இரும்புப் பெட்டியைத் திறக்க முடியவில்லை. அந்தச்சாவிக் கொத்திலே எது சரியான சாவி என்பதைக் கண்டுபிடிக்கவே அவளால் முடியவில்லை.

''சங்கர், நீதான் இந்தப் பெட்டியைத் திறந்து அப்பாவுடைய பாஸ் புஸ்தகத்தை எடுக்கணும். என்னால் இதைத் திறக்கவே முடியல்லே....!''என்று இரும்புப்பெட்டிச் சாவியை அவன் மேஜை மீது போட்டுவிட்டுப் படிக்கச் சென்றுவிட்டாள்.

சங்கர் அந்தச் சாவியை எடுத்துக் கொண்டு இரும்புப் பெட்டியின் முன் உட்கார்ந்தான். எப்படியோ ஒன்றை மாற்றி ஒன்று போட்டுப் பார்த்ததில் பெட்டி திறந்து கொண்டு விட்டது.

பட்டாமணியம் கூறியது போலவே, பாங்க் புஸ்தகப்பை முன்னாடியே இருந்தது. ஆனால் அந்தப் பெட்டியினுள் தெரிந்த வேலைப்பாடும்; அதன் ரகசிய அறைகளும் சங்கரை மேன்மேலும் ஆராய்ந்து பார்க்கத் தூண்டின.

யானையின் தும்பிக்கை போன்றிருந்த ஒன்றை உயர்த்தினான். அதில் ஒருசாவித்துவாரம் இருந்தது. கஜலக்ஷ்மி அமர்ந்திருந்த தாமரையைச் சற்றுத் தள்ளினான். அதிலே இன்னொரு அறைக்கான திறப்புத் தெரிந்தது.

எல்லாவற்றுக்கும் கடைசியாக; அந்த இரும்புப் பெட்டியிலிருந்த கள்ள அறையைத்திறந்து பார்த்த போது சங்கரின் உடம்பு பயத்தினால் நடுங்கிப் போய் விட்டது.

உள்ளே காணப்பட்ட பொருள்கள் அவனது பயத்தை மீண்டும் தூண்டுவனவாக இருக்கவே சங்கர் சட்டென்று அந்த அறையைச் சாத்திப் பூட்டி விட்டான்.

'பட்டாமணியம் இப்படிப் பட்டவரா?' என்கிற கேள்வியைவிட 'நல்ல வேளை! வசந்தி இதையெல்லாம் பார்க்கவில்லையே!' என்கிற ஆறுதலே பெரிதாக இருந்தது. சட்டென்று பாஸ் புஸ்தகத்தை மட்டும் எடுத்துக்கொண்டு ஒன்றுமே அறியாதவன் போல் பெட்டியைப் பூட்டிச் சாவியையும் வசந்தியிடம் ஒப்படைத்து விட்டான் சங்கர்.

அவன் மனம் பட்டாமணியத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கவே நடுங்கியது. எத்தனை பயங்கரமான—அது மட்டுமல்ல; எத்தனை வஞ்சகமான மனிதரும் கூட!

இவருடைய போலியான அன்பை உண்மையென்று நம்பி ஏமாந்து போனேனே! சீ! இத்தகைய மனிதரிடமிருந்து ஒரு தங்கப்பதக்கம் பெற்றுக் கொண்டது கூட, ஒரு அவமானப்பட வேண்டிய விஷயமே! ஆனால் வசந்தியை எண்ணிப் பார்த்த போது-அவன் மனம் தடுமாறியது.

# 12. போலீஸ் கெடுபிடி




அன்று அமாவாசை கழித்த மறுநாள். டவுனுக்குச் சென்றிருந்த சந்தானத்திற்கு நிறைய வேலையிருந்தது. அந்த வருஷம் அவரது பள்ளியில் பத்தாவது பரீட்சையில் பாசான மாணவ மாணவிகளுக்கு உடனே ஜூனியர் கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவே அவர் சென்றிருந்தார்.

பகலில் தம்முடைய காரியங்களை முடித்துக் கொண்டு சந்தானம் மாலையில் பட்டாமணியத்தைக் காண ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தார். ஆனால், உடல்நலம் தேறி வீடு திரும்பும் தருவாயிலிருந்த பட்டா

மணியம், ஏனோ சந்தானத்தினிடம் சரியாக முகம் கொடுத்துப்பேசவேயில்லை.

—'என்னை இங்கு வந்து நீ பார்க்கவில்லையென்று யார் குறைபட்டுக் கொண்டார்கள்? என்னுடைய இந்த கதிக்கே—நிலைமைக்கே—நீதானே காரணம்?' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் அது புரியாமல்.

"பட்டாமணியம், ஏன் ஒரு மாதிரியாக இருக்கீங்க? எங்கே ஒருவேளை, முன்னேமாதிரி கால் சரியா நடக்கமுடியாமப் போயிடுமோன்னு கவலைப்படறீங்களா?" என்று வேடிக்கையாகக் கேட்டார் சந்தானம். ஆனால் அப்போதிருந்த மனநிலையில் சந்தானத்தின் வேடிக்கையே பட்டாமணியத்துக்கு விபரீதமாகத் தோன்றியது.

"ரொம்பப்பேரு அப்படித்தான் ஆசைப்பட்டுக் கிட்டிருக்காங்க. அதுக்காகப் பிரார்த்தனைக் கூடப் பண்ணறாங்க. ஆனால் என் நல்ல காலம், அவங்களாலே ஒண்ணும் செஞ்சுக்க முடியல்லே!" என்றார் பட்டாமணியம் நிஷ்டூரமாக.

"அப்படி உங்களுக்கு விரோதிகள் யார் இருக்காங்க பட்டாமணியம்?" என்றார் சந்தானம் எதார்த்தமாக.

"இல்லாமே என்ன? நூறு பேர் இருக்காங்க. இதெல்லாம் வெளிக்குத் தெரியும்படியா காட்டிக்கணுமா என்ன?... உள்ளுக்குள்ளாள பூரா வேப்பங்காயா இருக்கும் வெளியே வெல்லக்கட்டி! அதைப்

புரிஞ்சுக்க முடியாமத்தான் நானும் ஒவ்வொருத்தர் கிட்டேயும் ஏமாந்துக்கிட்டே இருக்கேன். இல்லேன்னா நீங்க லாயக்கில்லைன்னு ஒதுக்கின கன்னுக்குட்டியைத் தெரியாமெ விலைகொடுத்து வாங்கி ரேக்ளாவிலே பூட்டி கால் ஒடிஞ்சு இங்கே வந்து விழுந்து கிடப்பேனா?''

பட்டாமணியத்தின் இந்தப் பேச்சைக் கேட்டதும், சந்தானத்துக்குச் சுருக்கென்று மனத்தில் தைத்தது. இத்தனை நேரம் தம்மிடம் ஏதோ விரோதத்தை மனத்தில் வைத்துக் கொண்டுதான் பட்டாமணியம் பேசியிருக்கிறார் என்பதைச் சந்தானம் நன்றாகப் புரிந்துகொண்டார். அதற்கு மேலும் அங்கே நின்றுகொண்டிருக்க அவரது மனம் இடம் கொடுக்கவில்லை.

பட்டாமணியத்துக்காக வாங்கிச் சென்றிருந்த ஆப்பிளையும் ஆரஞ்சையும் அருகிலிருந்த முனியனிடம் கொடுத்தார். ''நான் வற்றேன் பட்டாமணியம்!'' என்ற சந்தானம்; பதிலுக்குக் கூடக் காத்திராமல் வேகமாக ஆஸ்பத்திரி காம்பவுண்டைக் கடந்து சென்றுகொண்டிருந்தார்.

சந்தையில் எப்போதோ தமக்கு வேண்டாமென்று அந்தக் கன்றுக்குட்டியை அவர் விற்றதுண்டு. ஆனால் அதற்குப் பட்டாமணியம் கூறுவது போல் எவ்விதத் தீய காரணமும் இல்லை.

வண்டியில் திரும்பிக்கொண்டிருந்த சந்தானம், வழிநெடுக, தம்மைப் பற்றிப் பட்டாமணியம் கூறிய

அபாண்டத்தைப் பற்றி எண்ணி வருந்திக் கொண்டே வீடு சென்றார். வஸ்தாத் பாவாடை யின் வஞ்சகப் போதனையால்தான் பட்டாமணியம் இவ்வாறெல்லாம் பேசுகிறார் என்பது அவருக்குத் தெரியுமா என்ன?

இரவு எட்டு மணிக்குள் வசந்தி தன்னுடைய அறைக்குச் சென்று நன்றாக இழுத்துப் போர்த்துக் கொண்டு தூங்கிவிட்டாள். சமீப நாட்களாகப் பரீட்சைக்காக இரவு நீண்டநேரம் கண்விழித்துப் படித்த அலுப்பு அவளுக்கு.

ஆனால் சங்கர் மட்டும் தூக்கம் வராமல் அந்தக் கட்டிலில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந் தான். அவனுடைய தூக்கமின்மைக்கு இரண்டு காரணங்கள்.

ஒன்று—

அன்று மாலையில், விளக்கு வைக்கிற வேளை யில் தற்செயலாக அவன் கேட்க நேர்ந்த பயங்கரச் செய்தி. மற்றொன்று சமீப நாட்களாக அவன் தன்னுடனேயே சதா மூடி வைத்துக் காப்பாற்றி வரும் ஒரு ரகசியம். இரண்டுக்கும் அவனால் என்ன செய்வதென்றே புரியவில்லை.

இரவின் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு சுவரிலிருந்த கடிகாரம் 'டாண் டாண்' என்று பதினொன்றடித்தது அப்பொழுது திடீரென்று, தெருவில் 'சர் சர்' என்று சப்தம் கேட்கவே, சங்கர்

லேசாக ஜன்னலைத் திறந்து பார்ந்தான். இரண்டு ஜீப்கார்கள் ஒளியைப் பாய்ச்சிக்கொண்டு வேகமாகப் பறந்தன. பின்னால் வந்த காரின் 'ஹெட்லைட்' முன்னால் சென்ற ஜீப்பிலுள்ளவர்களைக் காட்டியது. அதில்—

சிவப்புத் தொப்பி அணிந்த நாலைந்து போலீஸ் காரர்களும், முன் ஸீட்டில் ஓர் இன்ஸ்பெக்டரும் இருப்பது தெரிந்தது.

அந்தப் 'போலீஸ்வான் இந்த வேளையில் எங்கே செல்லுகிறது?' என்று சங்கர் கணநேரம் தான் யோசித்திருப்பான்—

அதற்குள் அவன் கேட்க நேர்ந்த மாலை நேரச் சம்பாஷணை நினைவுக்கு வரவுமே, சங்கர் திடுக் கிட்டுப் போனான். அவனையும் அறியாமல் ஏதோ ஒரு சக்தி அவனை அங்கிருந்து உந்தித் தள்ளுவது போலிருந்தது.

ஏதோ ஆவேசம் வந்தவனைப்போல் சங்கர் வேகமாக புறப்பட்டான். தலையணைக்கு அடியில் ஒளித்து வைத்திருந்ததை எடுத்து டிராயருக்கும், வயிற்றுக்கும் இடையில் செருகிக்கொண்டான்.

உள்ளே எட்டிப்பார்த்தான்; வசந்தி நன்றாகத் தன்னை மறந்து தூங்கிக்கொண்டிருந்தாள். சமையற் காரக் கிழவி, அடுக்களை வாசற்படியில் தலையைச் சாய்த்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய தூக்கம் உண்மையோ பாசாங்கோ என்பதைச் சங்கரால் கண்டுகொள்ள முடியவில்லை.

மெதுவாக வாசற்கதவைத் திறந்து கொண்டு வெளியே புறப்பட்ட சங்கர், கதவை மீண்டும் மெள்ளச் சாத்திவிட்டுத் தெருவில் இறங்கி வேகமாக நடந்தான்.

சந்தானத்தின் வீட்டை நெருங்கும்போது சங்கர் எண்ணியது சரியாக இருந்தது! அந்தப் பெரிய வீட்டில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. காம்பவுண்ட் ஓரமாக ஒரு நிழல் மறைவில் நின்று சங்கர் கவனித்தான்.

போலீஸ் ஜவான்கள் சற்று ஓரமாக நின்று கொண்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர், சந்தானத்திடம் ஏதோ ஒரு புத்தகத்தை நீட்டிக் கையெழுத்து வாங்கிக் கொண்டார். பிறகு தரையில்கிடந்த பெட்டியிலிருந்து கற்றை கற்றையான நோட்டுக்களை மொத்தமாகவும், தனித்தனியாகவும் பிரித்துப் பார்த்தார்.

''இவையெல்லாம்கள்ள நோட்டுக்கள்என்பதை யாவது நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?''

''எனக்குத் தெரியாது!'' என்றார் சந்தானம்.

''எது உங்களுக்குத் தெரியாது?''

''இப்போது இங்கே நடக்கிற விஷயங்களைப் பற்றி எதுவுமே எனக்குத் தெரியாது என்றுதான் சொல்லுகிறேன்.''

"தெரியாது என்று நீங்கள் ஒரே வார்த்தையில் கூறிவிட்டால், அதைப் போலீஸ் ஏற்றுக் கொண்டு விடுமா? இது உங்களுடைய பங்களா; இது உங்களுடைய பணப்பெட்டி."

"அதையெல்லாம் நான் மறுக்கவில்லையே!"

"உங்கள் வீட்டு மாடியைச் சோதனை போட்டுத் தானே இந்தக் கள்ள நோட்டுகளை யெல்லாம் எடுத்தோம்?"

"அதையும் நான் மறுக்கவில்லை; ஆனால் இந்தக் கள்ள நோட்டுகள் எப்படி என் இருப்பிடத்துக்கு வந்தன என்பதுதான் எனக்குப் புரியவில்லை" என்றார் சந்தானம். உடனே இன்ஸ்பெக்டர், "இப்படிச் சொன்னால் எப்படி? சமூகத்தில் நீங்கள் அந்தஸ்து உள்ளவர்கள். உங்களிடம் நம்பிக்கை வைத்து, உங்கள் வார்த்தை களுக்கு மதிப்பு வைத்து நாங்கள் கேட்கிறோம்."

"நான் உங்களைக் குறை கூறவில்லை. ஆனால் என்னால் உங்களுக்கு இந்தச் சமயத்தில் வேறு எந்த விதமான பதிலையும் கூற முடியவில்லையே! பள்ளியில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப் பதற்காகச் செக் எழுதிக் கொடுத்தேன். மானேஜர் டவுனில் மாற்றிக் கொண்டுவந்த பணத்தை மாடியில் கொண்டு வைத்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்...." என்றார் சந்தானம் அமைதியாக.


“சரி, நீங்கள் இப்போது எங்களுடன் தயவு செய்து ஸ்டேஷனுக்கு வரவேண்டும். அங்கே வந்து தங்கள் வாக்குமூலத்தை அளியுங்கள்” என்றார் இன்ஸ்பெக்டர்.

அதை ஒப்புக் கொண்ட சந்தானம், வேலைக்காரனிடம் பத்திரமாயிருக்கும்படிக் கூறிவிட்டு, போலீஸ் ஜீப்பில் ஏறிக்கொண்டார்.

சந்தானத்தையும் சுமந்து கொண்டு ஜீப் பறந்தது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சங்கரின் உள்ளத்தைப் பெரும் பாரம் அழுத்துவது போலிருந்தது. இமைகளில் கண்ணீர் துளித்து நின்றது.

# 13. முரட்டுப் பிடி




இருளைக் கிழித்துக் கொண்டு சென்ற போலீஸ் ஜீப் கண்ணுக்கு மறைந்து விட்டது. ஆனால் அங்கே அப்போது அவன் கண்ட காட்சிகள், அனுபவித்த உணர்ச்சிகள், சங்கரின் மனத்திலிருந்து மறையவில்லை. எவ்வளவு பயங்கரமான விஷயம்! 'இப்படியும் இருக்குமா?' என்று எண்ணிப் பார்க்கக்கூட அவனால் முடியவில்லை.

சத்தியமே உருவானவர் சந்தானம். ஏழைகளுக்கு இரங்கும் இனிய குணம் படைத்தவர். செல்வம் சேர்ப்பதில் பேராசை இல்லாதவர் மீது; செல்வம் திரட்டக் கள்ளநோட்டைப்

பயன்படுத்தியதாகப் பழியா? இந்த உலகத்தில் நன்மை செய்பவர்கள், நல்லது நினைப்பவர்கள் இவர்கள் எல்லாம் பொல்லாப் பழிக்கு இரையாகித் துன்பப் படத்தான் நேருமோ?

அப்படியானால் பரோபகாரம் ஒரு பாவச் செயலா? 'சத்தியத்துக்கும், நேர்மைக்கும், இத் தகைய தண்டனைகள், அநுபவங்கள்தான் பரிசு என்றால்; இனிஎன்வரையில் அதற்கு நான் விரோதி. தீயவர்களைத் தீமையினாலேயே வெல்லுவேன். பெற்ற தந்தையினும் மேலாகப் போற்றிவரும் சந்தானத்தை எப்படியாவது காப்பாற்றுவது என் கடமை. இந்தக் குற்றத்தை அவர் ஒரு நாளும் செய் திருக்கமாட்டார். இதில் ஏதோ மோசடி இருக் கிறது' என்று பலவாறு எண்ணிக்கொண்டே இருந்த சங்கருக்குத் திடீரென்று அப்போதுதான் நினைப்பு வந்தது—

'ஐயோ, வீட்டுக் கதவைத் திறந்து போட்டு விட்டு இங்கே வந்து இப்படி இவ்வளவு நேரம் நின்று விட்டேனே! வசந்தி விழித்துக்கொண்டு விடமாட் டாள் என்றாலும்; நான் இப்படி வரலாமா? பட்டா மணியத்துக்குத் தெரிந்தால் என்ன நினைத்துக் கொள்வார்?' என்று எண்ணி வேகமாக வீட்டை நோக்கி நடந்தான்.

சாலையின் இருமருங்கிலும் உள்ள வயல் வெளி களிலிருந்து தவளைகள் 'தப—தப' வென்று கத்தி இரவின் நிச்சப்தத்தைக் குலைத்துக்கொண்டிருந்தன

சங்கர் வேகமாக நடந்து வந்துகொண்டிருந்தான். அவனது இடையில் அந்தப் புதிய பொருள் உறுத்திக் கொண்டிருந்தது— உள்ளத்தில் புதிய கவலை உறுத்திக் கொண்டிருப்பதைப்போல.

மரங்கள் அடர்ந்த பகுதியின் வழியாக அவன் வந்துகொண்டிருந்தான். அப்போது யாரோ தன்னைப் பின்தொடர்ந்து வருவதேபோல் தோன்றவுமே சங்கர் சட்டென்று திரும்பிப் பார்க்க எண்ணினான். ஒரு வேளை, ஏதேனும் பேய் பிசாசுகள்தான் இந்த அகால வேளையில் நடமாடுகின்றனவோ என்கிற ஒரு கிலியும் கூடவே அவன் மனத்தில் எழுந்தது. இந்த எண்ணம் தோன்றிய பிறகு— பின்புறமென்ன; அக்கம் பக்கம் பார்க்கவே அவனுக்குச் சிறிது அச்சமாக இருந்தது.

ஆயினும் அவனால் அப்படிக் கண்மூடித்தனமாக நடந்து கொண்டேயிருக்க இயலவில்லை. பேய், பிசாசுகளைப் பற்றிய கதைகளைத் தானே படித்தும்; பலர் சொல்லியும் அவன் கேள்விப் பட்டிருக்கிறான். பேயின் உருவங்களைப் பற்றியும்; அவைகளின் செய்கைகளைப் பற்றியும் பலவிதமான கதைகளை அவன் அறிந்திருந்தான். 'இப்போது அது உண்மையில் எப்படித்தான் இருக்குமென்பதைப் பார்த்து விட்டால் என்ன?' என்கிற ஓர் எண்ணம் எழுந்தது.

தன்னுடைய தைரியத்தையெல்லாம் ஒன்று திரட்டி மெல்லத் திரும்பிப் பார்க்கப் போனான். ஆனால் அதற்குள் எங்கிருந்தோ பாய்ந்து வந்த ஒரு முரட்டுக் கரம் அவன் வாயைப் பொத்தியது.

சங்கரால் கத்த முடியாமற் போனது ஆச்சரியமல்ல; அந்த முரட்டுக்கரம் வாயோடு மூக்கையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு விட்டதால்; நிமிஷ நேரத்துக்குள் மூச்சுவிடக்கூட முடியாமற் போய், திக்கு முக்காடினான். சங்கர் தன்னுடைய பலம் முழுவதையும் உபயோகித்து, தன்னைப்பற்றி வளைத்த உருவத்தை ஓர் உதறு உதறி மீண்டான். ஆனால் அதற்குள் கையில் ஒரு துணி மூட்டையுடன் எதிர்ப்பட்ட அந்தஉருவம் 'மளார்' என்று சங்கரின் முகத்தில் ஓங்கி ஓர் குத்துவிட்டது.

தூக்கி எறியப்பட்டவனைப் போல் எட்டப் போய் விழுந்த சங்கர் நிமிஷ நேரம் துடிதுடித்துப் போனான். வலியின் அதிர்வு ஒரு புறம்-ஒரு குற்றமும் செய்யாமல் சாலை வழியே சென்று கொண்டிருக்கும் தன்னைத் தாக்கிய கயவர்கள் மீது எழுந்த ஆத்திரம் ஒரு புறம்-இரண்டுமாகச் சேர்ந்து அவனை வெறிகொள்ளச் செய்திருந்தன.

தரையில் விழுந்த சங்கர் எழுந்து நிற்பதற்குள், அந்த இரு முரடர்களும் மீண்டும் சங்கரைத் தாக்கப் பாய்ந்து வரவே, சங்கர் சட்டென்று இடையிலிருந்த ரிவால்வரைக் கையில் எடுத்துக் கொண்டான். மறுகணம் —

'டுமீல்' என்று ஓர் ஓசை — மூட்டைக்காரன் இடக்கையைக் குண்டு துளைத்தது. கையிலிருந்த மூட்டை கீழே விழுந்தது. அவன் "ஐயோ! அம்மா!" என்று அலறிக்கொண்டு ஓடினான்.

துப்பாக்கியைக் கண்டதும், அரண்டுபோன மற்ற வனும் உயிர் பிழைத்தால் போதுமென்று பின்னா லேயே ஓட்டம் பிடித்தான்.

மரத்துக்குப் பின்னாலிருந்து வெளியே வந்த சங்கர் அவர்கள் விட்டுச் சென்ற மூட்டையைக் கண்டதும் அப்படியே திடுக்கிட்டுப் போனான். 'தொப்'பென்று கீழே விழுந்த வேகத்தில் மூட்டை பிரிந்து, சில நோட்டுக் கற்றைகள் வெளியே சிதறிக் கிடந்தன. உள்ளே—இன்னும் கற்றை கற்றையாகப் புத்தம் புதிய கரன்ஸி நோட்டுக்கள்!

சங்கருக்குச் சில விநாடிவரை என்ன செய்வ தென்றே புரியவில்லை. ஆனால் இத்தனை பணத்தையும் விட்டுச் சென்றவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள்; அவர்கள் போதிய பலத்துடன் திரும்பி வந்து தன்னைத் தாக்கு முன்பு இங்கிருந்து ஓடிவிட வேண்டும்; அப்படி ஓடும்போது கூடவே இந்த மூட்டையையும் எடுத்துச் செல்ல வேண்டியது தான் புத்திசாலித்தனம்; பிறகு என்ன நேர்ந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் என்கிற முடிவுக்கு வந்து விட்டான்.

அவிழ்ந்து போன துணி மூட்டையை இறுகக் கட்டி இடக்கையில் எடுத்துக்கொண்டான். பாது காப்புக்காக வலக்கையில் துப்பாக்கியையும் பிடித் துக்கொண்டே வேகமாகப் பட்டாமணியம் வீட்டை நோக்கி நடந்தான்.

'இவை நல்ல நோட்டுக்களானால், இந்தப் பொல்லாதவர்கள் கையில் இந்த வேளையில் இவை இருக்கக் காரணம் என்ன? ஒருவேளை இந்த இரண்டுபேருமே எங்கேனும் ஒரு செல்வந்தர் வீட்டில் கன்னம் வைத்துத் திருடிக் கொள்ளை யடித்துக் கொண்டு வருகிறார்களோ?-எப்படி இருந் தால் என்ன, கையில் கிட்டிய பொருளைத் தெருவில் போட்டுவிட்டுப் போகக்கூடாது. வருவது வரட்டும்' என்று பலவாறு எண்ணியபடியே வீட்டை அடைந்த சங்கருக்கு அங்கே மிகப்பெரிய ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது.

பூனைபோல் உள்ளே நுழைந்து தன்னுடைய அறைக்குள் சென்று கற்றை நோட்டு ளையும் பத்திரப் படுத்திவிட்டு; வசந்தியின் அறைக்குள் தலையை நீட்டியபோது—

அவள் படுத்திருந்த படுக்கை காலியாக இருந்தது.

# 14. கிழவியின் கோபம்




கவலையும் பயமும், பேரிருள் போல் சங்கரின் உள்ளத்தைக் கப்பிக் கொண்டு விட்டன. என்ன செய்வதென்றே புரியாத-பிரக்ஞையற்றது போன்ற நிலையில் சில விநாடிகள் கழிந்தன. சட்டென்று விழிப்புற்றவன் போல் வாசற்கதவைத் தாழிட்டான். வசந்தியை ஒவ்வோர் அறையாகத் தேடியபடி வீட்டிலுள்ள எல்லா விளக்குகளையும் போட்டுக் கொண்டே வந்தான். எங்கும் ஒரே ஒளி வெள்ளம். இருளைவிட, அந்த ஒளியில் தனிமையாக இருப்பது தான் சங்கருக்குச் சங்கடமாகத் தோன்றியது.

'எங்கேதான் அவள் போயிருப்பாள்? ஒரு வேளை

எதிர்பாராமல் விழித்துக் கொண்டவன் என்னைப் படுக்கையில் காணோமென்று கவலைப்பட்டு வெளியே...' அதற்குமேல் அவனால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

சட்டென்று சமையல்காரக் கிழவியின் ஞாபகம் வரவே, சங்கர் வேகமாகப் பின்கட்டை அடைந்தான். ஆனால் அங்கே-அடுக்களையில்-அவன் கண்ட காட்சி!

ஒரு தூணில் சமையல்காரக் கிழவி பின்கட்டு மாறாகக் கயிற்றால் கட்டப்பட்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்திலிருந்த ஒரு தூணில் வசந்தியும் கட்டப்பட்டிருந்தாள். இருவரது வாயிலும் துணியைப் பந்துபோல் உருட்டி அடைத்திருந்தார்கள்.

இதெல்லாம் எப்பொழுது நேர்ந்ததோ! எத்தனை நேரமாக இவர்கள் இப்படி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்களோ!

சங்கர் அதற்குமேல் விநாடிகூடத் தாமதிக்கவில்லை. மூச்சு முட்டி விழிகள் பிதுங்கி நின்ற வசந்தியின் வாயிலிருந்த துணியை முதலில் எடுத்தான். "சங்கர்" என்று அவள் பெரிதாக அழ ஆரம்பித்தாள்.

கிழவி வாயிலிருந்த துணி உருண்டையை அகற்ற இன்னும் சற்றுத் தாமதித்திருந்தால்கூட அவள் மூச்சுத் திணறி இறந்தே போயிருப்பாள். சங்கர் அவர்கள் இருவரையும் கட்டியிருந்த கட்டு

களை அவிழ்த்துவிட்டான். விடுதலையடைந்த கிழவி 'குய்யோ முறையோ' என்று கத்தி ஆர்ப் பாட்டம் செய்தாள்.

சங்கர் அவளைச் சமாதானப்படுத்தி, ''என்ன நடந்தது?'' என்று விஷயத்தைக் கேட்டான்.

''முதல்லே நீ வீட்டுக் கதவைத் திறந்து போட் டுட்டு எங்கே போனே? சொல்லு!'' என்று கிழவி எதிர்க் கேள்வி கேட்டாள். சங்கருக்கு எரிச்சல் வந்தது.

''அதிருக்கட்டும்; இங்கே நடந்த விஷயத் தைச் சொல்லுங்க!'' என்று ஓர் அதட்டு அதட் டினான். ஆனால் கிழவி அதை லட்சியம் செய்த வளாகவே காணவில்லை. ''அதுதான் பொண்ணு உன் பக்கத்திலேயே நிக்குதே, அதைக் கேளு. எல்லாம் விவரமாச் சொல்லும். எஜமான் வந்ததும் நீ பண்ணின காரியத்தை நான் அவருகிட்டே சொல்லத்தான் போறேன்''

சங்கருக்கு ஒரு கணம் 'திக்'கென்றது. அவனுக்கு ஆதியிலிருந்தே அவளைப் பிடிக்கவில்லை. அவளுடைய நடத்தை-செய்கைகள்–நம்பிக்கை ஊட்டுவனவாக இல்லை. இப்போது அவளுடைய பேச்சின் போக்கு வேறு சந்தேகத்தைக் கிளப்புவது போல் இருக்கவுமே, 'இங்கு நடக்கும் எல்லா விஷயங்களையும் இவள் உளவு பார்த்துக் கொண்டு தான் இருந்திருப்பாளோ? அப்படியானால் இரும்புப் பெட்டியிலிருந்து துப்பாக்கியை நான் எடுத்து வைத்

துக்கொண்டிருந்ததும் இவளுக்குத் தெரிந்திருக்குமோ?' என்று எண்ணினான். உடனே சங்கர் கோபத்தோடு இரைந்தான்.

"நல்லாச் சொல்லுங்க! எஜமான் வந்ததும் நானும் சொல்லி; முதல்லே உங்க சீட்டைக் கிழிச்சிட்டுத்தான் மறு ஜோலி பார்க்கப் போறேன். சாயங்காலம் நீங்க அந்த ரவுடிங்ககிட்டே பேசிக்கிட்டிருந்ததை யெல்லாம் கேட்டுக் கிட்டுத்தான் இருந்தேன்!" என்று வசந்தியை அழைத்துக் கொண்டு முன் அறைக்கு வந்துவிட்டான்.

அவளால் சட்டென்று அவ்வளவு வேகமாக நடந்துவரக்கூட முடியவில்லை. அப்படியே தொப்பென்று கட்டிலில் உட்கார்ந்து சுருண்டு படுத்து விட்டாள்.

"என்ன வசந்தி பண்ணறது?"—சங்கர் பரிவோடு விசாரித்தான்.

ஆனால் வசந்தி, "என்னைத் தனியா விட்டு விட்டு எங்கே சங்கர் போயிட்டே?" என்று துக்கம் ததும்பக் கேட்டாள்.

"அதைச் சொல்றேன்; இங்கே என்ன நடந்தது? நீ பாதியிலே எழுந்திருந்து என்னைத் தேடினியா? யார் இங்கே வந்து இந்தக் காரியம் பண்ணினது?

"நான் எழுந்திருக்கவே இல்லே. நல்லாத் தூங்கிக்கிட்டேதான் இருந்தேன். பாதித் தூக்

கத்திலே யாரோ என் தொடை மேலே சுளீர்னு ஓர் அறை அறைஞ்சாப்லே இருந்தது. ஏதோ சொப் பனமோன்னு பயந்து திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்தேன். எதிர்த் தரப்பிலே ரெண்டு குண்டன்கள் கையிலே கத்தியை நீட்டிக்கிட்டு நின்னுக்கிட் டிருந்தாங்க.''

''அப்புறம்...?''

''நான் பயந்துபோய், உன்னைக் கூப்பிட் டேன்.''

''உம்....''

''உடனே அதிலே ஒரு தடியன், இரும்பு மாதிரித் தன்னோடு கையாலே என் வாயைப் பொத்தி, 'சத்தம் கித்தம் போட்டியானா இதோ இதாலே ஒரே குத்து!' என்று கத்தியைக் காட்டி மிரட்டினான்.''

''அப்புறம்?''

''எனக்கு ஒரே பயமாய்ப் போயிடுத்து! கொலை செய்ய வந்திருக்காங்கோன்னு பயந்து நடுங்கினேன்.''

''ஒருத்தன் என்னைக் கட்டில்லேருந்து எழுந் திருன்னான். நான் எழுந்திருந்ததும், 'அப்பா வோட இரும்புப் பெட்டிச் சாவி எங்கே இருக்கு? கொடு'ன்னான்.

'' எங்கிட்டே இல்லே. ஆஸ்பத்திரியிலே அப்பாகிட்டே இருக்கு'ன்னு நான் முடிக்கறதுக்

குள்ளே ஓர் ஆள் கையை ஓங்கி என்னை அடிக்க வந்து விட்டான்.''

''அப்புறம்—?''

''உடனே மத்தவன், 'ஒருவேளை இது பொய் சொன்னாலும் சொல்லும். படிச்ச பொண்ணு பாத்தியா?' என்றான். 'அட சரிதான், பிடிச்சு இழுத்துக்கிட்டுவாடா! சாவி இந்த வீட்டிலே இல்லேன்னாலும் விட்டுட்டா போயிடப்போறோம்?' ன்னான். ரெண்டுபேரும் என்னைக் கரகரன்னு இழுத்துக் கிட்டுப் போய்ச் சமையல் கட்டுத் தூணிலே கட்டிப் போட்டாங்க.''

''சமையல் கிழவி?''

''அவளை முந்தியே கட்டி வெச்சிருந்தாங்க.''

''அப்போ திருடவந்தவன் வாசல் பக்கத்தாலே வல்லியா?''

''அதெப்படி வரமுடியும் சங்கர்? வாசல் கதவை நாம் தாழ்ப்பாள் போட்டுட்டுத்தானே படுத்துக்கிட்டோம். கிழவிகூட ஏதோ பயித்தியம் மாதிரி உளறினாளே...'' என்றாள் வசந்தி.

''கிழவி ஒண்ணும் உளறல்லே. அப்புறமா அதை நான் உனக்கு விவரமாகச் சொல்றேன். நீ மேலே என்ன நடந்தது சொல்லு'' என்றான்.

''ஒருத்தன் என்கிட்டே கத்தியைக் காட்டி, 'இரும்புப் பெட்டி, எந்த அறையிலே இருக்கு? சீக்கிரம் சொல்லு'ன்னு மிரட்டினான்.''

“நீ சொல்லிப்பிட்டியா?” —சங்கர் ஆச்சரியத்துடன் கேட்டான்.

“சொல்லாமெ? இல்லேன்னா என்னைக் கொன்னே போட்டிருப்பாங்களே. ரொம்ப நேரம் வரை இரும்புப் பெட்டியை எதாலே எல்லாமோ திறந்து பார்க்கிற மாதிரியும்; அடிச்சு உடைக்கிற மாதிரியும் எல்லாம் ஓசை கேட்டுக்கிட்டே இருந்தது. நீ எங்கே போயிட்டே? ஒருவேளை இவங்க உன்னைப் பார்க்கவே இல்லியான்னும் தெரியல்லே. கொள்ளையடிக்கிறவங்களோ; சத்தம் போடக்கூட முடியாமெ, வாயிலே துணியை வெச்சு அடைச்சிட்டாங்க. இன்னும் சித்தே நாழி நீ வரலேன்னா நான் செத்துக்கூடப் போயிருப்பேன்.” இதைக் கூறி முடிப்பதற்குள் வசந்திக்கு அழுகையே வந்து விட்டது.


“சரி...சரி. அதுதான் நான் வந்துட்டேனே; வா அப்பா ரூமைப் போய்ப் பார்க்கலாம்!” என்று வேகமாகப் புறப்பட்ட சங்கரைப் பின் தொடர்ந்து வசந்தியும் சென்றாள்.

அந்த அறைக்குள் அடி எடுத்து வைத்ததும் அங்கே அவர்கள் கண்ட காட்சி!

ஏதோ போர்ப் பிரதேசத்துக்குள் அடியெடுத்து வைத்தாற்போல் ஏககாலத்தில் இருவரும் நடுங்கியே போனார்கள்.

அவர்களைக் கண்டு பரிகசிப்பது போல் இரும்புப்பெட்டி தனது கோரப் பற்களை நீட்டிப் பயங்கரமாகச் சிரித்துக்கொண்டிருந்தது.

## 15. சைனா டீ!




சங்கருக்கு அதற்கு மேலும் அந்த அறைக்குள் நின்று கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. இரும்புப் பெட்டியில் ஒன்றும் மீதி வைக்காமல் கொள்ளையடித்துச் சென்றிருந்தார்கள். சாவியைக் கையில் வைத்துக் கொண்டும் திறக்க முடியாமல் கஷ்டப்பட்டதுபோக; அந்தப் பலே திருடர்கள் எப்படியோ கள்ள அறைகளைக் கூட விடாமல் அந்த இரும்புப் பெட்டியைக் குடைந்து துப்புரவாகத் துடைத்துவிட்டார்கள்.

“ஐயோ, சங்கர்! இதென்ன...!” என்று அந்தக் காட்சியைப் பார்த்து வசந்தி அலறியேவிட்டாள்.

ஆனால், ஏனோ சொற்கள் அவளது தொண்டையி லேயே உறைந்து விட்டதுபோல் வலுவில்லாமல் ஒலித்தன.

''சரி வா, போகலாம்!'' என்று சங்கர் வசந்தியை அழைத்தான்.

''எங்கே?'' என்றாள் வசந்தி.

''கிழவி என்ன பண்ணுகிறாள்னு பார்க்க லாமே.''

இருவரும் அடுக்களைக்குள் சென்றபோது, கிழவி அடுப்பை மூட்டி ஏதோ காய்ச்சிக் கொண்டி ருந்தாள்.

''என்ன பண்ணறே, பாட்டி?''—வசந்தி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''டீக்குத் தண்ணி போட்டேன். பால் காய்ச்சறேன்.''

''இந்த வேளையிலா டீ குடிப்பாங்க?''

''எமதூதன்கள் மாதிரி வந்து; தூணோடு கயிற்றாலே வரிஞ்சு கட்டிப் போட்டிருந்தாங்களே. உனக்கு மட்டும் உடம்பெல்லாம் வலிக்கலியா?''

''வலிக்காமெ என்ன பாட்டி? உசிரே போயிடு மோன்னு பயந்தே போனேன்.''

''பின்னே பேசறியே; நல்ல சைனா டீ போட்டுத் தறேன்! உடம்பு வலியெல்லாம் பறந்துடும் பாரு!''

காய்ச்சின பாலில் டீயைக் கொட்டி, அது கொதித்ததும் அப்படியே தண்ணீர் ஊற்றாமல் வடிகட்டி, சீனியைப் போட்டாள் கிழவி.

‘‘சைனா டீன்னா என்ன பாட்டி?’’ அந்த ஊரைப் பத்தியெல்லாம்கூட உனக்குத் தெரியுமா?’’

‘‘தெரியாமெ என்ன? அதுதானே இவங்களுக்குத் தாய்நாடு!’’—சங்கர் ஆத்திரத்தை உமிழ்ந்தான்.

‘‘போ சங்கர்! நம்ம பாட்டி இந்தியாவிலேயே பொறந்தவங்க, வேணும்னா கேட்டுப் பாரு.’’

‘‘நான் இவங்க உடம்பைப்பத்திப் பேசல்லே. இவங்க எண்ணம், செயல், அதைப்பத்திப் பேசறேன். உங்கப்பா கொடுக்கிற சம்பளத்தை நம்பியா கிழவியும் இவங்க கூட்டமும் இங்கே பிழைப்பு நடத்தறாங்க?’’

‘‘அப்படீன்னா?’’

‘‘உனக்கு இதெல்லாம் ஒண்ணும் புரியாது’’

‘‘கொஞ்சம் புரியும்படிதான் சொல்லேன், சங்கர்!’’ வசந்தி கெஞ்சினாள்.

‘‘ஆ...பொல்லாத விஷயத்தைக் கண்டவன் இவன்! அவனைப் போய்க் கேளு. கண்ட சோமாரிப் பசங்களை எல்லாம் நம்பி, பொண்ணையும் வீட்டையும் விட்டுட்டுப் போன உங்க அப்பனைச் சொல்லணும். வரட்டும், வெச்சிக்கிறேன். இந்தா, நீ குடி!’’

கையிலிருந்த டீயை வசந்தியிடம் நீட்டினாள் பாட்டி.

அதைப் பெற்றுக்கொண்ட வசந்தி, "சங்கருக்கு?" என்று கேட்டாள்.

"குடுக்காமெயா போயிடுவேன்? ஏதோ அறியாப்பிள்ளை—இளம் வயசு—வாய்த்துடுக்கு— பேசிட்டுப் போகுது. நாலெடத்திலே அடிபட்டா; தானே புத்தி வந்துட்டுப் போகுது!" என்று கூறியபடி இன்னொரு டீ டம்ளரைச் சங்கரிடம் நீட்டினாள்.

சங்கர் அதைப் பெற்றுக் கொண்டான். உடனே வசந்தி, "பாட்டி, நீ குடிக்கல்லியா?" என்று எதேச்சையாகக் கேட்டாள்.

"இதோ நிறைய இருக்கே—குடிக்காமெ? நீங்க சாப்பிட்டுட்டு டம்ளரைக் குடுங்க."

வசந்தி உடனே கையிலிருந்த டீயைக் குடிக்க வாயருகே கொண்டு போனாள்.

"டமார்!"

சங்கர் புறங்கையால் ஒரு தட்டு விட்டான். வசந்தி கையிலிருந்த டம்ளர் ஒருபுறமாகப் பறந்து சென்று சுவரில் முட்டிக் கீழே விழுந்தது. அதிலிருந்த சூடான தேநீர் கிழவி மீதும் தெறித்து அவள் கத்தினாள்.

வசந்தி ஒன்றுமே புரியாமல் திகைத்தபடி கேட்டாள்: "ஏன் சங்கர், இப்படிப் பண்ணினே?"

"அந்த டீயைக் குடிச்சா நீ மயக்கம் போட்டுக் கீழே விழுந்திடுவே!''

''சைனா டீ நல்லதுன்னு பாட்டிசொன்னாளே!''

"அதிலே அபினைக் கலந்திருக்கா!''

''அபினா? அது என்னது? விஷமா?''

வசந்தி கேட்டிக்கொண்டிருக்கும் போதே, ''பாவி! உன்னை இன்னிக்கு ஒழிச்சுப்புட்டுத்தான் மறு சோலி!'' என்று மூலையிலிருந்த அரிவாள் மணையை எடுத்துக்கொண்டு சங்கர் மீது பாய்ந்தாள் கிழவி. சட்டென்று சங்கர் இடது காலால் லேசாக ஒரு தட்டுவிட்டான்—மறுநிமிஷம் வேரற்ற மரம்போல் கிழவி தலைகுப்புறவிழுந்தாள். நீட்டிக்கொண்டிருந்த ஒன்றிரண்டு பற்களும் உடைந்து அவளது வாயிலிருந்து ரத்தம் பீரிட்டு வந்தது.

வலி பொறுக்க முடியாமல் 'குய்யோ, முறையோ!' என்று கத்தியபடி கிழவி தரையில் புரண்டு கொண்டிருந்தாள்.

நிமிச நேரத்துக்குள் இத்தனையும் நிகழ்ந்து விட்டது. திக்பிரமை பிடித்தாற்போல் நின்று கொண்டிருந்த வசந்தியின் கையைப் பிடித்து வெளியே அழைத்துக்கொண்டு வந்த சங்கர், கிழவி இருந்த அறையை இழுத்துத் தாளிட்டான். இருவரும் முன் ஹாலுக்கு வந்து விட்டார்கள்.

''இதெல்லாம் என்ன சங்கர்? கிழவியை ஏன் இப்படிக் கீழே தள்ளினே? அவ செத்துப் போயிட்டா?''

"அவ ஒண்ணும் சாகமாட்டா!"

"இப்போ நீ என்ன பண்ணப் போறே?"

"இந்த ஊரைவிட்டே போயிடப் போறேன்"

"எப்போ?"

"இப்பவே!"

"ஏன்?"

"........"

"ஏன் பேச மாட்டேங்கறே சங்கர்? என்னைத் தனியே விட்டுட்டா போகப்போறே?"

"நான் போனதும் கதவைத் திறந்துவிடு. கிழவி துணை இருப்பா!"

"அவதான் பொல்லாதவள்னு, நீ இப்போ சொன்னியே...."

வசந்தி வார்த்தையை முடிக்கவில்லை. சங்கர் தன்னை விட்டுத் திடீரென்று போய்விடப்போகிறான் என்பதனால் ஏற்பட்ட துக்கமும் பயமும் அவளைச் சொல்ல முடியாத துயரத்தில் ஆழ்த்தின.

"என்னாலே கிழவியோடு சேர்ந்து இருக்க முடியாது!"

வசந்தியின் குரல் கரகரத்தது.

"பரவாயில்லை. அவள் உனக்கு ஒரு கெடுதலும் செய்யமாட்டாள். நாளைக்கு உன் அப்பாவே ஆஸ்பத்திரியிலிருந்து வந்துவிடப் போகிறாரே..."

“அப்படியா? எனக்குத் தெரியாதே! யாரு சொன்னா சங்கர்? பொன்னுசாமிப் பிள்ளை வந்தாரா?”

“அவருக்கேகூடத் தெரியாது.”

“பின்னே?”

“கிழவி சொன்னா.”

“கிழவியா? அவளுக்கு எப்படித் தெரியும்?”

“இங்கே நடக்கிறது, நடக்கப்போகிறது எல்லாமே அவளுக்குத் தெரியும்.”

“அப்படின்னா........ நீ இப்போ போகிற இடம் கிழவிக்குத் தெரியுமா?”

“தெரியாது.”

“கிழவிக்குத் தெரியாதா; இல்லே உனக்கேகூடத் தெரியாதா?”

“ரெண்டு பேருக்குமே தெரியாது!” சங்கர் தன்னுடைய சூட்கேஸைக் கையில் எடுத்துக் கொண்டபடியே கூறினான். பெட்டிக்குள் வழியில் கிடைத்த நோட்டுக்களையும்; முன்னரே அவன் அடுக்கி; அதன்மீது தனது துணிமணிகளை வைத்திருந்தான். எல்லாவற்றுக்கும் அடியில் கடிதங்கள், சில அச்சு இயந்திரங்கள், பட்டாமணியத்தின் கைத்துப்பாக்கி ஆகியவை இருந்தன. ஆனால் இது பற்றிச் சங்கர் வசந்தியிடம் எதுவுமே கூறவில்லை.

“நான் வர்றேன்.”

"புறப்பட்டுட்டியா சங்கர்?"

"........"

"எனக்கு ஒரே பயமாயிருக்கு, சங்கர்!"

"பயப்படாதே. உன்னை யாரும் ஒண்ணும் செய்ய மாட்டாங்க.... சீக்கிரமே நாம் சந்திப்போம்...."

சங்கர் பதிலுக்குக்கூடக் காத்திராமல் விருட்டென்று வாசல் வழியாகப் பாய்ந்தான். இருட்டில் விடுவிடுவென்று ஸ்டேஷனை நோக்கி அவன் சென்ற திசையையே பார்த்தவண்ணம் வசந்தி வாசலில் நின்றுகொண்டிருந்தாள். உள்ளே கிழவி கதவைத் தட்டி உடைத்துக் கொண்டிருந்தாள்.

சற்றைக்கெல்லாம் அந்தச் சிறிய சந்தைப் பேட்டை ஸ்டேஷனில் நின்ற ஒரு பாசஞ்சர் வண்டி 'கூ'வென்று ஓசை எழுப்பிய வண்ணம், தள்ளாடி நகர்ந்தது.

சங்கரையும்; அவனது கனமான தோல் பெட்டியின் சுமையையும்; தாளாமல் தான்; தெற்கே செல்லும் அந்தப் பாசஞ்சர்வண்டி அப்படித் தள்ளாடித் தள்ளாடி ஊர்கிறதோ....!

# 16. "ஹலோ, இன்ஸ்பெக்டரா?"




எத்தனை நேரம் வசந்தி அப்படி, சங்கர் சென்ற திசையையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாளோ? பெயர்த்து விடுவது போல், சமையற்கட்டில் கிழவி கதவை அடித்து நொறுக்கிக் கொண்டிருந்தது அப்போதுதான் அவளுக்கு உறைத்தது. படீரென்று வாசற் கதவைச் சாத்திவிட்டு அடுக்களைக் கதவைத் திறந்தாள்.

விடுதலை அடைந்த கிழவி ஆவேசம் வந்தவளைப் போல், "அந்தச் சோனிப் பயல் எங்கே?" என்று கோபத்தோடு கேட்டாள்.

வசந்தி சிறிது நேரம்வரை வாயே திறக்கவில்லை.

உள்ளபடியே வசந்திமிகவும் பயந்து போயிருந்தாள். சங்கர் இப்படி அவளைத் திடுதிப்பென்று தனியே விட்டு விட்டுப் போய்விடுவான் என்று அவள் எதிர்பார்க்கவே யில்லை.

உரத்த குரலில் சங்கரை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டினாள் கிழவி.

உடனே வசந்தி, ''பாட்டி, சங்கர் இப்போ இங்கே இல்லே, இந்த ஊரைவிட்டே போயிட்டான். வீணா ஏன் அவனைத் திட்டறே?'' என்றாள்.

''அடி பாவிப்பெண்ணே! காரியத்தைக் கெடுத்துப்பிட்டியே!'' என்று கிழவி பதறிப்போய்த் தொண்டை கிழியக் கத்தினாள்.

வசந்தி, 'நாம் என்ன காரியத்தைக் கெடுத்து விட்டோம்? சங்கர் போனால் இவளுக்கு என்ன?' என்று ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

''உனக்கு ஒண்ணுமே புரியலையா? ஐயோ... ஐயோ! இந்தப் பட்டாமணியம் வயித்திலே ஏன் இப்படியொரு அசட்டுப் பொண்ணு பிறக்கணும்? அவருடைய சாமர்த்தியம் என்ன; கில்லாடித்தனம் என்ன? இப்போ பெத்த அப்பனுக்கே உலை வச்சிட்டியேடி பொண்ணே....''–கிழவி கண்ணீர் வடிப்பதுபோல் கூறினாள்.

''பாட்டி, நீ என்ன சொல்றேன்னே எனக்குப் புரியல்லே! ஒரே குழப்பமாக இருக்கு. எங்கப்பாவுக்கு நான் என்ன கெடுதல் பண்ணினேன்? சங்கர்

இங்கே யிருந்து போயிட்டா அதனாலே அப்பாவுக்கு என்ன கெடுதல்?"

"அசட்டுக் குழந்தே, அந்தப் பாவிப் பயல் சும்மாவா ஓடிப்போயிருக்கான்? உங்க அப்பாவோட அத்தனை ரகசியத்தையும் தெரிஞ்சுண்டு போயிருக்கான்!"

"அப்படி என்ன பாட்டி அப்பாவோட ரகசியம்?"

"ஒண்ணா, ரெண்டா? ... உங்கப்பா கிட்டே இருக்கிறது அத்தனையும் ரகசியம்தான். அத்தனையும் தப்புத்தண்டாதான். அதையெல்லாம் காப்பாத்தத்தான் என்னையும் பாவாடையையும். இன்னும் ஒரு பட்டாளத்தையும் கட்டி வெச்சு உங்க அப்பா சோறுபோடறாரு!"

"அதுதான் என்ன ரகசியம்னு கேக்கறேன்?"— வசந்தி சற்றுக் கோபமாகவே கேட்டாள்.

"உனக்கு அவசியம் தெரிஞ்சு தான் ஆகணுமா? உங்கப்பாவுக்கு நான் சொன்னது தெரிஞ்சா என் முதுகுத் தோலை உரிச்சுக் கொடியிலே உலத்திப் பிடுவார்!"

"சத்தியமா நான் உன்னைக் காட்டிக்கொடுக்க மாட்டேன் பாட்டி..." வசந்தியின் குரல் கெஞ்சுவது போலிருந்தது. கிழவி அவள் காதருகில் சென்று மெல்லக் கிசு கிசுத்தாள்; "கள்ளநோட்டு அச்சடிக்கறாரு. நாகப்பட்டிணத்திலே கப்பல் வந்ததும்

கள்ளத் தோணி ஆட்கள் போய்—கஞ்சாவும் அபினும் கிராம்பும் கடத்திக்கொண்டு வருவாங்க."

"இதெல்லாம் எதுக்குப் பாட்டி?"

"எல்லாம் பணம் சம்பாதிக்கத்தான்."

"பணம் சம்பாதிக்கவா? இப்போ அப்பாகிட்டே இருக்கிற பணமே ஏழு தலைமுறைக்குக் காணுமே?"

"ஏழு தலைமுறைக்குக் கண்டா? பதினாலு தலைமுறைக்கு வேணுங்கற ஆசை இருக்காதா? இது மட்டுமா? உன்னைப்போல அழகான பெண் களைப் பிடிச்சு வளர்த்து ஆளாக்கி, பம்பாயிலே இருக்கிற தரகுக்காரங்க கிட்டே வந்த விலைக்கு வித்துப்புடுவாங்களே!"

"ஐயோ பாட்டி, இப்படியெல்லாம்கூட அக்கி ரமம் நடக்குமா?"

"இது என்ன அக்கிரமம்? இன்னும் எத்தனை யோ நடக்குது. உங்க அம்மா செத்துப்போனதுக்கப் புறம் வந்த வினை. அவரு மனசை இந்தப் பாவிங்கதான் இப்படிக் கலைச்சுப்புட்டாங்க. இதிலே ரெண்டு போட்டி கோஷ்டிங்கவேறே. இவங்க ரெண்டு பேருக்கும் மத்தியிலே மாட்டிக்கிட்டு நான் அல்லாடறேன்."

"அப்போ இதெல்லாம் சங்கருக்குத் தெரியும்னு சொல்றியா பாட்டி?"

"நல்லாத் தெரியும், உங்க அப்பா இரும்புப் பெட்டிச் சாவியை நீ அவன்கிட்டே அடிக்கடி

திறக்கக் கொடுத்ததே தப்பு. உங்க அப்பா என்னையே நம்பமாட்டாரு.''

''அதனாலே என்ன பாட்டி? என்னாலேதிறக்க முடியல்லேன்னா நான் என்ன செய்வேன்? சங்கர் கிட்டே கொடுத்தேன். அவன் நிமிஷமாத் திறந்துட்டானே!''

''ஏன் திறக்கமாட்டான்? அவன் தான் கில்லாடிக் கெல்லாம் கில்லாடியாச்சே. இவங்க அத்தனைபேரையும் விழுங்கி ஏப்பம் விட்டுடுவானே இல்லேன்னா, சவுக்குத் தோப்புப் பங்களாக் கம்பியைப் பெயர்த்துக்கிட்டு வெளியே வரமுடியுமா; பாவாடை வஸ்தாதைத்தான் மண்ணைக் கவ்வ வைக்க முடியுமா?''

''அது மட்டுமில்லே பாட்டி, எங்க பள்ளிக்கூட ஸ்போர்ட்ஸிலேயே சங்கர் தான் பஸ்ட்! அப்பாவே அதிசயப்பட்டு மெடல் கொடுத்தார்னா பார்த்துக் கோயேன். ஆனால் அது எப்படியோ அநியாயமாத் தொலைஞ்சு போச்சு!''

''போதும், விட்டுடு, அவன் பேச்சை. என் வயித்தைப் பத்தி எரியுது. இரும்புப் பெட்டியிலே யிருந்த துப்பாக்கியைக் காணோம். இன்னும் அத்தனை தஸ்தாவேஜியையும் காணோம். எல்லாத் தையும் இந்தப் பிள்ளை அடிச்சுக்கிட்டுப் போயிட்டுது!''

''துப்பாக்கியா?'' – வசந்தி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ஆமாம்.''

''அப்பாகிட்டே ஏது? அவருக்கு எதுக்குத் துப்பாக்கி?''

'துப்பாக்கி மட்டுமா? விஷம் கூட உங்கப்பா கிட்டே இருக்கு! இப்படிக் குறுக்கு வழியிலே பணம் சம்பாதிக்கிறவங்ககிட்டே — இது மட்டுமில்லே; இன்னும் என்னல்லாமோ ஆயுதம் இருக்கும் – அகப்படறமட்டும் எதிரிகளைச் சுட்டுக் கொல்லு வாங்க. அகப்பட்டுக்கிட்டா – மானம்தான் பெரி சுன்னு நினைச்சுத் தாங்களே உசிரைப் போக்கிக்கு வாங்க!''

இதைக் கேட்டதும் வசந்தி அப்படியே அதிர்ந்தே போனாள். தன்னையுமறியாமல் அவள் விக்கி விக்கி அழுதாள். அந்த நள்ளிரவில், தாயற்ற அந்தச் சிறு பெண்ணின் விம்மல் ஒலி - தீனமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

''வசந்தி, ஏன் இப்படி அழறே! இப்போ என்ன நடந்துட்டுது? அடடே....நாளைக்கு உங்க அப்பா, 'ஜாம் ஜாம்னு' உடம்பு குணமாகி வீட்டுக்கு வந்துடப் போறாரு. அப்புறம் உனக்கு என்ன பயம்?'' என்றாள் கிழவி.

வசந்தி அழுவதை நிறுத்தி விட்டு ஒருமுறை தீர்க்கமாகக் கிழவியைப் பார்த்தாள்.

''நீதானே கொஞ்ச முன்னாடி சொன்னே, சங்கர் எல்லா ரகசியத்தையும் தெரிஞ்சுக்கிட்டு ஓடிப் போயிட்டான்னு!''

''ஆமாம்; அவன் இன்னும் ஒரு நாள் இங்கே தங்கி இருந்தா, அவனைத் தீர்த்தே கட்டியிருப் பாங்க. பாலிப் பயலுக்கு ஆயுசு கெட்டி பிழைச்சுப் போயிட்டான். இனிமே இந்தக் கூட்டம் —ரெண்டு கட்சியும்-நிம்மதியா இருக்க முடியாது. விடிஞ்சதும் விடியாததுமா நான் போயி எங்க அக்காகிட்டே இதைச் சொல்லியாகணும்!

''உனக்கு அக்காகூட இருக்காளா? அவ எங்கே இருக்கா! என்ன பண்ணறா?''

''எல்லாம் பக்கத்திலேயேதான் இருக்கா—இதே தொழில்தான் அவள் தலையிலேயும் எழுதியிருக்கு. பாவாடைதான் அவளை ஆட்டிவைக்கறான். இது கூட அந்தச் சோனிப்பயலுக்கு தெரிஞ்சு போச்சு!''

''உங்க அக்காவைச் சங்கர் பார்த்திருக்கானா?''

"ரேக்ளா கட்டிக்கிட்டுப் போயி, விழுந்த அன் னிக்கு அவ வீட்டுக்கே போய்த்தான் உங்களுக்குக் குடிக்கத் தண்ணி வாங்கி வந்திருக்கான். போனா சும்மா வந்திருப்பானா? - வீடு பூராத் துழாவிப் பார்த்திருப்பான்!"

''பார்த்தா என்ன? அங்கே அப்படி என்ன இருக்கு?''

கத்தி, கம்பு, அரிவாள், கள்ளு, சாராயம்- இன்னும் இருக்கக்கூடாதது எல்லாமே இருக்கு. எல் லாத்தையும் விட வயல்காட்டிலே அது ஒரு ரகசிய இடம். அது எப்படியோ இந்த பயலுக்குத்

தெரிஞ்சுப் போச்சு. ஆனா உங்க அப்பாவுக்காகத் தான் யோசிக்கிறான் போலிருக்கு...''

''இப்பத்தான் அவன் ஊரை விட்டே ஓடிப் போயிட்டானே?''

''ஆமாம்...இனிமே உங்கப்பாவுக்காகவும் பார்க்கமாட்டான்; எல்லா ரகசியமும் அவன் கையிலே மாட்டியாச்சு. சந்தானம் பிள்ளை மேலே கள்ளநோட்டு கேஸ் போட்டு, போலீஸை ராவோடு ராவா வரவழைச்சு அவரைப் பிடிச்சுக்கிட்டுப் போனாங்க...''

''சந்தானம் பிள்ளைமேலே கள்ள நோட்டுக் கேஸா?''

''ஆமாம், அவருமேலே எல்லாப் பழியையும் போட்டு, உள்ளே தள்ளிப்பிடணும்கறதுதான், உங்கப்பாவோட எண்ணம்; ஆனால் இப்போ அதிலேயும் மண் வுழுந்துட்டுது. உங்க அப்பாதான் மாட்டிக்கப் போறாரு!''

''எப்படி, பாட்டி?''

பாவாடையோட ஆளுங்க—சந்தானம் பிள்ளை வீட்டிலே உள்ள கள்ள நோட்டைக் கொண்டு வெச் சிட்டு, நல்ல நோட்டுகளைச் கொண்டு வந்தபோது—இந்தச் சோனிப் பயல்கிட்டே மாட்டிக்கிட்டு, அவங்க பணத்தையெல்லாம் பறி கொடுத்தாங்க! பய சுட்டுத் தள்ளிப் பிட்டானாம்!''

''எப்போ பாட்டி இதெல்லாம் நடந்தது?''

''இதெல்லாம், நேற்று நிசி வேளையிலே நடந்த கதைதான். ஆனா ஒரு வாரமாத் திட்டம் போட்டுச் செஞ்சாங்க. அத்தனையும் பாழாப் போச்சு! ஆள் எது வின்றுகிட்டே சொல்லிப்பிட்டுத் தானே போனான்!''

''அப்போ இங்கே வந்து நம்மைக் கட்டிப் போட்டவங்க?''

''வீராசாமி ஆளுங்க''

''அது யாரு பாட்டி, வீராசாமி?''

''அதெல்லாம் உனக்குத் தெரியாது. பாவாடையும், உங்க அப்பாவும் செய்யற தொழிலைத்தான் இவங்களும் செய்யறாங்க. எப்படியோ பாவாடை ஆளுங்க சந்தானம் பிள்ளையோட பணத்தோடெ வர்ற விஷயம் தெரிஞ்சு; அதெல்லாம் இங்கே நம்ம வீட்டிலே தான் கொண்டு வெச்சிருப்பாங்கன்னு உத்தேசத்திலே வீட்டிலே புகுந்து இரும்புப் பெட்டியை உடைச்சிருக்காங்க. ஆனால் இவங்களை விடச் சங்கர் பய முந்திக்கொண்டு விட்டானாம்.

இனிமே என்னவெல்லாம் நடக்கப் போகுதோ?.... பொழுது விடிஞ்சு உங்க அப்பா வந்து என்ன பாடு படுத்தப் போறாரோ—இல்லே; இந்தப் பயலுக்கு வீட்டிலே இடத்தைக் கொடுத்ததுக்காக அவரு தான் என்ன பாடுபடப் போறாரோ? எது நடந்தாலும் ஒண்ணுக்கும் கவலைப்படாதே. உங்க அப்பா வந்து என்ன கேட்டாலும் நீ எதுக்கும் வாயே திறக்காதே. எல்லாம் நான் பார்த்துக்கறேன். இப்போ

நீ உள்ளேப்போய் படுத்துக்கோ!" என்று அடுக்களை விளக்கை அணைத்தாள் கிழவி.

வசந்தி மிகுந்த துயரத்துடன் தன்னுடைய கட்டிலில் வந்து படுத்தாள். 'சங்கர் என்னை விட்டு விட்டுப் போய்விட்டானே!' என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

இதேபோல் ரெயில் பிரயாணம் செய்துகொண் டிருந்த சங்கரும் வேதனைப்பட்டான்.

'வசந்தியிடம் நம்முடைய திட்டம் எதைப் பற்றியும் கூறாமல்; இப்படித் திடீரென்று புறப்பட்டு வந்து விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதே!' என்று வருந்தினான்.

வெளியே எங்கும் கும்மிருட்டு. அந்த இருளுக்குப் பின்னணி போல்; ஓடுகிற ரெயிலின் 'கடகட' என்னும் ஓசை ஒலித்துக் கொண்டிருந்தது.

அவனால் பட்டாமணியத்தை மறக்கவே முடிய வில்லை.

பணம் படைத்த மனிதர்களிடையே இத்தனை சூதும், வாதும், பிறரை வஞ்சித்துப் பொருள் சேர்க்கும் பேராசையும் ஏன் இடம் பெறவேண்டும்? ஏழைகளும், வாயில்லாம் பூச்சிகளும், இந்த வலியவர் களிடம் - கொடிய எண்ணமுடைய இரக்கமற்ற மனிதர்களிடம் சிக்கி என்ன பாடுபடுகிறார்கள் என்று சிந்தித்தான்; இதற்குத் தன்னால் இயன்றதைச் செய்தே ஆகவேண்டுமென அவன் தீர்மானித்தான்.

அதேசமயம்—ஏழைகளுக்காக - பணபலம் படைத்த இரக்கமற்ற சமூகத் துரோகிகளுடன் மோதுவது; கல்லில் தலையை மோதிக்கொள்வது போன்றது என் பதையும் உணர்ந்திருந்தான்.

ஆயினும், அவனால் கண்ணெதிரே நடக்கும் அநீதியைக் கண்டு சகித்துக் கொண்டு கோழையாக வாழப் பிடிக்கவில்லை.

கடவுளால் தனக்கு அளிக்கப்பட்ட உடல் வலிமை, உள்ளத்து இரக்கம், சிந்தனைத்திறன், இம் மூன்றையும் கொண்டு ஒரு சில அக்கிரமக்காரர்களின் தீச்செயலையாவது ஒழித்தால்தான் அவன் மனம் ஆறும் போலிருந்தது.

புதிதாகத் தான் மேற்கொண்டுள்ள முயற்சியில் இறங்கும்போது; தனக்கு எடுத்ததுமே வெற்றியோ புகழோ கிடைத்து விடாது என்றாலும்; ஒவ்வொரு நிமிஷமும்ஆபத்தானது என்பதைச் சங்கர் உணர்ந்து கொண்டான்.

டவுனிலுள்ள ஒரு சாதாரண ஹோட்டலில்—ஆனால், பத்திரமான—ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்ட சங்கர்—அன்று பிற்பகல் ஒரு பொதுத் தொலைபேசி அறையிலிருந்து போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் செய்தான்.

இன்ஸ்பெக்டர் ரிசீவரைக் கையிலெடுத்து, ''யார் பேசுகிறது?'' என்று கேட்டதும், "நான்தான்

ஜேம்ஸ் பாண்ட் சங்கர் பேசுகிறேன்...'' என்று துணிச்சலாகப் பதிலளித்தான்.

இன்ஸ்பெக்டருக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. ''ஜேம்ஸ் பாண்ட் சங்கரா? அப்படியொரு பெயரா? எங்கே இருந்து பேசுகிறீர்கள்?''

''நான் யார் என்பதும், எங்கிருந்து பேசுகிறேன் என்பதும் அவ்வளவு முக்கியமல்ல. தாங்கள் நேற்று இரவு சந்தைப் பேட்டைக்கு வந்திருந்தீர்கள் அல்லவா?''

''ஆமாம்...''

''சந்தானம் பிள்ளையைக் கைது செய்து கொண்டு வந்தீர்கள் அல்லவா?''

''ஆமாம். அவர்மீது கள்ள நோட்டு வழக்கு ஒன்று பதிவாகி இருக்கிறது. அது சரி, தாங்கள் யார்?''

''நான் அவருக்கு மிகவும் வேண்டியவன்.''

''உங்களுக்கு இப்போது என்ன தகவல் வேண்டும்?''

''எனக்கு ஒருதகவலும் வேண்டாம். உங்களுக்குச் சில தகவல்கள் கொடுக்கலாம் என்றுதான் கூப்பிட்டேன்.''

இதைக் கேட்டதும் இன்ஸ்பெக்டர் தம்முடைய நாற்காலியிலிருந்து சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

''எங்களுக்குத் தகவலா? உபயோக முள்ளதாக இருந்தால் உங்களுக்கு நான் மிகவும் கடமைபட்டவனாக இருப்பேன். தாங்கள் விரும்பினால் இங்கேயே நேரில் வரலாம். எது பற்றிய விஷயமோ?''

''சந்தானம் பிள்ளையை நீங்கள் கைதுசெய்தது ஒரு தவறான - அக்கிரமமான செயல்'' என்றான் சங்கர்.

உடனே இன்ஸ்பெக்டர் சற்று உணர்ச்சி வசப்பட்டு; ''நீங்கள் எங்கள் இலக்காகாவைப் பற்றி, ஒரு டெலிபோன் மூலம் அவசரப்பட்டு இப்படிக் குற்றம் கூறுவது சரியல்ல. நாங்கள் தீரவிசாரியாமல் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. கள்ள நோட்டுக்கள் சந்தானம் பிள்ளையின் வீட்டிலிருந்து கைப்பற்றப் பட்டன. அதுவும் அவர் கண்ணெதிரிலே நாங்கள் நடத்திய சோதனையின் மூலம் உறுதியான விஷயம்.

''இதற்கு சந்தானம் பிள்ளையே மறுப்புக் கூற வில்லை. அப்படியிருக்கும்போது; நீங்கள் எங்கள் இலாகாவைக் குறை கூறி இப்படியெல்லாம் பேசுவது சட்டப்படிக் குற்றமாகும்,'' என்றார்.

உடனே சங்கர், ''இன்ஸ்பெக்டர் சார், கோபப் படாதீர்கள். சந்தானம் பிள்ளை தன் ,வீட்டிலிருந்து கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப் பட்டதைத்தான் மறுக்கவே இல்லையே தவிர; அந்தக் கள்ள

நோட்டுக்களை அவரே தன்வீட்டில் வைத்திருந்த தாக ஒப்புக் கொள்ளவில்லையல்லவா....''

உடனே இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு, ''அப்படி, யார்தான் உடனே குற்றத்தை ஒப்புக் கொண்டிருக் கிறார்கள்; எல்லாம் விசாரணை நடத்தினால் உண்மை வெளி வரும்.''

''நீங்கள் நடத்துகிற விசாரணையின் மூலம் உண்மை வெளிவராது. சந்தானம் பிள்ளை ஒரு கண்ணியமான மனிதர். தன் வாழ் நாளில் ஒரு தவறு கூடச் செய்யாதவர். அப்படிப் பட்டவருக்கு அந்தக் கள்ள நோட்டுக்கள் தன்னுடைய வீட்டிற்குள் எப்படி வந்து சேர்ந்தன; யார் இந்த வேலையைச் செய்திருப்பார்கள் என்று தெரியாத நிலையில்—அவர் மௌனமாக உங்களுடைய அழைப்பிற்கு இணங்கி உடன் வருவதைத் தவிர; அவரால் வேறு என்ன செய்ய முடியும்!

''நான் சொல்லுகிறேன் — நீங்கள் உங்கள் கடமையை மேலெழுந்த வாரியாகச் செய்து கொண்டு போயிருக்கிறீர்கள். எதிலும் சந்தேகப் பட்டுத் துருவிப் பார்க்கிற உங்களுடைய இலாகா விற்கே உரிய செயல் முறையை—இந்த வழக்கில் தாங்கள் கையாளத் தவறி விட்டீர்கள்.''

''கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப் பட்டதே உங்களுக்குக் கிடைத்த ஒரு வெற்றி போல எண்ணி

விட்டீர்கள். அதனால்; தங்களுக்கு இத்தகவலை அளித்தவர்கள் மீது சந்தேகம் எழவில்லை.

“அப்படி சந்தேகம் எழாத காரணத்தினால் உண்மைக் குற்றவாளியை வெளியே விட்டு விட்டு; நிரபராதியைக் கைது செய்து வைத்திருக்கிறீர்கள்” என்றான் சங்கர்.

இதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் பரபரப்புடன் “உண்மையாகவா?” என்றார் உணர்ச்சி பொங்க.

“சத்தியமாக” என்றான் சங்கர்.

உடனே இன்ஸ்பெக்டர், “இத்தனை விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிற நீங்கள்; ஏன் நேரிலே இங்கு வந்து உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதில் உதவக் கூடாது?” என்று கேட்டார்.

உடனே சங்கர், “கண்டிப்பாக உதவுகிறேன். ஆனால். இந்த ஒரு கள்ள நோட்டு விவகாரத்தில் மட்டுமல்ல; இன்னும்-

“சமூகத்தின் நல்வாழ்வுக்கு கேடு விளைவிக்கும் தீயவர்களை வேட்டையாடுவதற்கு உங்களோடு நான் முழு மனத்துடன் ஒத்துழைக்க விரும்புகிறேன். ஆனால் என்னை நீங்கள் நேரில் சந்திக்க அவசரப்பட வேண்டாம். ஆலய விக்கிரகத் திருடர்கள்; கள்ள நோட்டுக்காரர்கள்; சாராயப்

பதுக்கல்காரர்கள் இன்னும் பலதரப்பட்ட பேர் வழிகள் என்னிடம் சிக்கியுள்ளார்கள்.

“முதலாவதாக நீங்கள், சந்தானம்பிள்ளை குற்றவாளி அல்ல என்பதை நம்பி அவரைக் கௌரவமாக நடத்துங்கள். நீங்கள இப்போதே தக்க படையுடன் நான் கூறும் விலாசத்துக்குப் புறப்பட்டுச் செல்லுங்கள். அங்கு கள்ள நோட்டு மலையைக் காண்பீர்கள். அவர்கள் தான் வேண்டுமென்றே போலி நோட்டுகளைச் சந்தானம் பிள்ளை வீட்டில் வைத்துவிட்டு தாங்கள் தப்புவதற்காக—உங்களிடம் அவரைக் காட்டிவிட்டார்கள். உண்மைக் குற்றவாளியைப் பிடிக்க உடனே புறப்படுங்கள். இரவு நடுநிசிக்கு அந்த ரகசியப் பங்களாவை முற்றுகை இடுங்கள். வெற்றிக்குப் பின் உங்களைச் சந்திக்கிறேன். வணக்கம்!”

போனில் வந்த செய்தியை இன்ஸ்பெக்டரால் அலட்சியப் படுத்த இயலவில்லை. இளம் பையன் ஒருவனுடைய குரல் போல் இருந்தாலும்; அந்தக் குரலில் உண்மையின் சாயை இருப்பது போல அவருக்குப் பட்டது. அதன் பிறகு—

போலீஸ் சுறுசுறுப்பாகச் சில நடவடிக்கைகளை மேற் காண்டது. சங்கர் தன் இரும்புப் பெட்டி ரகசியங்களை அறிந்து சென்றதிலிருந்தே பட்டா மணியம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தார்.

சங்கர் தலைமறைவான பிறகு சில புதிய சம்பவங்கள் சங்கிலித் தொடர்போல் நடந்தன. பட்டாமணியம் ஆஸ்பத்திரியிலிருந்து விசேஷ அனுமதி பெற்றுக்கொண்டு வீடு திரும்பியும் அவர் முயற்சிகள் பலிக்காமல் போயின. அவர் போலீசாரிடம் சிக்காமல் இருக்க கூட்டாளிகளான பாவாடை முதலானோரைக் காவு கொடுத்து விட்டுப் பங்களாவுக்குள்ளேயே பதுங்கிக்கொண்டார்.

சந்தானம் பிள்ளை ஜாமீனில் வந்து சந்தைப் பேட்டையில் தம் அறப்பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். சங்கரை உயிரோடு இழந்து விட்டதாக எண்ணி அவர் உள்ளூற வருந்தினார்.

வசந்தி—சங்கரைக் காணாமல் சில நாள் வருந்தினாலும் ஜேம்ஸ் பாண்ட் சங்கர் எங்கும் எப்போதும் ஆபத்தில்லாமல் இருப்பான் என்று அவள் எண்ணியது போலவே போலீசுடன் ஒத்துழைத்து விட்டு தக்க சமயத்தில் வந்து சேர்ந்தான்.

இதற்குள் விசாரணை முடிந்து கடத்தல்; கள்ள நோட்டு அச்சடித்தல்; விக்ரகத் திருட்டு; கள்ளச்சாராயம் போன்ற பல குற்றங்கள் புரிந்தோரிடம் தொடர்பு கொண்டிருந்ததற்காக பட்டாமணியத்திற்கு ஆறுமாத சிறை தண்டனை கிடைத்தது.''

பாவாடைக் கும்பலுக்கு தலா ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை கிடைத்தன.

சங்கரின் கண்களில் படவே பட்டாமணியத்துக்கு வெட்கமாயிருந்தது. ஆயினும்; மனதார அவனிடம் மன்னிப்பு வேண்டிக் கொண்டு-ரேக்ளா சவாரியின் போது சங்கரிடமுருந்து பாவாடை பறித்து வைத் திருந்த தங்க டாலரை மீண்டும் அவன் சட்டையில் செருகினார்.

கண்கலங்கிய பட்டாமணியத்தை அருகிலிருந்த சந்தானம் பிள்ளை சமாதானப்படுத்தினார்.

பட்டாமணியம்; தான் திரும்பி வரும் வரை, சங்கரைப் போலவே தன் மகள் வசந்தியையும் பாடசாலையில் தன்னுடன் வைத்துக் கொண்டு காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். சந்தானம் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு பட்டாமணியத்தை நிம்மதியாகச் சென்று வரும்படிக் கூறினார்.

சங்கரும், வசந்தியும் அந்த ஆண்டு தேர்வு வரை ஒரே பாடசாலையில் இருந்து ஒரே பள்ளியில் படித்து தேறினார்கள்.

சங்கர் இப்போது பட்டணத்தில் சந்தானத்தின் உதவிப்பெற்றுப் படித்து வருகிறான். படிப்புச் செலவு; ஹாஸ்டல் செலவு எல்லாம் அவருடையது

தான். அவ்வப்போது அவனுக்குப் பணம் தேவைப் பட்டால் பட்டாமணியம் தாராளமாக அனுப்புவார். பட்டாமணியத்தின் இந்த மனமாற்றம் சந்தானத் திற்கு மகிழ்ச்சியாகி இருந்தது. சங்கரை எண்ணும் போதெல்லாம் அவர் உள்ளம் பூரிக்கும். காரணம் அவரைக் கௌரவமாக மீட்டு உதவியதற்காக மட்டுமல்ல; அவன் படிப்பில் நிகரற்ற சூரனாக இருந்தான். கையிலே அசாதாரண வலு இருந்ததை போல உள்ளத்திலே இரக்கமும், கருணையும், உறுதியும் இருந்தன. இப்படிப்பட்ட இளைஞர்கள் தானே நாட்டுக்கு இப்போது தேவை என்பது அவரது எண்ணம்.

முற்றும்

# எங்கள் வெளியீடுகள்

அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா
—கே. பி. நீலமணி

உப்புச் செல்வம்
—கலைமுகிலன்

புகையும் புற்றுநோயும்
—வி. என். சாமி

பாரதியாரின் புதிய ஆத்திசூடி
—லலிதா பரமேஸ்வரன்

காப்டன் குமார்
—நீலமணி

ஜேம்ஸ்பாண்ட் சங்கர்
—நீலமணி

கடலைத் தேடாத நதி
—ஜானகி நீலமணி

காற்று சொன்ன கதைகள் (அச்சில்)
(சிறுவர் கதைகள்) —நீலமணி

கப்பு கான்வென்டுக்குப் போகிறாள் (அச்சில்)
(சிறு கதைத் தொகுதி) —நீலமணி



## நீலமணி

நூற்றுக்கணக்கான சிறுகதைகளும், பல நாவல்களும், வானொலி நாடகங்களும் எழுதியுள்ள திரு. நீலமணி குழந்தைகளுக்காகப் பல நூல்கள் எழுதிப் புகழ் பெற்றவர்.

இவர் எழுதிய, ''அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா'' என்னும் வாழ்க்கை வரலாற்று நூலுக்கு 1978-ல் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய இலக்கியப் போட்டியில் 'ஏ.வி.எம்.'மின் அறக்கட்டளையின் முதற்பரிசான தங்கப்பதக்கத்தையும்; ''கவிமணியின் கதை'' என்னும் நூலுக்காக 1982-ல் தமிழக அரசின் பரிசையும்; 1983-ல் எழுதிய ''தென்னைமரத் தீவினிலே'' என்னும் சிறுவர் நூலுக்காக ''ஏ.வி.எம்.''மின் வெள்ளிப் பதக்கத்தையும் பரிசாக பெற்றவர்.

சிறுவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெறும் இவரது இந்த அருமையான நாவலை எங்கள் பதிப்பகத்தின்மூலம் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

GAYATHRI

காயத்ரி
பப்ளிகேஷன்
26-பி, வேதாசல கார்டன்ஸ்,
மந்தைவெளி, சென்னை-600 028.

Wrapper Printed at Eskay Art Printers, Madras-5 Phone : 841478